மலர் : 48

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 48

# சத்தியத்தின் குரல்

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

**Guest Editors**

Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

**Staff Writers**

Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant

**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from

**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# ஏன் என்னைக் கைவிட்டீர் ?

## Why Have you Forsaken me ?

## Louis Rushmore

மத்தேயு 27 : 46 மற்றும் மாற்கு 15:34 வசனங்களில் இயேசு மரிப்பதற்கு முன்பாக சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது பேசிய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மாற்கு சுவிசேஷப் புத்தகத்தில் இயேசு பேசின வார்த்தைகள் இவ்விதமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. “ ஒன்பதாம் மணி நேரத்திலே இயேசு ; எலோயீ ! எலோயீ ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக்கூப்பிட்டார் ; அதற்கு : **என் தேவனே ! என் தேவனே ! ஏன் என்னை கைவிட்டீர்** என்று அர்த்தமாம்”(மாற்கு 15:34). இவ்வார்த்தைகள் சங்கீதம் 22:1 ன் மேற்கோளாகும். “என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் ? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர் ? தாவீதின் சங்கீதம் 22 நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றி பேசுகின்ற மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசன வசனப் பகுதியாகும்.

இங்கே நமக்கு எழும் கேள்வி “ஏன் இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டு என் தேவனே ! என் தேவனே ! என்னை ஏன் கைவிட்டீர்? என்று சத்தமாகக் கூப்பிட்டார்? இயேசுவின் வார்த்தைகள் என்ன பொருள் கொடுக்கின்றன? எந்த ரீதியில் தேவன் கிறிஸ்துவைக் கைவிட்டார்? இக்கேள்விகளுக்கெல்லாம் வேதவாக்கியங்கள் நமக்கு குறிப்பாகப் பதிலளிக்கவில்லை. இதன் காரணமாகவே, வேத வல்லுநர்கள் குழப்பமடைந்து, வேறுபட்ட விளக்கங்களைக் கொடுக்கிறார்கள் . இதுபோன்று கடினமான சில வேத வசனப் பகுதி என்ன பொருள் கொடுக்கிறது என்று உறுதியான நம்பிக்கையுடன் சொல்வதை விட, அவ்வசனப்பகுதி என்ன பொருள் கொடுப்பதில்லை என்று சொல்வது எளிதானதாகும். அப்படி ஒன்று தான் நம் ஆண்டவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது அவருடைய மனித பக்கத்திலிருந்து அவருடைய தெய்வீக பக்கம் பிரிந்து சென்றது என்னும் தவறான விளக்கம். அதற்குப் பதிலாக, வேதாகம ஆசிரியர்கள் நம் ஆண்டவர் சிலுவையிலிருந்து என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர் என்று சொன்ன வார்த்தைகளுக்கான நம்பத்தகுந்த மற்றும் வேதாகமத்திற்கு பொருத்தமான விளக்கங்களை கீழ்க் கண்டவாறு பார்ப்போம்.

★ இயேசு கிறிஸ்து சர்வலோகத்தின் பாவத்தை சுமக்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டபடியால், பிதாவாகிய தேவன் தமது குமாரனாகிய இயேசுவை சில மணி நேரங்கள் கைவிடவேண்டியதாயிற்று [ரோமர் 3:25 – 26].

★ இயேசு கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டார் [II கொரிந்தியர் 5:21]

★ பிதாவாகிய தேவன் ஒட்டுமொத்த உலகத்தின் பாவங்களையும், அக் கிரமங்களையும் குமாரனாகிய இயேசு மீது சுமத்தினபடியால் அவர் எல் லாப் பாவங்களையும் சுமந்து கொண்டிருந்தார். அந்தப் பாரத்தில் இயே சுவைத் தேற்றுவதற்கு யாருமில்லை; தேவனுடைய முகத்தின் ஒளி யும் சிலமணி நேரம் கிறிஸ்துவுக்கு மறைக்கப்பட்டது.

★ இயேசு கிறிஸ்து எவ்வித பாவமும் செய்யவில்லை. ஆயினும், இயேசு கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டார் [II கொரிந்தியர் 5:21] பாவம் செய்யாத போதிலும் பாவியாக அவர் தேவனால் எண்ணப்பட்டது மனரீதியாக அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. அவரு டைய பாடுகளின் ஆழத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

★ தேவனால் பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாதபடியா லும், உலகத்தின் ஒட்டு மொத்த பாவத்தையும் குமாரனாகிய இயேசு வின் மீது சுமத்தினபடியினாலும், சிலமணி நேரங்கள் தேவன் இயே சுவை கைவிட்டுவிட்டார் [ஏசாயா 59:1 ;2] இதைக் குறித்து பவுல் " நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவ மாக்கினார்" என்று சொன்னார் [II கொரிந்தியர் 5:21]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டது மிக வும் நெருக்கடியான சூழ்நிலையில் தான். எப்படியெனில், பாவஞ் செய்யாத தாம் [I பேதுரு 2:22] பாவ நிவரண பலியாக எண்ணப்பட்டதே. அதன் காரணமாக, தேவனால் கைவிடப்பட்டது நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மிகக் கடுமையான வேதனையும், வியாகுலத் தையும் உண்டாக்கியது.

என்னைப் பொறுத்தவரை என் தேவனே ! என் தேவனே ! ஏன் என் னைக் கைவிட்டீர் என்று மத்தேயு 27:46 மற்றும் மாற்கு 15:34 வசனங்க ளில் இடம் பெற்றுள்ள வாக்கியத்தின் மிகச் சிறந்த விளக்கம் ஏசாயா 59:1–2 மற்றும் II கொரிந்தியர் 5:21 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது மூலமாக சுருக்கமுடியும்." இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங் களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகி றது ; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு

அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது". "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (II கொரிந்தியர் 5:21). சிலமணிநேரம், பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவைப் பிரிந்தார். தம் முகத்தை அவருக்கு மறைத்தார், நம் கர்த்தர் மனித இனத்தின் ஒட்டு மொத்த பாவத்தைச் சுமந்தபடி கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த படியால் இயேசுவின் கதறலுக்கு பிதா செவிசாய்க்கவில்லை (ஏற்றுக் கொள்ளவில்லை). நம் பரிசுத்த தேவனால் பாவத்தோடு எந்த சகவாசத் தையும் வைத்துக்ககொள்ள முடியாது. ஆகவே, இயேசு மனித இனத் தின் ஒட்டுமொத்த பாவத்தையும் சுமந்தபோது பிதாவாகிய தேவனால் குமாரனாகிய இயேசுவோடு எந்த ஐக்கியத்தையும் வைத்துக்கொள்ள முடியவில்லை. மத்தேயு 27:46ல் இயேசு சரீர வேதனையில் கதறினா லும்கூட பிதாவோடு இருந்த உறவு முறிந்தது, அவருடயை வேத னையை இரட்டிப்பாக்கியது : பிதாவுடனான உறவில் முறிவு என்பது தேவத்துவத்தில் இரண்டாம் நபராகிய இயேசு கிறிஸ்து நித்தியத்தில் ஒருபோதும் அனுபவித்திராத ஒன்றாகும். அதேபோல், தேவ பக்தியற்ற வர்களுக்கு உலகத்தின் இறுதியில் கிடைக்கும் மிகப் பெரிய தண் டனை தேவ சமூகத்திலிருந்து பிரியும் பிரிவாகும் ( II தெசலோனிக்கே யர் 1:9).

அதன் பிறகு, பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய கிறிஸ்து வுக்கும் இடையேயான உறவு இயேசு கிறிஸ்து பரமேறி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்தபோது மீண்டும் பழைய நிலைக்கு திரும் பியது (ரோமர் 8:34; கொலோசெயர் 3:1; எபிரெயர் 10:12; Iபேதுரு 3:22). ✝

---

"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் ; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின் படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக : அவருக்கே மகிமையும் வல்லமை யும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென் (I பேதுரு 4:11).



## நிர்வாக ஆசிரியர் உரை

# கட்டுமானக்காரர்களிடமிருந்து...

From The Builders...

**E.Z.S Rajanayagam**

பெரு வெள்ளத்துக்குப் பின்பு, பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது (ஆதி, 11:1). அப்பொழுது பேசப்பட்டது மொழி எபிரெய மொழி என்றும் நம்பப்படுகிறது. பேழை கடைசியாகத் தங்கின “அரராத்” மலையிலிருந்து (ஆதி. 8:4) இறங்கின எட்டுப்பேர் அடங்கிய நோவாவின் குடும்பம் அப்படி அப்படியே இடம் பெயர்ந்து, சிநெயார் தேசத்தில் சமபூமியைக் கண்டு அங்கே குடியேறினார்கள் (ஆதி, 11:2). இவர்கள் இங்கே வந்து சேர்ந்த போது, ஒரு ஆறேழு தலைமுறைகள் கடந்து எட்டுப் பேராயிருந்தவர்கள் கிட்டத்தட்ட 30,000 பேருக்கு மேலாகப் பெருகிவிட்டார்கள்.

இங்கே தான் பிரச்சனை ஆரம்பமாகிறது. அநேகர் இருக்குமிடத்தில் பிரச்சனை இல்லாதிருக்குமா? “அப்பொழுது அவர்கள் : நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். கல்லுக்குப் பதிலாக செங்கல்லும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் அவர்களுக்கு இருந்தது. பின்னும் அவர்கள் : நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்”. (ஆதி, 11:3,4). ஜலப்பிரளயத்துக்குப் பிறகு நோவா 350 வருடங்கள் உயிரோடிருந்துள்ளபடியால் (ஆதி, 9:28) பாபேல் கோபுரம் கட்டப்பட்ட பொழுது உத்தமனும், நீதிமானும், தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தவனுமான நோவா உயிரோடு தான் இருந்துள்ளார் என்று தெரிகிறது. எட்டுப் பேராயிருந்தபோது குடும்பத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த நோவாவால், பெருகிவிட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்குமோ? கூடிவிட்ட வயதும் ஒரு காரணமாக இருந்திருக்கலாமோ ? யாருக்குத் தெரியும் ?.

ஆனால் , இவர்களுக்கான தேவ கட்டளை என்ன? ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, “...தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” (ஆதி, 9:1) என்பதே. ஆனால் இவர்களோ, “நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு” என்ற எண்ணத்தோடும், “ நமக்குப் பேர் உண்டாகப்

என்ற நினைப்போடும் செயல்பட்டனர். இது நடக்குமா ? எவ்வளவு பேர் சேர்ந்தாலும், எப்படி ஏகமனதாகச் செயல்பட்டாலும், தேவ திட்டத் தைத் தடுக்க முடியுமா? ஒரு நகரம் போதாது என்று கோபுரம் வேறு வேண்டுமாம்! அதுவும் வானத்தை அளாவும் சிகரமுள்ள கோபுரமாம் !!

"கோபுரம் கட்டு, வானத்தை எட்டு" என்பது இவர்கள் கோஷமாக அப்பொழுது இருந்துள்ளது. வானம் எவ்வளவு உயரம் என்று இவர்க ளுக்குத் தெரியுமா? இவர்களாலே அப்படிக்கட்ட முடியுமா? தின்று விட்டு வேறு வேலையில்லையென்றால் மனிதன் எப்படியெல்லாம் செயல்படுவான் என்பதற்கு இது ஓர் அருமையான உதாரணம்.

இவர்களின் இம்முயற்சியைப் பார்ப்பதற்குக் கர்த்தர் இறங்கினார் (வச, 5). "அப்பொழுது கர்த்தர்; இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கி றது; அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக் கிறார்கள். நாம் இறங்கிப் போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறி யாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்" என் றார் (ஆதி. 11:6,7). இங்கே இவர்கள் எண்ணத்தைப் பார்த்தீர்களா? தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாதாம்! பக்தன் யோபு சொல்கிறார், "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 4:2) என்று.

ஆனால், இவர்களுக்கோ தேவனைக் காட்டிலும் தாங்கள் பெரிய வர்கள் என்ற நினைப்பு! இந்த நினைப்புக்கு அடி விழாமல் இருக்குமா? அகந்தையை தொடர்ந்து அழிவு வந்துதானே தீரும்.

ஆம், அவர்கள் பேசி வந்த ஒரே மொழி ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாதபடி தாறுமாறாக்கப்பட்டது. ஜனங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போனார்கள். நகரமும், கோபுரமும் கட்டுகிற பணி பா தியிலே நின்று போயிற்று. இப்பணிக்காக "மூன்று ஆண்டுகள்" பொ ருள்களைச் சேகரித்து, "22 ஆண்டுகள்" பெரும் முயற்சி எடுத்துக் கட்டி னார்கள். ஒரு நொடியில் போச்சு, எல்லாம் போச்சு, பாழாய்ப போச்சு, போகாமல் என்ன செய்யும் ? தேவனையும், அவரது திட்டத்தையும் எதிர்த்துத் தப்பினவன் யாராவது உண்டா? பாவம், இந்த நோவா, எப்படி இவைகளையெல்லாம் தாங்கிக் கொண்டாரோ?

இப்பொழுது, இந்தப் பாபேல் கோபுரம் கட்டினவர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I எந்த சூழலிலும் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் :

பாபேல் கோபுர கட்டுமானக்காரர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது.

அரராத் மலையிலிருந்து இறங்கி இடங்கள் பல பெயர்ந்து வந்த நோவாவின் குடும்பம், இதுவரைக்கும் மலைப்பாங்கான பகுதிகளையும், மேடு, பள்ளங்களையும் தான் கடந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. எப்படியெனில் இங்கே, சிநெயார் தேசத்திலே தான் "சம பூமியைக்" கண்டிருக்கிறார்கள் (ஆதி. 11:2). இதன் மூலம் இது வரைக்கும் கண்ட இடங்கள் இவர்கள் சிதறிப்போக வாய்ப்புண்டாகும் இடங்களாகவும், இச்சமபூமி இவர்கள் சிதறிப்போகால் பார்த்துக் கொள்ளும் இடமாகவும் இவர்கள் எண்ணங்களுக்குப் பட்டிருக்கிறது. அடுத்து, சமபூமியானது மலைப்பாங்கான பகுதியைக் காட்டிலும் வன விலங்குகளின் அபாயம் குறைவாக இருந்த பகுதியாக இருந்திருக்கும். இன்னும் சமபூமியில் வாழ்க்கை சிரமமில்லாமல் சுலபமாப் போகும். வாய்க்கும், வயிற்றுக்கும் பெரிதாக அல்லல்படத் தேவையில்லை. இன்னொரு பலமான காரணம், இவர்கள் ஒருதாய் மக்கள். குடும்பங்கள் அனைத்தும் இரத்தக் கலப்பான உறவுகள். இவர்கள் எல்லாருக்கும் தகப்பனான நோவா இன்னும் உயிரோடு வேறு இருந்திருக்கிறார். ஆகவே, இவர்கள் ஏககூட்டமாய் இருக்க ஆசைப்பட்டிருக்கலாம். எல்லாம் சரிதான், ஆனால், இவர்களுக்கான தேவ கட்டளை என்ன? " நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்" என்பது தானே. (ஆதி, 9:1) இந்தக் கட்டளை என்னாயிற்று? இந்தக் கட்டளையைக் கொடுத்தவருக்கு அவர்கள் கடந்து செல்லக்கூடிய சூழ்நிலை தெரியாதா என்ன? தேவன் எந்த விவரமும் இல்லாமல் தான் பூமியை நிரப்புங்கள் என்றாரா? இவர்களுக்கு தேவ கட்டளை ஒரு விளையாட்டாகத் தெரிந்திருக்கிறது. அப்படித்தானே!!

## II பெருமையை எப்பொழுதும் விலக்க வேண்டும் :

பாபேல் கோபுர கட்டுமானக்காரர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், நாம் எப்பொழுதும் பெருமையை விட்டு விலகுகிறவர்களாக இருக்க வேண்டுமென்பது.

ஆதியிலே பிசாசானவன் தேவசமூகத்திலிருந்து தள்ளுண்டு போனதற்குக் காரணமே பெருமை தான் (ஏசா. 14:13-15).

பெருமையின் பிறப்பிடம் பொல்லாத இருதயம் என்று இயேசு ஆண்டவர் கூறியுள்ளார் (மாற்கு 7:21,22). ஆக, ஒருவனிடம் பெருமை காணப்படுமானால் அவனிடம் பிசாசின் குணமும்,பொல்லாத இருதயமும் இருக்கிறதென்று கண்னை

மூடிக்கொண்டு சொல்லி விடலாம். இப்படிப்பட்டவனைத் தேவன் எதிர்க்காமல் என்ன செய்வார்?.

"பெருமைத் தாய்" பெற்றுத் தரும் தீமைகளில் சிலவற்றைக் கவனியுங்கள். மனதைக் கடினப்படுத்துகிறது(தானி. 5:20). தேவனைத் தேடுவதைத் தடுக்கிறது (சங். 10:4). அதுமட்டுமல்ல, ஒருவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும்படி செய்கிறது (எரே. 49:16). இன்னும், பெருமையானது ஒருவனை அழித்துவிட்டுத்தான் மறு வேலை பார்க்கிறது. " அழிவுக்கும் முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" என்று ஞானியைக் கொண்டு தேவன் எச்சரிக்கிறார் (நீதி. 16:18) அவர்களுடைய பேச்சைப் பாருங்களேன்! "நாம் சிதறிப்போகாதபடி", "நமக்குப் பேர் உண்டாக்குவோம்", "நாம் செய்ய நினைத்தது தடைபடாது" என்று. வந்ததா வினை! பூமியெங்கும் சிதறிப்போகாமல் இருந்து விட்டார்களா? தங்களுக்குப் பெயரைத்தான் உண்டாக்கிக் கொண்டார்களா ? அல்லது அவர்கள் நினைத்ததுதான் நிறைவேறிவிட்டதா? தேவனுக்கு விரோதமாகப் பெருமை கொண்டு ஒரு போதும் ஒன்றையும் சாதித்து விடமுடியாது, முடியவே முடியாது.

### III தேவ திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் :

பாபேல் கோபுர கட்டுமானக்காரர்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம். தேவ திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது.

தேவ சித்தம் என்பது, தேவன் நாம் செய்ய வேண்டுமென்று நம்மிடத்தில் எதிர்பார்ப்பது. பவுலடியார், தீமோத்தேயுவுக்குச் சொல்வதைக் கவனியுங்கள். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்று (1 தீமோ 2:4). ஆனால், தேவதிட்டம் என்பது நாம் ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று தேவன் நம்மிடத்தில் கொடுப்பது. நாம் அதை நிறைவேற்றித்தான் தீர வேண்டும். உதாரணமாக, பேழையை எப்படிக் கட்ட வேண்டுமென்று நோவாவுக்கு அதிகாரம் இல்லை. நோவா தேவன் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தான் என்று தான் நாம் வாசிக்கிறோம்(ஆதி. 6:22).

அதுபோலவே, நோவாவின் சந்ததியார் பலுகிப் பெருகி பூமியை நிரப்ப வேண்டு மென்பதும் தேவ திட்டதின் ஒரு பகுதியே. இதிலே மாற்றம் செய்வதற்கோ அல்லது அடியோடு மாற்றுவதற்கோ யாருக்கும் அனுமதி இல்லை. ஆனால், அந்தக் கட்டுமானக்காரர்கள் தேவதிட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் தங்களுடைய அறிவுக்கும், விருப்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்துக் காரியமாற்றினர். "மூடனுக்குப் பிரம்படி"(நீதி, 26:3) என்பது போல அதற்கான விலையும் கொடுத்தனர்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ஏன் என்னைக் கைவிட்டீர் | Louis Rushmore | ... 1 |
| கட்டுமானக்காரர்களிடமிருந்து... | E.Z.S. Rajanayagam | ... 4 |
| பிரதான கட்டளை எனக்கு... | J.C. Choate | ... 10 |
| இவன் தன்னால் இயன்றதை... | Jerry Bates | ... 14 |
| வேதாகமம் எவைகளை... | P.C. Philemon Rajah | ... 17 |
| இயேசுவுக்கு சீஷனாயிருக்க... | B. Arjunan | ... 20 |
| ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ... | Benny Martin | ... 23 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| சமாதானப் பிரபு | Russ Vickers | ...26 |
| எல்லாமே அவரைப் பற்றியதாக... | Rodney Nulph | ...27 |
| கவலை தோறும் புதியவை... | Charles C. Pugh III | ...30 |

**அனுதின கிறிஸ்துவ வாழ்க்கை – Daily Christian Living**

| | | |
|---|---|---|
| தைரியமுள்ள விசுவாசம் | Therman Hodge | ...33 |
| பாம்பை கையாள்கிறவர் | Lanny Smith | ...35 |
| உத்தம இருதயம் | Roger Wright | ...38 |
| நடத்தை அளவுகோல்கள் | Wayne Barrier | ...40 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| வேதாகமம்: உலகின் உண்மை... | Dalton Key | ...42 |
| மறுபடியும் வெளிச்சம்... | Caleb Boggs | ...44 |

**கிறிஸ்தவ இல்லம் – Christianity in Action**

| | | |
|---|---|---|
| மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை... | Ronald D. Reeves | ...45 |
| விற்பனைக்கு அல்ல! | Ken Tyler | ... 46 |
| என் நேசர் என்னுடையவர்... | Denny Petrillo | ...47 |
| ஓர் ஆணாக வளர்க்கப்படுவது! | Derek Broome | ...48 |
| விவாகத்தைப்பற்றி தேவனுடைய... | Gary C. Hampton | ...50 |
| நம் இல்லங்கள் மற்றும்... | Betty Burton Choate | ...52 |
| அன்பின் ஏழு பரிமாணங்கள்! | Mark N. Posey | ...57 |

| | | | |
|---|---|---|---|
| **சபை** | – | **The Church** | |
| உங்கள் சபையின் பிறந்த... | | J. Rardal Matheny | ...60 |
| பூமியிலும் இணைந்து... | | Dale Grission | ...62 |
| எது உறுதியான சபை... | | Maxie B. Boren | ...64 |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | – | **Bible Characters** | |
| நம் எஜமானுக்கு இணை... | | Jerry R. kendall | ...68 |
| எண்ணாகமச் சம்பவம் | | Tam Raynor | ...70 |
| ஆதாம் | | Thomas Baxley | ...72 |
| பிரேதப் பெட்டியிலிருந்து... | | Patrick Morrison | ...73 |
| யோசியா, தன் இளவயதில்... | | John Stacy | ...76 |
| **வேதாகம கேள்விகள்** | – | **Bible Questions** | |
| ஏன் நல்லவர்களுக்கு... | | Andy Robinson | ...81 |
| மனைவியும், தாயும்... | | Rebecca Rushmore | ...84 |
| கிறிஸ்து உயர்தெழவில்லை... | | Ardron Hinton | ...89 |
| **இரட்சிப்பு** | – | **Salvation** | |
| கிறிஸ்து தமக்குக் கீழ்... | | Sunny David | ...90 |
| கிறிஸ்துவனாக ஆவது... | | Royce Frederick | ...93 |
| **செயலில் கிறிஸ்தவம்** | – | **Christianity in Action** | |
| ஆசிரியரின் செயல்பாட்டு பை | | Bonnie Rushmore | ...97 |
| தனிநபர் ஊழியம்... | | Anonymous | ...99 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | – | **Doctrine to Live by** | |
| நரகம் இல்லையென்றால்,... | | Raymond Elliot | ...101 |
| ஆரோக்கியமான உபதேசம் | | Anonymous | ...104 |
| **ஆராதனை** | – | **Worship** | |
| நீங்கள் பாடலில் எப்படி... | | Day Ton Keesee | ...106 |
| நாம் வாழ்க்கையில் செய்யும்... | | Kevin L. moore | ...107 |



## பிரதான கட்டளை எனக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது ?

## What the Great Commission Means To Me?

## J.C. CHOATE

'' **நீ**ங்கள் உலகமெங்கும் போய்; சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்''(மாற்கு16:15,16). நம் இரட்சகர் இந்த வார்த்தைகளை பரமேறி பிதாவின் வலது பாரிசத்தில் உட்காருவதற்கு முன்பாக தம்முடைய அப்போஸ்தலர்களிடம் பேசினார். இந்த சீஷர்கள் இயேசு யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டதிலிருந்து இயேசுவை எப்போதும் முழுமையாகப் புரிந்துகொள்ளாவிட்டாலும் கூட அவரிடத்தில் உண்மையாக விசுவாசமாக இருந்தார்கள். இருந்தபோதிலும், இந்தக்கட்டளையை அவர்களால் மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடிந்திருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு ஆண்டவரைப் பார்த்து " இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்கு திரும்பக் கொடுப்பீர் ? என்று கேட்டார். அதற்கு கர்த்தருடைய பதில் "ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்... பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் " என்பதாக இருந்தது.

இங்கே இயேசு கிறிஸ்து அவருடைய சரீரம் அல்லது சபையின் முதல் அங்கத்தினர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார். மேலும், அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார். உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்னும் கட்டளை செயல்பாடற்ற, உயிரற்ற ஒன்றல்ல. மாறாக, இது முதல் நூற்றாண்டில் மட்டுமல்ல, ஒவ்வொரு தலைமுறையிலும் தேவனுடைய ஜனங்களை தட்டி எழுப்பும் உந்தும் சக்தியாக இருந்து வருகிறது.

நாம் மேற்கோள் காட்டிய இயேசுவின் வாக்கியத்தின் மூலமாக அவர் இரண்டு கட்டளைகளைக் கொடுக்கிறார் : முதல் கட்டளை சபைக்கு; இரண்டாவது கட்டளை உலகத்திற்கு, கிறிஸ்து சபைக்கு

என்ன சொன்னார் ? உலகமெங்கும் போய் பிரசங்கியுங்கள். “உலகத்திற்கு என்ன சொன்னார் ?” “விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் ''. கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் பல வருடங்களாக மத உலகில் இருக்கும் நம் நண்பர்கள் இந்த இரண்டாவது கட்டளையை புரிந்து கொள்ளாதவராகும் போது அவர்களுடைய குருட்டாட்டத்தைக் குறித்து ஆச்சரியப்படுகிறோம். இந்தக் காரியத்தில் நாம் மற்றவர்களையேப் பார்த்துவிட்டு நம்மை நாமே பார்க்க மறந்து விடுகிறோம். தனிப்பட்ட கிறிஸ்தவர்களாக நமக்கு இரண்டாவது கட்டளையில் பிரச்சனை எதுவுமில்லை. ஆனால், உலகமெங்கும்போய், சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதின் முக்கியத்துவத்தைக் காண நாம் தவறியிருக்கிறோம். முழுமையான சுவிசேஷத்திற்கு அல்லது சத்தியத்திற்கு நம் கண்கள் குருடாகி விட்டனவா ?


பிரதான கட்டளையைப் பற்றி நம் மனநிலையை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது, தன் கண்ணில் உத்திரத்தை வைத்துக்கொண்டு, தன் சகோதரன் கண்ணிலிருந்து துரும்பைப் பார்த்த ஒருவனைப்பற்றி இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகள் தான் நினைவுக்கு வருகிறது. அப்படி இயேசு என்னதான் சொன்னார்? “ **மாயக்காரனே** ”என்று சொன்னார். அது கேட்பதற்கு அவ்வளவு இனிமையான வார்த்தை அல்ல,அப்படித்தானே? பல வேளைளில் நாம் அந்த மாயக்காரர்களை விட சிறந்தவர்களாக இல்லை. அது மாத்திரமல்ல, மத சம்மந்தமான அறியாமையிலும், பிழையிலும் இருக்கும் நம் அயலாகத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறது போல தான் நாமும் இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், அதைவிட மோசமானவர்களாக இருக்கிறோம்.

நம்மில் பெரும்பாலானவர்களுக்கு பிரதான கட்டளை என்பது நாம் விசுவாசிக்கிற சில வார்த்தைகளைவிட மேலான ஒன்றாக இல்லை, மற்றும் அதை நாம் பெரிதாக எடுத்துக் கொள்வதுமில்லை. உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது நமது கடமை என்று காதுகளில் உரக்கச் சொல்லப்பட்டாலும் கூட நாம் உணர்வற்றவர்களாகவே இருக்கிறோம். பிரதான கட்டளையை நிறைவேற்றுவது குறித்து நம் இருதயத்தில் எந்த அக்கறையும் இல்லை, ஆசையும் இல்லை. ஊழியத்தை உலகின் பல பகுதிகளுக்கு கொண்டு செல்வதைக் குறித்து நாம் கண்டுகொள்ளாமல் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கிறோம். மனித இனம் இரட்சிக்கப்படாமல் அழிந்து போவதைக்குறித்து இமயளவும் கவலை இல்லாமல் இருக்கிறோம்.

நம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் ஊழியத்தைக் குறித்து இப்படிப் பாராமுகமாக இருந்தால் எது நமக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்து ஊழியத்தைக் குறித்த உணர்வைத்தரும் என்று தெரியவில்லை. நாம் தண்ணீரில் மிதந்து கொண்டே எதிர்நீச்சல் போடாமல் எளிதாக நித்திய இரட்சிப்பை அடையவே முடியாது. வாழ்க்கைப் பயணத்தில் பிசாசு நம்மை துரத்துவதாகவே எண்ணி துடுப்பைப் பயன்படுத்தி வாழ்க்கைப் படகை ஓட்டவேண்டும். நம்மில் பெரும்பாலோனோர் வாழ்க்கைப் பயணத்தில் நீர்ச்சுழலில் சிக்கிவிட்டோம் என்பதை அறியாமலேயே, உணராமலேயே இருக்கிறோம். சகோதரரே, உலகெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காமல் இருப்பது, தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமலிருப்பதாகும். இப்படிக் கீழ்ப்படியாமலிருக்கும் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் தண்டனை உண்டு. நாம் எப்போது நமக்கு முன்பாகவும், மனித இனத்துக்கு முன்பாகவும் இருக்கும் படுகுழியில் விழாமல் எழுந்திருப்போம் ?

நாம் உலகெங்கும் போய் இயேசுவைப் பற்றிச் சொல்வதற்கு மற்றுமொரு காரணம் உண்டு. இயேசு கிறிஸ்துவின் தாக்கம் இல்லாமல் இவ்வுலகம் எப்படியிருக்கும் என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தனிபட்ட வாழக்கை அவரில்லாமல் எப்படியிருக்கும் ? ஆனால், இவ்வுலகில் லட்சகணக்கான மக்கள் இயேசு என்னும் பெயரை கேட்டது கூட இல்லை என்பதை அறியும்போது மிக வேதனையாக உள்ளது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை எதை மாதிரியாகக் கொண்டு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அறியாதிருக்கிறார்கள் அல்லது மிகச்சிறந்த மாதிரியாகிய இயேசுவைப் பற்றி அவர்களுக்கு போதிக்கப்படவில்லை. அவர்கள் எல்லா கிறிஸ்தவர்களும் பெற்றுகொள்கிற ஆசீர்வாதங்களில் ஒன்றைக் கூடப் பெற்றுக் கொள்ளவில்லை. ஒரு நிமிடம் அவர்களுடைய இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். அப்படிப்பட்ட வாழ்க்கை அந்தகாரத்தால் சூழப்பட்ட ஒன்றாக இருக்கிறதா ? ஒரு கிறிஸ்தவராக உங்களால் அந்த இருளை வெளிச்சமாக மாற்ற முடியும்! உங்களால் முடிந்தவரை இந்த மக்கள் இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை அறிய காரியங்களைச் செய்வது உங்கள் பொறுப்பாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் இது பொறுப்பை விட மேலானது : இது ஒரு சிலாக்கியமாகும் ! இதை சிந்தித்துப் பாருங்கள் : உங்களுக்கு ஓர் இரட்சகர் இருக்கிறார். அவர் உங்கள் கடந்தகால பாவங்களை எடுத்துப் போட்டிருக்கிறார். மேலும், அவர் நம் சார்பாக தேவனிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். கிறிஸ்து நாம் இவ்வுலகில் எப்படி வாழ வேண்டுமென்று முழுமையான வழிமுறைகளைக் கொடுத்திருக்கிறார்.



அவர் உங்களை சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் அபரிதமாக ஆசீர்வதித்திருக்கிறார். அவர் நமக்கு நித்திய ஜீவனை அளிப்பதாகவும், அவரோடும் பிதாவோடும் என்றென்றும் வாசம் செய்ய ஒரு வீட்டை அளிப்பதாகவும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ஜனங்கள் இதை விட அவரிடம் வேறு எதைத்தான் கேட்க முடியும் ? இருந்த போதிலும் கிறிஸ்து நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதெல்லாம் கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங்களை உலகம் முழுவதும் பகிரவேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. நாம் குறைந்த பட்சம் இதைக்கூட செய்யாமல் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியுமா? அப்படி நான் நினைக்கவில்லை. கிறிஸ்து மனித இனத்துக்காக தம்முடைய எல்லாவற்றையும், தம்முடைய ஜீவனையும் கூட கொடுத்துவிட்டார். அவர் உங்களுக்காகவும், எனக்காவும் மட்டுமல்ல அவருடைய நாமத்தை இதுவரை கேள்விப்படாதவர்களுக்காவும், தம் ஜீவனை கொடுத்திருக்கிறார். கிறிஸ்து தம்முடைய எல்லாவற்றையும் கொடுத்திருக்கும் போது, அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சுவிசேஷத்தை நம்மைப்போல் பெற்றுக்கொள்ள தகுதியான வர்களிடம் அதைப் பகிர்ந்து கொள்வோம்.

**"சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."**

இவ்வுலகம் நம்மை பகைக்கும்
சிலர் நம்மை விமர்சிப்பார்கள்
மற்றவர்கள் நம்மை துன்பப்படுத்துவார்கள்
சிலர் நம்மை பின்பற்றுவார்கள்
ஆனால்,தேவன் நம்மை நேசித்து மகிழ்வார்.



# இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்

## She Has Done What She Could

**Jerry Bates**

**கொ**டுத்தலைப்பற்றி மிகச்சிறந்த உதாரணங்களுள் ஒன்று மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (மத்தேயு 26:6–13;மாற்கு 14:39;யோவான் 12:1–8). இந்த மூன்று சுவிசேஷப்புத்தகங்களும் இயேசு கிறிஸ்து பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோனுடைய வீட்டில் போஜன பந்தியிருக்கையில் நளதம் என்னும் பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றின மரியாளைப்பற்றி பேசுகின்றன. மரியாள் அந்த வீட்டில் பிரவேசித்து இயேசுவின் தலையையும், பாதங்களையும் பரிமளதைலத்தால் அபிஷேகம் பண்ணினாள். மரியாள் சீமோனுடைய வீட்டிற்கு விலையுயர்ந்த பரிமள தைலத்தை வெள்ளைக்கல் பரணியில் கொண்டு சென்றாள். இந்த வெள்ளைக்கல் எகிப்தின் மேற்கு பகுதியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலை உயர்ந்த நறுமணத்தைலமாகும். இதைக்கண்ட அவருடைய சீஷர்கள் விசனமடைந்தார்கள், அவர்கள் இயேசுவை காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்தினால் தூண்டப்பட்டு, இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே என்று புலம்பினார்கள். இயேசு மரியாள் செய்த இந்த காரியத்தை வெகுவாக மெச்சினார். “இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம் பூச முந்திக்கொண்டாள்” என்று இயேசு மரியாளைப் பாராட்டினார். மரியாள் இந்த தைலம் பூசும் செயலை இயேசுவின் மரித்த சரீரத்திற்கு செய்திருந்தால் யாரும் விசனமடைந்திருக்க மாட்டார்கள்.

இங்கே “இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்”என்னும் சிறிய வாக்கியத்தை வலியுறுத்த நான் விரும்புகிறேன். “இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்”என்னும் வாக்கியம் கிறிஸ்தவம் கிரியையுள்ள அல்லது செயல்பாடுள்ள மார்க்கம் என்று மறைமுகமாகச் சொல்கிறது. இவ்வாக்கியம் ஒருவர் என்ன பெற்றுக் கொள்கிறார் என்பதையல்ல, ஒருவர் என்னச் செய்கிறார் என்பதை வலியுறுத்துகிறது. யாக்கோபு ஆசிரியர் “அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி

செய்கிறவர்களாயும் இருங்கள்'' என்று சொல்கிறார் (யாக்கோபு 1:22). தேவனுடைய வார்த்தைகளை மாத்திரம் அறிந்து கொண்டால் போது மானது என்று நாம் நினைத்தால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறவர் களாக இருப்போம். நாம் செயல்படுகிறவர்களாக இருக்கவேண்டும்.

இங்கே இயேசுவின் பாராட்டு நாம் எப்போதும் தேவனுக்கு சிறந்ததைச் செய்யவேண்டுமென்று மறைமுகமாகச் சொல்கிறது. நம் முடைய சிறந்தவைகளை பெற்றுக்கொள்வதற்கு தேவன் பாத்திரர் இல்லையா? மேலும், நாம் நம்முடைய சிறந்த தருணங்களை தேவ னுக்கென்று கொடுக்க முன்வரவேண்டும். கல்லறைத் தோட்டத்தில் நமக்குப் பிரியமானவர்களை அடக்கம் பண்ணும்போது, மரித்தவர்கள் உயிரோடிருந்தபோது அன்பை வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைத்தும் அந்த வாய்ப்புகளை தவற விட்டுவிட்டோமே என்று வருத்தப்படுகி றோம். தேவனுக்காக எதையாவது செய்யவேண்டுமென்று நினைத்து கிடைத்த வாய்ப்புகள் எத்தனை நம்மை விட்டு நழுவியிருக்கின்றன ? நம் கர்த்தர் திரும்பிவரும்போது நேரம், தாலந்துகள், ஆற்றல் எனும் வெள்ளைக்கல் பரணி உடையாமல் இருப்பதைக் காண்பாரோ ?

மேலும், நம்மால் முடிந்தவரை காரியங்களைச்செய்ய விருப்ப முள்ளவர்களாயிருக்க வேண்டும் ? எல்லோராலும் பெரிய காரியங் களைச் செய்ய முடியாது அல்லது ஒரு மிகப்பெரிய திட்டத்தின் தலைவராக இருக்க முடியாது. நம்மால் ஒன்றையும் செய்ய முடியாதென்றோ, செயல்படக்கூடாதென்றோ இல்லை. இயேசு கிறிஸ்து தாலந்துகள் உவமையில் இரண்டு தாலந்துகள் கொடுக்கப்பட்ட மனிதனைப் பற்றியும் ஐந்து தாலந்துகள் கொடுக்கப் பட்ட மனிதனைப் பற்றியும் பேசுகிறார். இருவருக்கும் ஒரே விதமான பலன்தான் கொடுக்கப்பட்டது. ஏனென்றால், இருவருமே தங்களால் இயன்றதை செய்தார்கள். சில வேளைகளில் நம் செயல் குறைபாட்டை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து நியாயப்படுத்திக் கொள்கிறோம். அதேநேரத்தில், மற்றவர்களைப்போல் நமக்கு பணம், நேரம், தாலந்துகள் இல்லை என்று கர்த்தருக்காக காரியங்களை செய்யாமல் தப்பித்துக் கொள்கிறோம்.

இறுதியாக, இங்கே கேள்வி ''நாம் என்ன செய்கிறோம்? என்பதல்ல. மாறாக'', ''நம்மால் இயன்றதைச் செய்கிறோமா? இந்த அளவுகோலின்படி தான் தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார். நம்மால் இயன்றதைச் செய்ய விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோமா? கீழ்காணும் கவிதையை யாரோ ஒருவர் எழுதியிருக்கிறார். ''நான் ஒருவனாக மட்டும் இருக்கிறேன். ஆனால், ஒருவனாக இருக்கிறேன் என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. ஆனால், எதையாவது

செய்ய முடியும். என்னால் எதைச்செய்ய முடியுமோ அதை நான் செய்ய வேண்டும். நான் என்னச் செய்ய வேண்டுமோ அதை நான் செய்வேன், எனவே எனக்கு உதவிச்செய்யும் தேவனே''.

இது பெரும்பாலும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் உண்மையாயிருக்கிறது. மிகச்சிறப்பான பேச்சாற்றல் கொண்ட சில வாலிபர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய திறமைகளுக்கு எல்லையே இல்லை என்பதை போல் தோன்றும். இருந்தபோதிலும், அவர்களுடைய திறமைகள் முழுவதுமாக பயன் படுத்தப்படுவதில்லை. பல நேரங்களில் அவர்கள் பள்ளிப்படிப்பைக் கூட முடிக்க மாட்டார்கள், அப்படியே முடித்தாலும் கூட கவனிக்கத் தக்க காரியங்களை பெரிதாக செய்து முடிக்க மாட்டார்கள். சமீபத்தில், ஒரு வேதாகம பள்ளியின் இயக்குநர் தன் இளம் மாணாக்கர்களில் ஒருவரைப் பற்றி பேசும்போது அந்த மாணவன் ஒரு நட்சத்திர மாணவன் அல்ல என்று சொன்னார். இங்கே அந்த இயக்குநர் அந்த மாணவனின் இயற்கையான திறமைகளை குறைத்து மதிப்பிட வில்லை. மாறாக, அந்த மாணவனுடைய மற்ற பண்புகளை நம்பகத் தன்மை, கடினமாக உழைப்பதற்கான விருப்பம், சிறப்பாக இருப்பதற்கான விருப்பம் போன்றவைகளை பாராட்டிக் கொண்டிருந்தார்.

மேற்சொல்லப்பட்ட பண்புகள் இயற்கையான திறமைகளைவிட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். குறைவான திறமை உள்ளவர்கள்கூட மேற்சொல்லப்பட்ட பண்புகளுடன் சில ஆச்சரியமான காரியங்களைச் செய்ய முடியும். இப்பண்புகள் இல்லையென்றால், ஒருவர் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் சரி, பெரிய அளவில் சாதிக்கவும் முடியாது, தங்கள் முழுத்திறமைகளை பயன்படுத்தவும் முடியாது. உங்களுக்கு மகத்தான திறமைகளிருந்தால் அது மகத்தானது தான். ஆனால், பயன் படுத்தப்படாத, மேம்படுத்த முடியாத திறமைகள் மதிப்பற்றவைகளாகி விடுகின்றன. நாமெல்லாருமே, நாம் அபரிதமான தாலந்துகளால் ஆசீர்வதிக்கப்பட்டாலும் சரி குறைவான தாலந்துகளால் ஆசீர்வதிக்கப்பட்டாலும் சரி, நம்மால் முடிந்ததை சிறந்ததை செய்ய முயற்சிக்கவேண்டும். தேவன் எதிர்பார்ப்பதெல்லாம் அவ்வளவு தான். தேவனுடைய உதவியினால் நம்மில் யார் வேண்டுமானாலும் ஆச்சரியமான காரியங்களைச் செய்யமுடியும். இன்று சபையின் மிகப்பெரிய தேவை அங்கத்தினர்களுடைய பேச்சாற்றலோ, கல்வியோ அல்லது செல்வமோ அல்ல. ஆனால், ஒவ்வொருவரையும் தங்களால் முடிந்ததை செய்ய வைக்க அவர்களை ஊக்கப்படுத்த விரும்பும் மனதுதான். ✝

# வேதாகமம் எவைகளை மூடத்தனமென்கிறது?
## What Does the bible refer to as Foolishness?

P.C. Philemon Rajah

### 1. கடவுள் இல்லை என்று மறுதலிப்பதை

சங்கீதம் 14:1 "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை".

கடவுள் இல்லை என்று மறுதலிப்பவர்களை மதிகெட்டவர்கள் என்றும், அவ்வாறு செய்யப்படுவதை மதீயீனம் என்றும் பைபிள் உறுதியாக கூறுகின்றது. பரலோக கடவுள் தன்னுடைய இருப்பை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்த அண்டமும் அதனுடைய ஒழுங்கமைவும் அவைகளைப் படைத்தவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றன.

யாராவது ஒருவர், உங்கள் கைகளில் உள்ள மொபைல் தானாக உண்டானது என்று உறுதியகச் சொன்னால், என்ன சொல்வீர்கள்? அப்படிச் சொன்னவரை பற்றி நீங்கள் யாராக நினைப்பீர்கள் ? அது அப்படித்தான் தானாகத்தான் உண்டானது என கூறினால், அந்த செயலை எவ்வாறாக உணர்வீர்கள்? இந்த மொபைல் தானாக உண்டாகவில்லை, இந்த நிறுவனத்தினர் உண்டாக்கினர் என உறுதியாக கூறுவீர்கள் அல்லவா ? அதேபோல தான் இந்த ஒழுங்கான உலகும் தானாக உண்டாகவில்லை. தன்னை உண்டாக்கினவர் ஒருவர் இருக்கின்றார் என்பதைனை நமக்கு சொல்லாமல் (பேச்சுகளின்றியும்) சொல்லி தருகின்றது.

சங்கீதம் 19:1–4 "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும், அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்".

சிலர் கடவுளை காண்பி நம்புகின்றேன் என தர்க்கிக்கின்றனர். இந்த அண்டத்தினை பார்த்து உணர்ந்துகொள் என்று சொன்னால், அது அவர்களுக்கு பைத்தியமாகவே தோன்றுகின்றது. எவரொருவரும் சுமார் 1300 கிராம் எடையுள்ள தன் மூளையை காண்பிக்க முடியுமே தவிர, அவற்றில் அறிவு எங்கே இருக்கின்றது என காண்பிக்க இயலாது. மூளைக்குள் தான் இருக்கும் என்று சொல்லத்தான் முடியுமே தவிர, காண்பிக்க இயலாது. உண்மைதான், அறிவு அதற்குள் தான் இருக்கின்றது. அதனை நாம் மறுப்பது என்பது முட்டாள்தனமாகும்

**2. மதுபானம் அருந்துவதை :**

நீதிமொழி 20:1 " திராட்சரசம் பரியாசஞ் செய்யும், மதுபானம் அமளி பண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல". கடவுளின் வார்த்தையான பைபிள், மது அருந்துபவர்களை மூடர்கள் என்றும் சொல்கின்றது. யாராக இருந்தாலும் சரி மது அருந்துதல் என்பது மூடத்தனமே. மேலும், அது துன்மார்க்கமான செயல் என்றும் கூறுகின்றது.

எபேசியர் 5:18 "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து''; குடிகாரன் தான் உண்மையைப் பேசுவான், மனுஷன் குடிச்சாதான் உண்மை வரும் என சொல்வது எல்லாம் முற்றிலும் வடிகட்டின பொய்யாகவே உள்ளது. உண்மையில் அறிவியல் பூர்வமாக குடிக்கின்றவரின் மூளையின் செயல்பாடு பாதிக்கப்படுமே தவிர, வளர்வது இல்லை. அவர் ஞானம் அடைவதும் இல்லை. அது அறிவார்ந்த சமூகத்தினை அறிவுகுன்றிய மற்றும் அறிவற்ற சமூகமாக மாற்ற செய்யப்படுகின்ற பொய்யான வதந்திகள் ஆகும். ஏசாயா 28:7 " ஆனாலும், இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி, மதுபானத்தால் வழி தப்பிப் போகிறவர்கள்; ஆசாரியனும், தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்" எந்த வகையிலும் மனிதன் போதை பொருட்களை உட்கொள்வது பாவமாகவும் மற்றும் மதியீனமாகவும் உள்ளது. அது அவர்களின் வாழ்வில் பேராபத்தினையும், அவர்களை சார்ந்தவர்களுக்கு தீரா மனஉளைச்சல் மற்றும் பொருளாதாரம் சார்ந்த அநேக பிரச்சனைகளையும், போராட்டங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் பேராபத்தானாதாகும்.

ஏசாயா 5:11 "சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப் போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ!" அவர்களின் பரிதாபகரமான நிலையை, பைபிள் பட்டியலிட்டு காண்பிக்கின்றது. நீதிமொழி 23:29–34 "ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்கு காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்தில் தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே, மதுபானம் இரத்தவருணமாயிருந்து,, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும் போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப் போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப் போலும்

இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள் எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய் ''; அதனால் தான் கடவுளின் வார்த்தையான பைபிள், போதை பொருட்களை உட்கொள் வதை முட்டாள்தனமான செயல் என்கின்றது. எந்த வகையிலும் அத னை போதை பொருட்களை வெறுத்து, தவிர்த்து ஒதுக்குவதே ஞான மான செயலாகும்.

**3. நாவடக்கம் இல்லாததை**

ஏசாயா 32:6 " ஏனென்றால் மூடன், மூடத்தனத்தைப் பேசுகிறான்; அவன் இருதயம் அநியாயத்தை நடப்பிக்கும்; அவன் மாயம் பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய் விபரீதம் பேசி, ஆத்துமாவை வெறுமையாக வைத்து, தாகமுள்ளவனுக்குத் தாகந்தீர்த்திருக்கிறான்''. தன் நாவை அடக்காத தன்மையை பைபிள் மூடத்தனம் என்கிறது. தன் மனதிற்கு தோன்றியபடி தான் விரும்பியதெல்லாம், அது நல்லதா கெட்டதா? நன்மையை உண்டாக்குமா? அழிவை உண்டாக்குமா என்பதனை பற்றி எந்த கவலையும் இன்றி, எதனை வேண்டுமானாலும் பேசுவது என்பது மூடத்தனமானது ஆகும். மேலும், பைபிள் அதனை துன் மார்க்கம் என்கின்றது.

நீதிமொழி 15:28 "நீதிமனுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோ சிக்கும்; துன்மார்க்கனுடைய வாயோ தீமைகளைக் கொப்பளிக்கும்". வார்த்தைகளை கொட்டுவது என்பது ஞானமான செயலாக இருக்காது. ஆகையால் தான் நம்மூர் பழமொழியில் "நெல்லை கொட்டினால் அள் ளிவிடலாம். சொல்லை கொட்டினால் அள்ள முடியாது" என சொல் வார்கள். நிறைய பேசுவது என்பது எந்த காலத்திலும் புத்திசாலித்தன மாக மெச்சிக்கொள்ளப்பட்டதில்லை என்பது நாம் அறிந்ததே. அத னால் தான் குறைவாக பேசு, நிறைய கேளு என சொல்லிக்கொடுத்த னர். சில நேரங்களில் பேசாமல் அமைதியாக இருப்பதும் ஞானமான செயலாக இருக்கின்றதாக சாலமோன் ஞானி கூறுகிறார்.

நீதிமொழி 10:19 "சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போ காது; தன் உதடுகளை அடக்கிறவனோ புத்திமான்". மேலும், அலப்பு கின்றவன் மூடன், அவன் விழுவான் என எச்சரிக்கின்றது. நீதிமொழி 10:10 "கண்சாடை காட்டுகிறவன் நோவு உண்டாக்குகிறான்; அலப்பு கிற மூடன் விழுவான்". மேலும், தேவையற்ற பேச்சுக்கள் நல்ல ஒழுக் கங்களை (பழக்கங்களை, குணங்களை) பாழ்படுத்திவிடுவதாக இருக் கின்றது எனவும் எச்சரிக்கின்றது. I கொரி 15:33 "மோசம் போகாதிருங் கள்''; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.

# இயேசுவுக்கு சீஷனாயிருக்க தகுதியற்றவர் யார்?

Who Is not Worthy To Be A Disciple Of jesus ?

## B. Arjunan

**எ**ல்லாவற்றிற்கும் ஒரு தகுதி அவசியமாக இருக்கிறது. தகுதியில்லாதவர்கள் நலமான காரியங்களை பெற்றுக்கொள்ள இயலாது. இயேசுவின் சீஷர்களாவதற்கு சில தகுதியாம்சங்கள் இருக்கவேண்டும் என இயேசுவானவர் போதித்தார். அது என்னவென்றால்: "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டன் என்றார்" (லூக். 14:26).

"அவருடைய சீடர்களில் ஒருவன் அவரை நோக்கி : ஆண்டவரே ! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு : மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ என்னைப் பின்பற்றி வா என்றார்" (மத்,8:21,22). இங்கே தன் தகப்பனை அடக்கம் பண்ணக்கேட்டுக் கொண்ட சீஷனைப் பார்த்து, மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றி வா என்றார். இதனால் அவன் தன் தகப்பனை அடக்கம் பண்ணப்போகவேண்டாம் என்று அர்த்தமல்ல. மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றி வா என்றார். ஆண்டவருடைய அழைப்பு எல்லாவற்றைக் காட்டிலும் மேலானது.

இரண்டாவது "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக், 14:27). சிலுவை என்று சொல்லும்போது அது பாடுகளைக்குறிக்கிறதாக இருக்கிறது. சிலுவையைக் கழுத்தில் மாட்டிக்கொள்கிறார்கள். ஆனால், தனக்கு வரக்கூடிய பாடுகளை சகிக்க முடியாமல் விசுவாசத்தைவிட்டு விலகியும், அவரை அநேக சூழ்நிலைகளில் மறுதலித்தும் போகிறார்கள். ஒருவன் இயேசுவை பின்தொடரும்போது அவனுக்கு அநேக பாடுகள் உண்டு, அவைகளை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்ற வேண்டும் என்றே இயேசு சொல்லியிருக்கிறார். இயேசுவை பின்பற்றினால் பாடுகள் வராது, பிரச்சனைகள் வராது என்று சொல்லி யாரையும் அவர் ஏமாற்றவில்லை. பவுலும் கூட அவருக்கு இருக்கும் போராட்டத்தைப் பற்றி கொலோசெயருக்கு எழுதின கடிதத்தில் குறிப்பிடுவதை வாசிக்கிறோம்.

கொலோ. 2:1-ம் வசனம் " உங்களுக்காகவும் லவோதிக்கேயாவி லிருக்கிறவர்களுக்கிறவர்களுக்காவும், சரீரத்தில் என் முகத்தைக் கா ணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன் என்கிறார்". அப்போஸ்த லர்களில் குறிப்பாக பவுலை கர்த்தர் அதிகமாக எடுத்து ஊழியத்திலே பயன்படுத்தினார். இவரால் சுகமாக்கப்பட்டவர்கள் அநேகராயிரு ந்தார்கள். ஆனால், அவருக்கு பாடுகள் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்தது. " மரணமானாலும் , ஜீவனானாலும், தேவதூதர்களானாலும். அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானா லும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட் டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்கிறார் (ரோ. 8:38-39). அந்த அளவு இயேசுவின் மீது அன்புள்ளவராயிருந்தார். அவர்மீது வைத் துள்ள அன்பை எந்த அதிகாரங்களினாலும் பிரிக்கமுடியாது என்பது பவுலுடைய ஆணித்தரமான நம்பிக்கையாக இருந்தது. உங்களுடைய அன்பும், நம்பிக்கையும் எத்தகையது? சின்ன சின்ன கஷ்டங்கள் வந்த வுடன் அநேகர் உங்களைப் பார்த்து கேட்கக்கூடும் உங்களுடைய ஆண்டவர் உங்களை கைவிட்டு விட்டாரா? ஏன் இந்த கஷ்டங்கள் போராட்டங்கள் என்று கேட்ககூடும். நீங்கள் இப்படி கேட்கக்கூடியவர் களுக்கு மத்தியில் சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக ஜீவிக்கவேண்டும்.

மூன்றாவது. "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டா னவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக், 14:33.). நாம் உலகத்தில் வாழ்கிறோம். உலகத்தில் உள்ளவைகள் நம்முடைய வாழ்க் கைக்குதேவை. அவைகளையெல்லாம் வெறுத்துவிட்டால் நாம் எப் படி வாழ்வது என்று நினைக்கிறீர்கள். இந்த வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும் முன்பு (1 யோவான் 2:15)ம் வசனத்தை படித்துவிட்டு பின்பு இதனுடைய விளக்கத்தை அறிவோம். "உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை". ஆம், உலகத்தில் நாம் இருக்கிறோம். ஆனால், உலகத்தில் உள்ளவைகளில் அன்புகூரா திருக்கவேண்டும். எனவே தான், என்னிலும் அதிகமாய் நேசிக் கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்றார். நேசம் வேண்டும் இயே சுவுக்கு மேலாக எதையும் நாம் நேசித்துவிடக்கூடாது. அது நம்முடைய விசுவாசத்திற்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்துவிடும். உலகத்தில் உள்ளவைகள் என்று சொல்லும்போது குடும்பம், பொருட்கள், நிலங் கள் இன்னும் இதுபோன்றவைகள் அடங்கும். இவைகளை ஒருவன் நேசிக்கும் போது பிதாவின் அன்பை இழக்கிறான். இவைகளை நமக்கு கொடுத்த தேவனுக்கு அவன் முதலாவது நன்றியுள்ளவனாயிருக்க வேண்டும். இதையே பிதாவாகிய தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆபிரகாமை தேவன் அழைத்தபோது; ''நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரனூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக் கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில் அவனுக்குச் பிள்ளையில்லாதிருக்கும்போது, உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்'' (அப், 7:3-5). ஆபிரகாம் உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளையும் நேசிக்காதவனாயிருந்தபடியால் அவைகளை அவன் விட்டு விட்டு கர்த்தர் தமக்கு காண்பித்த தேசத்திற்கு விசுவாசத்துடனே சென்றான்.

தேவனுக்கு மேலாக ஆபிரகாம் தன் தகப்பனை நேசிக்கவில்லை. அப்படிஅவர் நேசித்திருப்பாரேயானால், தகப்பனுடைய வழியில் ஒரு விக்கிரகாராதனைக்காரனாக இருந்திருப்பார். அவர் தேவனை நேசித்தபடியால் தகப்பனுடைய வழியை தெரிந்துகொள்ளாமல் கர்த்தர் காட்டிய வழியில் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் புறம்பே தள்ளிவிட்டு காணாத தேசத்திற்கு கடந்துவந்தார் எனக் காண்கிறோம். நீங்களும் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு செலுத்தாமல் இயேசுவின் மீது அன்பு செலுத்துங்கள். அப்பொழுது அவருக்கு சீஷராயிருப்பீர்கள்.

''இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார்'' (யோவா. 8:31). இயேசுவுக்கு சீஷர்களாயிருப்பதற்கு ஒரே தகுதி அவருடைய உபதேசத்தில் நிலைத்தருக்கவேண்டும். அவருடைய உபதேசம் பாரமான ஒன்றல்ல. அவைகளின்படி ஒருவன் வாழமுடியும் என்பதற்கு ஆண்டவர் இயேசு நமக்கு முன் மாதிரியை முன்வைத்துச் சென்றுள்ளார். அந்த மாதிரியின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது நாம் இயேசுவுக்கு ஏற்ற சீஷர்களாயிருப்போம். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சீஷர்கள் இயேசுவின் போதனையின்படி வாழ்ந்தார்கள். அதைக் குறித்து ஜனங்களுக்குப் போதித்தார்கள். அந்தப் போதனையின்படியாக சபையை உருவாக்கினார்கள். இதைக்குறித்து அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இன்றைக்கு நீங்கள் அந்தப்படியாக நடந்துகொள்ளுகிறீர்களா ? அப்படி நிலைத்திருக்கும்போது மெய்யாகவே அவருடைய சீஷர்களாயிருப்பீர்கள். இல்லை யென்றால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். உங்களுடைய விசுவாசத்தை இயேசுவின் உபதேசத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

# ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகம்

Lamb Of God's Book of Life

**Bro. பென்னி மார்ட்டின்**

**ந**ம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை இரண்டிரண்டு பேராக ஊழியத்திற்கு அனுப்பும் போது புறப்பட்டு போங்கள் ஆட்டுக் குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன் என்றார் [லூக்கா 10:3]. சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்துவினால் அதிகாரங் கொடுக்கப்பட்டது. ஊழியத்தை வெறுப்புடனே அல்ல, வெற்றிகரமாகச் செய்ததன் விளைவாக வெற்றி மேல் வெற்றி அடைந்தனர். ஒரு கட்டத்தில் அவர்கள் நம் கர்த்தரிடத்தில் வந்து, ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்று சந்தோஷத்தோடே சொன்னார்கள். அதற்கு நம் ஆண்டவர் ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்று சொன்னார். [லூக்கா 10:17,20].

**1. நம் நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பது தேவன் நம் ஒவ்வொருவரையும் நெருக்கமாக அறிந்திருக்கிறார் என்பதைச் சொல்கிறது.**

பரபரப்பும், அவசரமும் நிறைந்த இவ்வுலகை உண்டாக்கி, அதை இயக்கிக் கொண்டிருக்கிற தேவன் நம் ஒவ்வொருவரையும் பெயர் பெயராக அறிந்திருக்கிறார் என்னும் உண்மை உவகையின் உச்சிக்கே நம்மைக் கொண்டு செல்கிறது. தேவ தாசனாகிய மோசேயின் மீது தாம் கொண்டிருந்த அதீத அக்கறையை வலியுறுத்து வதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார் [யாத்திராகமம் 33:17]. பரிசுத்த தேவனுடைய பாதுகாப்பும், பராமரிப்பும் பரிபூரணமாக நமக்கு உண்டு என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 10 ஆம் அதிகாரத்தில் தம்மை நல்ல மேய்ப்பராக அடையாளப்படுத்தி, ஆடுகளாகிய நம்மை பேர்சொல்லி அழைக்கும் போது அவருடனான நெருக்கமும் நெடுநாள் தொடருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்தியிருந்த தன் உடன் ஊழியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களுடைய நாமங்கள் ஜீவபுத்தகத்தில் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

(பிலிப்பியர் 4;3) நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்தை சபைக்கு எழுதிய கடிதத்தில் ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுத்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்று நிச்சயப்படுத்துகிறார் (வெளிபடுத்தின விசேஷம் 3:5).

**2. தேவன் நம்மைப் பேர்பேராக அறிந்திருக்கிறார் எனும் உண்மை அது ஒருவர் தனிப்பட்ட ரீதியில் பெற்றுக் கொள்ளும் ஒன்று என்பதை நினைவுப்படுத்துகிறது.**

ஜீவ புத்தகம் உலகிலுள்ள நாடுகளின் பெயர்களை பரிசீலித்து பட்டியலிடவில்லை. மாறாக, தனிப்பட்ட நபர்களின் பெயர்களை தவிர்க்காமல் பட்டியலிடுகிறது. இரட்சிப்பு என்பது ஓர் இரவில் இரவலாக பெற்றுக் கொள்ளும் இயந்திரப் பொருளல்ல. ஒருவருடைய தனிப்பட்ட விசுவாசத்துடன் கீழ்ப்படிதலையும் இணைந்து பல சிரமங்களுடன் நாம் பெற்றுக் கொள்ளும் ஒன்றாகும். இரட்சிப்பு தேவன் நமக்கு இலவசமாகத் தரும் ஈவு என்றாலும் கூட தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய நாம் பிரயாசப்பட வேண்டியதாயிருக்கிறது. ஒருவர் தன் குடும்பப் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதினாலோ, சபையில் தான் அங்கம் வகிப்பதினாலோ, பரலோகம் போக முடியாது, தேவனோடு தனிப்பட்ட முறையில் நெருக்கமான உறவை கொண்டு அந்த உறவில் விரிசல் ஏற்படாதபடி முறை தவறாத வாழ்க்கை வாழ்வதன் மூலமாகத்தான் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஜீவ புத்தகத்தில் பெயர்கள் தோராயமாக எழுதப்படுவதில்லை, மிகத்துல்லியமாக எழுதப்படுகிறது. எந்தப் பெயர்களை எழுத வேண்டும் என்பதை தேவன் அறிவார். கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் (11 தீமோத்தேயு 2:19) இப்புத்தகத்தில் பிழை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை, தகுதியில்லாதவர்களுடைய பெயர்கள் ஒரு போதும் இடம் பெறுவதில்லை. அதே நேரத்தில் இடம் பெற வேண்டிய பேர்கள் ஒரு போதும் விடுபடுவதுமில்லை.

**3. புதிய பிறப்பின் போது ஜீவ புஸ்தகத்தில் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன.**

இவ்வுலகில் ஏழை, பணக்காரர், படித்தவர்கள் படிக்காதவர்கள் என ஏராளமான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. ஆனால், வேதாகமத்தின் அடிப்படையில் இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் தான் இருக்கிறார்கள். மறுபடியும் பிறந்தவர்கள், மறுபடியும் பிறக்காதவர்கள்.

வேறுவிதமாகச் சொன்னால், பரலோகத்தில் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள், எழுதப்படாதவர்கள். இதில் நாம் எந்த வகை என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்த வருடைய வாழ்க்கையிலும் மறுபிறப்பு அல்லது புதிய பிறப்பு என்பது மிகவும் முக்கியமானது. மார்க்கப் பிரிவினை கூட்டத்தார், மத்தியில் மறுபிறப்பு என்னும் வார்த்தை மிகவும் பிரசித்த மாயிருக்கிறது. அவர் களுடைய பார்வையில் மறுபிறப்பு என்பது அந்நியபாஷைகளில் பேசுவது, அற்புத அடையாளங்களைச் செய்வது போன்றவைகளைக் குறிக்கும். இதற்கு வேதாகம ஆதாரம் ஒன்றுமில்லை. இருந்த போதிலும், அவர்கள் நம்மைப்பார்த்து மறுபடியும் பிறந்துவிட்டீர்களா என்று கேள்வி கேட்கும் போது நாம் இல்லை என்று பதிலளித்தால் அவர்கள் நம்மை வேற்று கிரகவாசிகளைப்போல் வேடிக்கைப் பார்ப்பார் கள். மறுபிறப்பைப் பற்றி நிக்கொதேமுக்கு நம் ஆண்டவர் ஆழமாக விளக்கிவிட்டார். ஒருவன் ஜலத்தினாலும், ஆவியானாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய் யாகவே மெய்யாகவே உனக்குச்சொல்லுகிறேன் [யோவான் 3:5]. அதாவது, ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானத்தினாலும், ஆவியானவர் வெளிப்படுத்தியிருக்கிற ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழி வில்லாத வித்தினாலேயும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறார் [Iபேதுரு1:23].

பரலோகத்தில் உள்ள ஜீவ புத்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்பட்டி ருக்கிறதா இல்லையா என்பது இப்பூமியில் தேவனால் நமக்காகத் தரப் பட்டிருக்கிற புத்தகமாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கி றவைகளை நாம் எப்படி விசுவாசிக்கிறோம், எப்படி கைக்கொள்கி றோம் என்பதைப் பொறுத்தே அமையும். நாம் தேவனுடைய வார்த்தை களைக் கேட்டு விசுவாசித்து, பழைய பாவங்களிலிருந்து மனந்தி ரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை யிட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் போது பரலோகத்தி லுள்ள ஜீவ புத்தகத்தில் நம் பெயர் எழுதப்படும். ஒரு கிறித்தவருடைய ஜீவியத்தில் ஜீவ புதத்தகத்தில் பெயர் எழுதப்படுவது மிகவும் அவசியமா னது, அதேநேரம் அந்தப் பெயரை தக்க வைத்துக் கொள்வது அதை விட அவசியமானது.

✝

## தேவன்
# சமாதானப் பிரபு

## The Prince of Peace

## Russ Vickers

**நா**ம் சமாதான குறைச்சலைப் பற்றிப் பேசும்போது, இவ்வுலகில் சமாதானம் என்பது சாத்தியமே இல்லை என்று பெரும்பாலும் உணர்கிறோம். நாம் இப்பூமியில் ஆதாமும், ஏவாளும் வாழ்ந்த நாட்களை நினைத்துப் பார்கிறோம். அந்நாட்களில் இப்பூமியில் சமாதானம் என்பது உண்மையான ஒன்றாக இருந்தது. இருந்த போதிலும், பாவம் அந்த சமாதனத்தை எடுத்துப் போட்டுவிட்டது. பாவத்தின் விளைவுகள் சண்டை சச்சரவுகள் மற்றும் மரணம் போன்றவைகளாகும். வாழும் இவ்வுலகில் நம் குடும்பத்தில், சமுதாயத்தில், சபைகளில், தேசங்களுக்கிடையே சமாதானம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

ஏசாயா 9:6 ல், பழைய ஏற்பாடு சமாதனப் பிரபுவாகிய மேசியாவைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்வ வல்ல ராஜாவின் குமாரனாயிருக்கிறார். இயேசு கிறிஸ்து புதிய ஆவிக்குரிய ராஜ்யமாகிய சபையில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறபடியால் நாம் இன்று களிகூருகிறோம். Burton Coffman "இவ்வுலகம் அறிந்திருக்கிற ஒரே சமாதானப்பிரபு இயேசு கிறிஸ்துதான் என்றும், இவர் ஒருவரே என்றென்றும் சமாதானப் பிரபுவாக இருப்பார்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தை பாவத்திலிருந்து, ஆவிக்குரிய வியாதியிலிருந்தும் விடுவிக்க வந்தார். "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ 1:20). வரலாற்றில் தியாகத்திற்கு சிலுவைதான் மிகச்சிறந்த உதாரணமாயிருக்கிறது. நாம் தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்போது அம் மன்னிப்பை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். இரட்சிப்பின் திட்டம் வெளிப்படையாகவும், புரிந்துகொள்ள எளிதாகவும் இருக்கிறது. அதன் மூலமாக நாம் தேவனிடத்தில் உண்மையான சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும். நம் இரட்சகரின் இரத்தத்தின் மூலமாகவும், அவருடைய வார்த்தையின் மூலமாகவும் நாம் சமாதானமாக வாழும்போது மற்றவர்களோடு சமாதானமாக இருக்க முடியும்.

தேவன்

# எல்லாமே அவரைப் பற்றியதாக இருக்கிறது

It is all about Him !

## Rodney Nulph

**நா**ம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் தகுதியின் அல்லது உரிமையின் காலமாயிருக்கிறது. வேறுவிதமாகச்சொன்னால், மனிதன் ஒன்றுக்காக வேலை செய்கிறானா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படமால் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்குத்தான் தகுதியானவன் என்று நினைக்கிறான். உதாரணமாக, பெரும்பாலானோர் தாங்கள் உணவுக்காக வேலை செய்கிறார்களா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், உணவை பெற்றுக் கொள்ள தகுதியானவர்கள் என்று நினைக்கிறார்கள். உண்மையில் சொல்லப்போனால், "நான் அதற்கு தகுதிப்பெற்றிருக்கிறேன்" அல்லது "எனக்கு உரிமை உண்டு" என்பது நாம் இன்றைய நாட்களில் அடிக்கடி கேட்கும் அல்லது சிலரால் காட்டப்படும் சொற்றொடராக இருக்கிறது.

இந்த மனப்பான்மை ஆராதனை வளையத்திற்குள்ளும் நுழைந்து விட்டது. சோககரமாக, பலர் ஆராதனை என்பது தங்களுக்கான ஒன்றாகவும், தங்கள் விருப்பு வெறுப்புகள் சம்மந்தமான ஒன்றாகவும் கருதுகிறார்கள். சபையை வழிநடத்துபவர்களில் சிலர்கூட தேவன் புண்படுவதைவிட மனிதர்கள் புண்படுவதைக் குறித்து அதிகமாக அக்கறைப்படுவது வேடிக்கையாயிருக்கிறது. இது இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு பிரியமாயிருப்பதை விட மனிதர்களுடைய விருப்பத்தின்படி செய்வதையே தெளிவாகக் காட்டுகிறது. மற்றவர்களைப் புண்படுத்துவது நம் பிரதான நோக்கமாக இல்லாமல் இருப்பது நன்றாக இருந்தாலும் கூட தேவன் எதை விரும்புகிறார் என்பதே நம் பிரதான அக்கறையாக இருக்க வேண்டும். ஆராதனை என்பது நம்மைப் பற்றியது அல்ல, அது தேவனைப் பற்றியதாகும். ஆராதனை என்பது என் தனிப்பட்ட சௌகரியத்தைப் பொறுத்து அமையும் ஒன்றல்ல. நாம் பதிலளிக்க வேண்டிய கேள்வி, நாம் ஏன் தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதாயிருக்கிறது. வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்து தாங்குகிறவராகிய தேவனை நாம் ஏன் ஆராதிக்க வேண்டும்?

முதலாவதாக, இது தேவனைப் பற்றியது. ஏனென்றால், தேவன் பரிசுத்தமாயிருக்கிறார். வேதாகமக் கண்ணோட்டத்தில் நாம் பரிசுத்தம் என்னும் வார்த்தையை பார்க்கும்போது அது **நிர்மலம்?** தூய்மை எனும் பொருள்களைக் கொடுக்கிறது : தேவன் பரிசுத்தராயிருக்கிறார், இது

அவருடைய அடிப்படை பண்புகளுள் ஒன்றாக இருக்கிறது. சங்கீதக்காரன் இதை முழுமையாக அறிந்தவராக இருக்கிறபடியால்தான் "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதப்படியிலே பணியுங்கள் : அவர் பரிசுத்தமுள்ளவர்" என்று பாடுகிறார் (சங்கீதம் 99:5). சில வசனங்களுக்குப் பிறகு இதே கருத்தை சங்கீதக்காரன் மீண்டும் வலியுறுத்துகிறார் (சங் 99:9) தேவன் பரிசுத்தராக, தூயவராக நம் போற்றுதலுக்கு பாத்திரராக அவர் ஒருவரே இருக்கிறபடியால் நாம் அவரை ஆராதிக்கிறோம். தேவன் முடிவேயில்லாத பரிசுத்தராயிருக்கிறபடியால் அவர் நம் ஆராதனைக்கு பாத்திரராயிருக்கிறார். நான் தேவனை ஏற்றுக்கொள்கிறேனோ இல்லையோ அவர் தேவனாகவே இருக்கிறார். " எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை" (அப்போஸ்தலர் 17:25) (தேவன் பரிசுத்தராயிருக்கிறபடியால் ஆராதனை என்பது தேவனைப் பற்றியதாயிருக்கிறது).

இரண்டாவதாக, தேவன் அக்கறைப்படுபவராக இருக்கிறபடியால் எல்லாமே அவரைப் பற்றியதாக இருக்கிறது. தேவனுடைய அக்கறை அன்பு மற்றும் நற்கிரியைகளுடன் கூடிய குணாதிசயங்கள் அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக விழுந்து, அவருடைய மகத்தான நாமத்தைத் துதிக்க நம்மைத் தூண்டவேண்டும். சங்கீதக்காரனுடைய கேள்வியை வாழ்க்கையோடு சம்மந்தப்படுத்திப் பார்க்க முடியும். "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" (சங்கீதக்காரன் 8:4). ஆராதனையை சிறப்பாக ஆக்குவதின் ஒரு பகுதி நம்முடைய ஒன்றுமில்லாமையும், தேவனுடைய மகத்துவத்தையும் அது நமக்கு உணர்த்துகிறது. தேவரீர் பூமியை விசாரித்து, அதற்கு நீர் பாய்ச்சுகிறீர் ; தண்ணீர் நிறைந்த தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர் ; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர் "(சங்கீதம் 65:9). இவ்வசனங்களை எல்லாம் ஒருவர் வாசித்துவிட்டு ஆராதனை என்பது அவர்களுக்குரியது என்று எப்படி உணரமுடியும் ? ஆராதனை என்பது நன்றி நிறைந்த இருதயத்திலிருந்து நிரம்பி வழிகிறது. ஒருவர் உண்மையாகவே தேவன் தனக்குச் செய்த, செய்து வருகின்ற, செய்யப்போகிற எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது இருதயப்பூர்வமான துதிதான் காணிக்கையாக இருக்க வேண்டும் ! தேவன் அக்கறையுள்ளவராக இருக்கிறபடியால் ஆராதனை என்பது அவரைப் பற்றியதாயிருக்கிறது.

மூன்றாவதாக, தேவன் எல்லாவற்றையும் செய்ய வல்லவராயிருக்கிறபடியால் ஆராதனை என்பது அவரைப்பற்றியதாயிருக்கிறது. தேவ

அன்பு நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறது. அவருடைய ஞானம் நம்மை ஆசீர்வதிப்பதெப்படி என்பதை அறிந்திருக்கிறது. தேவன் சர்வத்தையும் செய்ய வல்லவராயிருக்கிறார்! பவுல் பிலிப்பி பட்டணத்திலிருந்த சகோதர, சகோதரிகளுக்கு இவ்விதமாக நினைப்பூட்டினார் "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19; எபேசியர் 3:20). தேவனுடைய சர்வ வல்லமையை நாம் அங்கீகரிக்கத் தவறும் போது அவர் அவரைச் சரியாக ஆராதிக்கத் தவறுகிறோம். சபைக்கட்டிடங்களில் பல இருக்கைகள் படுத்து உறங்கும் பரிசுத்தவான்களால் நிறைந்திருக்கிறது. இவர்களுக்கு தேவன் எவ்வளவு வல்லமை உள்ளவர் என்பதைப் பற்றி எதுவும் தெரியாது. **நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்** என்பவர் நம்மோடிருந்தும் நம் ஆராதனை முறை வெறும் சடங்காச்சாரமாக இருக்கிறதே தவிர ஆவிக்குரிய எழுச்சியை ஏற்படுத்த வில்லை.

தேவன் தகுதி அல்லது உரிமை மனப்பான்மையை ஆராதனை காரியங்களில் ஏற்றுக் கொள்ளமாட்டார். தேவன் நான் எதை விரும்புகிறேன், விரும்பவில்லை என்பதை பொருட்படுத்துவதில்லை. அவரே ஆராதிக்கப்படத்தக்கவர். (மத்தேயு 4:10). நாம் ஆராதிக்கும் போது நடுங்க வேண்டும். ஏனென்றால், நாம் பரிசுத்த இடத்தில் இருக்கிறோம். அடுத்த முறை நீங்கள் சர்வ வல்ல தேவனை ஆராதனையில் அணுகும்போது "கர்த்தரோவென்றால் தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது" (ஆபகூக் 2:20) என்பதை மனதில் கொள்ளுங்கள். ஆராதனை என்பது உங்களைப் பற்றியதும், என்னைப் பற்றியதும் அல்ல, எல்லாம் அவரைப் பற்றியதாயிருக்கிறது. ✝

---

**ஆட்டுக்குட்டியானவர்**

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் – வெளி 5:12

ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் – வெளி 5:7

முத்திரையை உடைக்கும் ஆட்டுக்குட்டியானவர் – வெளி 6:1

ஆட்டுக்குட்டியானவரை பின் செல்லும் கறைபடாதவர்கள் – வெளி 14:4

ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமான ஆட்டுக்குட்டிமானவர் (வெளி 17:14)

### தேவன்
## காலை தோறும் புதியவைகள்

### Fresh Every Morning
### **Charles C. Pugh III**

**கோ**டைகாலத்தின் சந்தோஷங்களுள் ஒன்று பசுமையான தோட்டத்து காய்கறிகளாகும். பசுமையான புதிய பீன்ஸ், தக்காளி, வெள்ளரி, மற்றும் இனிப்பு சோளம் போன்றவைகளை நாம் ஒன்று சேர உண்ணும்போது ஒரு நல்ல ருசியும், சத்துள்ள ஆகாரமும் புசித்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. என்னைப் பொறுத்தவரை வறுத்த வெண்டைக்காய், குளிர்ந்த தேயிலை மற்றும் நாகப்பழத்தினால் செய்யப்பட்ட ஒருவகை இனிப்பு பதார்த்தம் போன்றவைகள்தான் ஒரு முழுமையான ஆகாரத்தை சிறப்பாக்குகிறது.

காய்கறிகளை செடியிலிருந்து பறித்த உடனே சாப்பிடுவது மிகவும் சிறப்பாக இருக்கும். அவைகள் பார்ப்பதற்கும், புசிப்பதற்கும் அருமையாக இருக்கும். இவைகளையெல்லாம் நான் நினைத்துப் பார்க்கும் போது என் மூன்று பிள்ளைகளும் வளர்ந்து கொண்டிருந்த அந்த சிறுவயதில் மிகவும் மகிழ்ந்த அந்த கோடைகால அனுபவத்தை விருப்பத்தோடு திரும்பிப் பார்க்கிறேன்.ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் என் பிள்ளைகள் போட்டிபோட்டுக்கொண்டு, இனிப்பு மக்காச்சோளங்களை விற்பார்கள். நாம் அமெரிக்காவிலுள்ள Reedsville, ohio போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள வயல்வெளிகளிலிருந்து பசுமையான காய்கறிகளை பறித்துக்கொண்டு வீடுதிரும்பும் அனுபவம் அலாதியானது. நான் என் பிள்ளைகள் மேற்கு வெர்ஜினியாவிலுள்ள ஒரு சாலையோர கடையில் விற்கத்தக்க ஒரு நாளுக்கு உண்டான காய்கறிகளை அனுப்பி வைப்பதுண்டு. அந்த கோடைக்காலம் சிறுபிள்ளைகளுக்கு நல்லதொரு கோடைகாலமாக அமைந்தது. நாங்கள் விரும்பிய போதெல்லாம் அந்த கோடைக்காலத்தில் புதிய, பசுமையான, இனிய மக்காச்சோளம் கிடைத்தது. காலைதோறும் மக்காச்சோளம் புதிதாக, பசுமையாக இருந்தபடியால் அதை விற்பதில் எங்களுக்கு பிரச்சனை ஒன்றும் இருக்கவில்லை.

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே; அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள், உமது உண்மை பெரிதாயிருக்கிறது " என்று வேதாகமம் சொல்கிறது" (புலம்பல் 3:22,23) இவ்வார்த்தைகள் எருசலேமின் வீழ்ச்சிக்குப்பிறகு எழுதப்பட்டன (கி.மு 586) இப்புலம்பல் புத்தகம் ஒரு காலக்கட்டத்தில் பெருமையில் இருந்த எருசலேமின் தற்போதைய கண்ணீர் நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது. இது பாவத்தினால்

அழிக்கப்பட்ட பட்டணத்தின் அடக்க நிகழ்வாக இருக்கிறது [புலம்பல் 1:9; 3:42;5:16]. இருந்தபோதிலும், பட்டணத்தின் அழிவுச்சிதைவுகள் மத்தியிலும் கர்த்தருடைய இரக்கங்கள், கிருபைகள் காணப்பட்டிருக்கின்றன. கர்த்தர் நல்லவர் [புலம்பல் 3:25]. "ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார். அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார்" [புலம்பல் 3:31,32].

பவுல் "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக : நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" என்று சொல்கிறார் [கலாத்தியர் 6:9] வயல்வெளியில் ஒரு விவசாயி கடும் வெயிலில் உழும்போது, விதைக்கும் போது, உரமிடும் போது, களை எடுக்கும் போது, வறட்சியை எதிர்கொள்ளும் போது, சோர்ந்துபோய் விவசாயத்தை விட்டு ஓடுவதில்லை. அதிக வெப்பமான நிலை ஒரு விவசாயியை சோர்வடையச்செய்து விவசாயம் போதும் என்ற நிலைக்குத் தள்ளிவிடும். ஆனால் எந்த ஒரு விவசாயும், எவ்வளவு வெயிலினால் சோதிக்கப்பட்டாலும் கூட விவசாயத்தை விட்டு வெளியேறுவதில்லை. வெற்றிகரமான விவசாயத்திற்கு கடின உழைப்பும், தொடர் முயற்சியும் அவசியப்படுகின்றன.

அதேபோல், ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நற்கிரியைகளை பொறுமையோடு தொடர்ச்சியாக செய்வது அவசியமாக இருக்கிறது [ரோமர் 2:7] சில வேளைகளில் ஊழியத்தின் பாதையில் களப்பணியில் வெப்பம் அதிகமாக இருக்கும், அடுத்த பாதியில் நாம் உழ முடியாது என்று நினைப்போம். ஆனால், நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்போம் "என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் [கலாத்தியர் 6:9]".

நற்கிரியைகளைச் செய்தல், ஆவியில் நடத்தல், போன்றவைகள் நம் ஒட்டுமொத்த ஆற்றலையும், பொறுமையையும் எடுத்துப் போடுகிறது. களம் கடும் வெப்பமாக இருந்தாலும் கூட நாம் தொடர்ச்சியாக விதைத்துக் கொண்டே, தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே இருக்கவேண்டும். கோடைக்காலத்தில் கடும் வெயிலில் நாம் படும் பாடுகளெல்லாம் மகத்தான அறுவடையை எண்ணிப் பார்க்கும் போது ஒன்றுமே இல்லை. Lenski என்னும் வேத வல்லுநர் "ஆசீர்வதிக்கப்பட்ட அறுவடைகாலம் வரும் போது, சோர்வை ஏன் ஒரு பொருட்டாக நினைத்து இளைப்பாற ஏன் ஏங்கினோம் என்று எண்ணத்தோன்றும்" என்று சொல்கிறார்.

வாழ்க்கையில் சுவாரசியமில்லாமல் சலிப்பு ஏற்படும்போதும், உற்சாகம் குறைந்து விசுவாசம் பலவீனமடைந்து நம் ஆவி சோர்ந்து போகிறது. ஆனாலும், தேவனுடைய இரக்கங்களும், கிருபைகளும் இருக்கின்றன. அவைகள் காலை தோறும் புதியவைகளாக இருக்கின்றன. ‘‘ கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்; பூர்வ காலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும் (புலம்பல் 5:21)”. நாம் பரலோகத்தை எண்ணிப் பார்த்தால் அதற்கான எத்தனை பாடுபட்டாலும் அது தகும்.

✝

## ஆட்கள் தேவை

பாவத்தை நியாயப்படுத்துகிற சமுதாயத்தில்
பாவத்தை பாவம் என்று பறை சாற்ற ஆட்கள் தேவை

சுபாவமாய் சகலவற்றையும் அனுபவிப்பதை மறந்துவிட்டு
தேவ சிருஷ்டிப்பின் நோக்கத்தையே மாற்றிவிட்டு
உங்கள் சரீரங்களை இச்சைரோகங்களுக்கு
இஷ்டம் போல விட்டுக்கொடுத்த மனிதர்களுக்கு
தேவ கோபாக்கினையை சொல்ல ஆட்கள் தேவை

உறவுகளின் உன்னதத்தை அறிவித்திடவும்
உணர்வுகளின் உள்நோக்கத்தை உணர்த்திடவும்
உன்னதமான ஊழியத்தை செய்ய ஆட்கள் தேவை.

# தைரியமுள்ள விசுவாசம்

Courageous Faith

**Therman Hodge**

விசுவாசம் என்பது வெறுமனே தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதல்ல. ஆனால், அதன்படி நடக்கச் செய்யும் தைரியமாகும். இந்த அளவு விசுவாசம் உங்களிலும், என்னிலும் காணப்படட்டும்.

பிரதானமான ஒரு வேதாகம கதாப்பாத்திரம் ராஜாவை எதிர்க்கும் அளவுக்கு தைரியம் கொண்டிருந்தார் ( எபிரெயர் 11:23). மோசேயின் பெற்றோர் தைரியமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் குழந்தை மோசேயை மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள். பின்பு மோசேயின் தாய் ஒரு நாணற்பெட்டியில் அவனை வைத்து நதியிலே விட்டாள்.

ஒரு குழந்தையை இப்படிச்செய்ய ஒரு தாய்க்கு எது காரணமாயிருந்திருக்கும் ? அதற்கு மேல் குழந்தையை அந்தத் தாயால் வளர்க்க முடியாதா? அக்குழந்தை அக்குடும்பத்திற்கு பாரமாக இருந்ததா ?

இல்லை! புதிதாகப் பிறந்த எல்லா யூத ஆண் பிள்ளைகளும் கொல்லப்பட வேண்டும் என்பது ராஜாவின் கட்டளையாக இருந்தது. இத்தகைய சூழ்நிலையில் நீங்கள் உங்கள் குழந்தைக்கு என்ன செய்திருப்பீர்கள் ? மோசேயின் தாய் தேவன் பேரில் விசுவாசம் வைத்தார். இந்த சம்பவங்களெல்லாம் (யாத்திராகமம் 1:22–2:10) ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மோசேக்கு தன் ஜனங்களை அடையாளங் கண்டுகொள்ள தைரியம் இருந்தது (எபிரெயர் 11 : 24–26). அவர் தைரியமாக தன் ஜனங்களோடே பாடுபட்டார் (எபிரெயர் 11:24). தன் சொந்தத் தாயினால் வளர்க்கப்பட்டு, தன் தேசத்தின் குழப்பமான நிலையை புரிந்துகொண்டபடியால் மோசே அரண்மனையில் வாசம் செய்வதை அறவே வெறுத்தார்.

மோசே கிறிஸ்துவுக்காக பாடுகள் பட்டார்(எபிரெயர் 11:25–26) (யாத்திராகமம் 2:11–14). கிறிஸ்து நமக்காக பாடுகள்பட்டார்(I பேதுரு 1:21–23). நாம் கிறிஸ்துவுக்காக பாடுகள்பட விருப்ப முள்ளவர்களாயிருக்க வேண்டும் (II தீமோத்தேயு 3:12) கடினமான காலக்கட்டங்களில் நாம் தேவனுடைய பிள்ளைகளோடு

நிற்கிறவர்களாய் இருக்க வேண்டும். இவ்வுலகப் பொருள்களைவிட கிறிஸ்துவுக்காக பாடுபடுவது எவ்வளவோ மேலானது (மத்தேயு 5:11, 12).

தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிர்மறையான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கு விசுவாசம் அவசியப்படுகிறது (எபிரெயர் 11:28–29). கடைசிவரை என்பது எகிப்திலுள்ள மனிதன் முதல் மிருக ஜீவன்கள் மட்டும் முதற்பேராயிருக்கிறவைகளெல்லாம் வதம் பண்ணிப் போடுவதாயிருந்தது. ஆனால், இஸ்ரவேலர்களின் வீடுகளின் நிலைகால்களிலே இரத்தம் தெளிக்கப்பட்டிருந்தது. அதனால் அவர்கள் தப்புவிக்கப்பட்டார்கள் (யாத்திராகமம் 12 : 21–23). எகிப்தியரின் வீடுகளில் இரத்தம் தெளிக்கப்படவில்லை. இன்று நாம் இரட்சிக்கப்பட இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டிருக்க வேண்டும் (I யோவான் 1:5–7 ).

எகிப்தை விட்டு ஓடிவந்த இஸ்ரவேலர்களுக்கு செங்கடலைக் கடப்பதற்கு விசுவாசமும், கீழ்ப்படிதலும் அவசியமாயிருந்தது. (யாத்திராகமம் 14 : 21–28). அவர்களுக்கு விடுதலை, தேவன் இரண்டாகப் பிரித்த செங்கடல் மூலமாக வந்தது. அந்த செங்கடல் இரண்டாகப் பிரிய இஸ்ரவேலர்கள் தேவன் மீது விசுவாசம் வைக்க வேண்டியதாயிருந்தது. அந்த சமுத்திரத்தில் பிரவேசித்த எல்லா இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்பட்டார்கள். அதே போல் பின்தொடர்ந்த எல்லா எகிப்தியர்களும் அழிக்கப்பட்டார்கள். நமக்கு மோசேயைப் போல் தைரியமான விசுவாசம் இருக்கிறதா? இன்று நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க மோசே கொண்டிருந்த அந்த அளவு விசுவாசம் நமக்கு அவசியமாயிருக்கிறது.

விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். (எபிரெயர் 11:24–26).

✝

### அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

## பாம்பை கையாள்கிறவர்

( மாற்கு 16 : 14 - 20)

Snake Handler

**Lanny Smith**



**ந**ம் மத்தியில் இன்று பாம்பை கையாளுகிற சபைகள் இருக்கத்தான் செய்கிறது. அவ்வப்போது செய்திகளில் சிலர் பாம்பினால் கடிக்கப்பட்டு மரித்துப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டு கொண்டுதான் இருக்கிறோம். மாற்கு 16 ஆம் அதிகாரம் அப்போஸ்தலர்களின் அடையாளங்களை குறிக்கிறதாயிருக்கிறது [16:14,20;II கொரி 12:12]. இவ்வசனங்களெல்லாம் அப்போஸ்தலர் களுடைய காலத்தில் விஷப் பாம்புகள் கடித்தால் கூட அது அவர்களை ஒன்றும் சேதப்படுத்தாது என்பதைத்தான் காட்டுகின்றன. இருந்த போதிலும் , அந்த அற்புத அடையாளங்களெல்லாம் முதல் நூற்றாண்டிலேயே அப்போஸ்தலர்களோடு முடிந்து விட்டது. இன்று பாம்பு பிடிப்பவர்களுக்கும், அதை கையாள்பவர்களுக்கும் அந்த அளவு தேவனுடைய பாதுகாப்பு ஒன்றும் இல்லை.

சில வேளைகளில் நாமும் கூட பாம்புகளைக் கையாளுகிறோம், அப்படித்தானே ? சாத்தான் பழைய பாம்பாக இருக்கிறான் [ஆதியாகமம்3:1; வெளிப்படுத்தின விசேஷம் 12:9 ]. எனவே, சாத்தானிடமிருந்து சோதனைகள் வரும்போது நாம் அதை எப்படி சமாளிக்கிறோம்? [IIகொரிந்தியர் 11:3] இப்பாடத்திலிருந்து ஒரு கேள்வி " நீங்கள் எந்தப் பாம்பை கையாளப் போகிறீர்கள்? "

I **கெட்ட வார்த்தை** [ **எபேசியர் 4:29** ]

கெட்ட வார்த்தைகள் கெட்டுப்போன இருதயத்தின் வெளிப்பாடாயிருக்கிறது; அப்பாம்பை கையாள்வதினால் உங்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. மேலும், இது உங்களைக் கடிக்கும், இதில் ஆத்துமாவை இழந்து போகும் அபாயமும் இருக்கிறது.

II **குடிப்பழக்கம்** [**நீதிமொழிகள் 23 : 29–35 ; I பேதுரு 5:8**]

மது பானம் ஒருவருடைய தெளிந்த புத்தியை மந்தமாக்குகிறது, மது போதையில் இருக்கும் போது யாரும் தெளிந்த புத்தியுடன் இருக்கமுடியாது! இந்தப பாம்பை கையாண்டால் அது மிகப்பெரிய பாவங்களுக்குள் ஒருவரை வழிநடத்தும் !

III **போதை மருந்துகள்** ( **கலாத்தியர்** 15:20)

போதை மருந்துகளை ஒருவர் எந்த நிலையில் பயன்படுத்தினாலும் அது சுயநினைவை இழக்கச் செய்கிறது. இது ஒருவருடைய ஆரோக்கியத்தை வெகுவாக சேதப்படுத்துகிறது, ஆத்துமாவையும் ஆபத்திற்குள்ளாக்குகிறது !

IV **சூதாட்டம்** ( I **கொரிந்தியர்** 6:12)

இப்பழக்கம் உங்களை அப்படியே அடிமையாக்கி உங்கள் வேலையையும், குடும்பத்தையும், நண்பர்களையும் இழக்கச் செய்யும் ! இந்தப் பாம்பினால் தீண்டப்படுவது அபாயகரமானது.

V **உலகக்கவலைகள்** (**மத்தேயு** 13 : 22)

வேலை, பள்ளி, வீடு, குழந்தைகள் என ஒருவர் பரபரப்பாக இருக்கும் போது அது தேவனுடைய வார்த்தையை நெருக்கிப் போடுகிறது ! உங்கள் நோக்கம் நல்லதாக இருந்தாலும் கூட இந்த பாம்பு தேவனுடனான உங்கள் உறவை முறித்துப் போடுகிறது.

VI **பலதரப்பட்ட குடும்பப்பிரச்சனைகள்**

A. தவறான உறவு (நீதிமொழிகள் 6:27-35)
தவறான உறவு உங்கள் நற்கீர்த்தியை, உங்கள் திருமணத்தை, உங்கள் வேலையை சீர்குலைத்துவிடும்.

B. திருமண கூட்டாளியை துஷ்பிரயோகம் செய்தல் (எபேசியர்5:25-27)
பெண்களும் கூட சில சமயங்களில் துஷ்பிரயோகத்தில் ஈடுபட முடியும். ஆனாலும், சரீரப்பிரகாரமாக பலசாலியான ஆணால் தான் அதிகமாக பெண்ணுக்கு சரீரப்பிரகாரமாக தொந்தரவு கொடுக்க முடியும்.

VII **கலகக்கார பிள்ளைகள்** (**எபேசியர்** 6:1-3)

பிள்ளைகள் அடங்காதவர்களாக பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாமல் கலகம் செய்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெற்றோர்களைத் தாக்கலாம்.

நீங்கள் எப்படிபட்ட பாம்பைக் கையாள முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாலும் சரி, சாத்தான் சர்ப்பத்தின் உருவத்தில் வந்திருக்கிறான் என்று தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் கஷ்டப்படபோகிறீர்கள். உங்களால் செய்ய முடிந்த சிறந்த காரியம் தீயில் அதை உதறிவிட்டுச் செல்வதுதான் (அப்போஸ்தலர் 28:1–5). அந்தச் சாபத்திலிருந்து விடுபடுங்கள். நீங்களும் அதே காரியத்தை செய்து கொண்டு பாம்பை கையாளுகிறவர்களைப் பார்த்து பரிகாசம் செய்வது மாய்மாலமாகும் ( ரோமர் 2:1).

" மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை, தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்கு தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்" ( I கொரிந்தியர் 10 : 13 ).

"கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்கவும் அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் " (II பேதுரு 2:9).

**சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் (யாக்கோபு 1:12).**

✝

---

### சிலுவை எனக்கு என்ன செய்கிறது?

- என் பாவத்தை கண்டித்து உணர்த்துகிறது (அப்போஸ்தலர் 2:2–23)
- என்னை மாற்றுகிறது (வெளிப்படுத்தல் 1:5)
- என்னை நெருக்கி ஏவுகிறது (II கொரிந்தியர் 5:14)
- என்னைக் கட்டுப்படுத்துகிறது (கலாத்தியர் 6:14)

அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# உத்தம இருதயம்

## A Perfect Heart

## Roger Wright

"**ஆ**தலால் இந்நாளில் இருக்கிறது போல நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளை கைக்கொள்ள உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது " ( I ராஜாக்கள் 8 : 61). இவ்வார்த்தைகளெல்லாம் எருசலேம் ஆலயப் பிரதிஷ்டையின் போது சொல்லப்பட்ட சாலமோனின் வார்த்தைகளாகும். சாலொமோன் ராஜா அந்த மாபெரும் தேவாலயத்தின் ஆசீர்வாதமும், பாதுகாப்பும் அங்கே ஆராதிக்க வருபவர்களின் உண்மைத்தன்மை மற்றும் நேர்மை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் காண அவர் ஞான முள்ளவராக இருந்தார். ஜனங்கள் உத்தம இருதயத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று விரும்பியிருக்கிறார் சாலமோன் ராஜா. அது எப்படி சாத்தியம் ?

உத்தமமானது என்னும் வார்த்தை **சிறந்தது, பிழையற்றது** என்னும் பொருள்களைக் கொண்டுள்ளது. ஆனால், நாம் பெலவீனமானவர்கள், பாவமுள்ளவர்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால் பூரணமான இருதயத்தைப் பெற்றிருப்பது கடினமான காரியம். உத்தம இருதயம் அல்லது பூரண இருதயத்தின் விளக்கங்களாக கீழ்க்கண்டவாறு காண்போம்.

**உண்மையான இருதயம் தான் உத்தமமான இருதயம் :**

நாம் அவ்வப்போது தவறு செய்கிறோம். ஆனால், நம் இருதயங்கள் தேவனை பிரியப்படுத்த விரும்புகிறது. நம் விசுவாசம் காற்றினால் அடிபட்டு அலைகிற அலையைப் போல் இல்லாதபோது நம் இருதயம் உண்மையான இருதயமாக இருக்கும் ( யாக்கோபு 1 : 6 ).

**உத்தம இருதயம் சுத்த இருதயமாயிருக்கிறது :**

தேவன் பரிசுத்தமுள்ளவரும், மாசற்றவருமாயிருக்கிறார். அவர் பரிசுத்தமுள்ளவராயிருப்பது போல் நாமும் பரிசுத்தமுள்ள வர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார் ( I பேதுரு 1 : 15,16 ). சாலொமோன் கட்டிய தேவாலயம் அற்புதமானதும், மகிமையுள்ளதுமாயிருந்தது. ஆனால், அது இன்று தேவனுடைய ஆலயமாகிய அவருடைய ஜனங்களைப்போல் மகிமையுள்ளதாக இல்லை (I கொரிந்தியர் 3 : 16, 17 : 6 : 19 – 20 ). உத்தம இருதயம் நன்கு முதிர்ச்சி அடைந்த இருதயமாக இருக்கிறது.

நாம் எல்லாவற்றிலும் வளர்ந்து பூரணப்படும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் சிறுபிள்ளைகளைப் போல் நடந்து கொள்ளக்கூடாது. சாலொமோன் தன் வாழ்க்கையை நன்றாகத் தொடங்கினார். ஆனால், காலம் செல்ல செல்ல அவர் சுயநலம், பெருமை, பல மனைவிகள் போன்றவைகளால் தன்னைத் தேவனை விட்டுவிலக அனுமதித்ததின் விளைவு விக்கிரக ஆராதனையில் அவர் விழுந்து போக வழிவகுத்தது. நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளர்ந்து முதிர்ச்சி அடையும்போது தேவனைவிட்டு விலகுவதற்குப் பதிலாக அவரிடம் இன்னும் நெருக்கமாக கிட்டிச் சேர வேண்டும்.

நம் ஜீவியகாலமெல்லாம் தேவனைச் சேவிக்க உண்மையான இருதயம், சுத்தமான இருதயம், முதிர்ச்சி அடைந்த இருதயம் அவசியப்படுகிறது. இத்தகைய இருதயத்தை பெற்றுக் கொள்வதெ ன்பது சாத்தியமானதும், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் லட்சியமாகவும் இருக்க வேண்டும். ✝

---

தேவன் நம்மை சோதிக்க பிசாசுக்கு அனுமதி கொக்கிறார். தேவனுடைய நோக்கம் நாம் சோதிக்கப்படுவதன் மூலமாக பெலனடைய வேண்டு மென்பதுதான்.

ஆனால், பிசாசின் நோக்கம் நாம் தேவனிடத்திலிருந்து விழவேண்டும் என்பது. நாம் எப்படி ஆகவேண்டும் என்னும் முடிவு நம் கையில்தான் இருக்கிறது.

பிள்ளைகளுக்கு நாம் எதைக் கொடுக்க வேண்டும் என்பதில் நாம் கவனமாயிருக்க வேண்டும். அவர்களுக்கு நாம் ஆஸ்திகளையும், ஆடம்பரப் பொருட்களையும் கொடுப்பதைவிட அவர்களுக்கு அவசியமான அன்பை அள்ளி வழங்க வேண்டும். அவர்களாடு அதிக நேரத்தை செலவிட்டு, நாம் ஜீவனுள்ள தேவன்பேரில் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

# நடத்தை அளவுகோல்கள்

Behavior Benchmarks

## Wayne Barrier

**வே**தாகமம் நம் அன்றாட வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் சரியான மற்றும் தவறான நடத்தை சம்மந்தமாக முடிவெடுப்பதற்கான அடிப்படையை தந்திருக்கிறது. பொதுவாக, நாம் ஏற்றுக்கொள்ளத்தக்க நடத்தையை தீர்மானிக்க சமுதாய விதிமுறைகளைப் பின்பற்ற உந்தப்படுகிறோம். இவ்வகையான அணுகுமுறை நிகழ்கால அறநெறிகள் மற்றும் சமுதாய மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தையை ஏற்றுக்கொள்ள வழிவகுக்கிறது. அதன் விளைவு 1. கருக்கலைப்பு, ஓரினச்சேர்க்கை மற்றும் திரிக்கப்பட்ட பாலியல் விதிமுறைகளை ஏற்றுக்கொள்ள வைக்கிறது. 2. வெறித்தனமும், சுயநலமும், பேராசையும் உள்ள வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ளுதல். 3. குடும்பம், வியாபாரம் மற்றும் அரசாங்கம் என்று எல்லா உறவிலும் நேர்மையின்மை. 4. சமுதாயத்தில் வறுமையில் இருப்பவர்களுடைய தேவைகளை குறித்த அவமதிப்பு. நாம் ஒவ்வொரு பிரச்சனையிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் சரி எது, தவறு எது என்பதைத் தீர்மானிக்கவும், நடத்தையை மதிப்பீடு செய்யவும் வேதாகம அளவுகோல்களைப் பயன்படுத்த திரும்ப வேண்டும்.

நாம் தொடங்குவதற்கான சிறந்த இடம் [மத்தேயு 22 : 36 – 40] வசனங்களில் அந்த நியாயசாஸ்திரியின் கேள்விக்கு இயேசுவின் பதிலாக இருக்கட்டும். நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்கப்பட்டபோது இயேசுவின் பதில் இதோ : இயேசு அவனை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை.

இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரு கற்பனைகளிலும் நியாயப் பிரமாணம் முழுமையும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். "இந்தக் கற்பனைனகளெல்லாம் திரும்பத் திரும்ப அப்போஸ்தலர் களாலே முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கப்பட்டது [ரோமர் 13 : 9 ; கலாத்தியர் 5 : 14 ; யாக்கோபு 2 : 8 ]"

இக்கேள்வியைப் பற்றி லூக்காவின் பதில் நல்ல சமாரியன் சம்பவத்தை உள்ளடக்கியிருக்கிறது [லூக்கா 10 : 27 – 37].

இந்த அடிப்படை கற்பனைகளை பிரதிபலிக்கும் வேறுசில அளவு கோல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் கீழ்கண்டவைகளுக்காக நாம் அழைக்கப்பட்டதை உறுதிசெய்கின்றன 1. சத்துருக்களை சிநேகியுங்கள் (மத்தேயு 5:44) 2. ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:35) 3. அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு அவரிடத்தில் அன்பு கூருங்கள் (யோவான் 14:15) 4. நம் ஜீவனை பிறருக்காக கொடுக்கும் அளவுக்கு அவர்களிடத்தில் அன்பு கூருதல் (யோவான் 15 : 13, 14) 5. பொறுமையாயிருங்கள் அன்புள்ளவர்களாயிருங்கள், இரக்கமுள்ளவர்களாயிருங்கள், பொறாமையில்லாதவர்களாய் இருங்கள் (I கொரிந்தியர் 13) 6. இயேசுவிலும் அவருடைய உபதேசத்திலும் விசுவாசித்து நடவுங்கள் (II கொரிந்தியர் 5:7) 7. அன்பிலே நடவுங்கள் எபேசியர் 5:2. 8. ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபேசியர் 4 : 32) 9. அன்பிலே ஒருவரையொருவர் தாங்குங்கள் (எபேசியர் 4:2).

சரியான நடத்தை, ஒழுக்கநெறிகள் மற்றும் மனப்பான்மை சம்மந்தமாக வேதாகம போதனை தெளிவாகவும், எளிமையாகவும் இருக்கிறது. வேதாகம போதனை புரிந்து கொள்ளவும் எளிதாக இருக்கிறது. நாம் வேதவாக்கியங்களை கண்டு கொள்ளாமலோ அல்லது அறியாமலோ இருந்தால் நிச்சயம் அதற்கான விளைவுகள் உண்டு (வெளி 20: 12–15 ; யாக்கோபு 1:21–27).

நாம் இந்த போதனையை நிராகரித்தால் தேவனால் நிராகரிக்கப்பட்டு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம். உங்கள் நடத்தை உங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அனுமதிக்காதீர்கள்.

உன் பொன்னான நேரத்தை
என் பாதத்தில் வைத்துவிடு

உன் மண்ணான சரீரத்தை
என் கையில் கொடுத்துவிடு

வேண்டாத வைராக்கியத்தை
தொலைவில் வைத்து விடு

மற்றவர்கள் குற்றங்களை
தொலைவில் எறிந்துவிடு


உன்னில் உள்ள குறையை
விரைவில் நீ புரிந்து விடு

தேவனுடைய வார்த்தை

# வேதாகமம் : உலகின் உண்மையான அதிசயம்

The Bible : The world True Wonder

**Dalton Key**



பழங்கால உலகின் ஏழு அதிசயங்களில் எத்தனை பெயர்களை உங்களால் சொல்ல முடியும்? எகிப்தின் பிரமிடுகள், பாபிலோனின் தொங்கு தோட்டங்கள், கிரேக்க கடவுள் Zeus ன் சிலை, Artemis கோவில், Mansolus ன் சமாதி, ரோட்ஸ் நகரின் பிரமாண்ட சிலை மற்றும் அலெக்சந்திரியா பட்டணத்தின் கலங்கரை விளக்கு பொன்றவைகள் பழங்கால உலகின் ஏழு அதிசயங்களாக சொல்லப்பட்டன. நம்மில் பெரும்பாலானோருக்கு இந்த பழங்கால நினைவுச் சின்னங்கள் நினைவை விட்டு மறந்துவிட்டன, வரலாறும் கிட்டத்தட்ட இச்சின்னங்களை மறந்துவிட்டது.

நம்முடைய காரியங்கள் நம் நினைவுச் சின்னங்கள், நம் சாதனைகள் இன்னும் தோன்றாத சந்ததியால் நினைவில் வைத்துக் கொள்ளப்படுமா? இல்லை, காலச்சுவட்டில் அது கரைந்துபோகிறது. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது (I பேதுரு 1:24). "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்" (I யோவான் 2:17).இப்போது இருக்கின்ற தற்கால உலக அதிசயங்கள்கூட நம் பிள்ளைகளின் பிள்ளைகளால் ஒரு ஒரமாக வைக்கப்பட்டு அல்லது மறக்கப்பட்டு, அவர்கள் காலத்து அதிசயங்கள் நினைக்கப்பட வழிவகுக்கும்.

இவ்வுலகில் நித்தியமாக நிலைத்திருப்பதற்கு ஒன்றுமே இல்லையா? காலப் பரீட்சையை கடந்து நிலைத்து நிற்க ஒன்றுமே இல்லையா ? Iபேதுரு 1:24 லிருந்து தொடர்ந்து வாசியுங்கள், அதிலும் குறிப்பாக 25 ஆம் வசனத்தை சற்று நெருக்கமாக பாருங்கள். அவ்வசனம் என்ன சொல்கிறது ? கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் ; உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே " அழிவில்லாத வாக்குத்தவறாத, என்றென்றும் நிலைத்திருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே நித்திய நித்தியமாக நிலைத்திருக்கும். அதாவது, மனிதர்களால் உண்டாக்கப்பட்ட உலக அதிசயங்கள் எல்லாம் அழிந்த பிறகும் தேவனுடைய வார்த்தை நிலைத்து நிற்கும்.

வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தையைக்கேட்டு அதன்படி செய்கிறவன் கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டுகிற புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடப்படுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை (மத்தேயு 7:24). தேவனுடைய வார்த்தையில் நமக்கு கன்மலை அரண்போன்ற வார்த்தைகள் இருக்கின்றன. உலகின் உண்மையான அதிசயம் தேவனுடைய வார்த்தைதான். ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழ வில்லை ; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப் பட்டிருந்தது (மத்தேயு 7:24,25). நாம் வேதாகமத்தில் எல்லா நித்தியத்துக்குமான கன்மலையை அரணை நாம் காணமுடியும். தேவனுடைய வார்த்தைகள் உலகின் உண்மையான அதிசயமாயிருக்கிறது. ✝

---

## *கிறிஸ்தவர்கள்*

கிறிஸ்தவர் என்னும் பெயர் கிறிஸ்துவைத் தழுவி வருவதால் நாமெல்லாரும் அபிஷேகம் பண்ணப்படவர் களாயிருக்கிறோம் (II யோவான் 2:20) கிறிஸ்தவர் என்னும் பெயர் மேன்மையானதும், நம்மை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்துகிற பெயராகவும் இருக்கிறது (II கொரிந்தியர் 7:1) கிறிஸ்தவன் என்னும் பெயர் அதை தரித்திருக்கிறவர் கிறிஸ்துவின் உடைமை என்பதை மற்றவர்களுக்கு சுட்டிக்காட்டுகிறது (I கொரிந்தியர் :19-20) முதன் முதலில் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப்போஸ்தலர் 11:26)

கசப்பின் கதவையும் பகையின் கைவிலங்கையும் உடைத் தெறியும் சாவி மன்னிப்புத்தான். இச்சாவியை பலர் பயன்ப டுத்தாததால் தான் இவ்வுலகம் சமாதானமும், சந்தோசமும் இல்லாமல் சிக்கித் தவிக்கிறது.

தேவனுடைய வார்த்தை

# மறுபடியும் வெளிச்சம் உண்டாகக்கடவது

## Let There be Light Again

**Caleb Boggs**



“இருளிலிருந்து வெளிச்சத்தை பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்” [II கொரிந்தியர் 4 : 6]. காலத்தின் தொடக்கத்தில் இப்பூமியை இருள்மூடிக்கொண்டிருந்தது. தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் வெளிச்சம் உண்டாயிற்று. அதுவே சிருஷ்டிப்பின் ஆரம்பமும் ஆனது [ஆதியாகமம்1]. மனிதன் தேவசாயலில் தேவனால் உண்டாக்கப்பட்டான். ஆனால், சில நாட்களிலேயே அவன் தனிமையிலும் ஆவிக்குரிய அந்தகாரத்திலும் விழுந்தான் [ஆதியாகமம் 3].

பழைய ஏற்பாடு முழுவதும் புதிய வெளிச்சத்தை எதிர்பார்ப்பதிலேயே கழிந்தது [ஏசாயா 9: 1–7]. பவுல் II கொரிந்தியர் 4ஆம் அதிகாரத்தில் இந்த வெளிச்சம் மனிதர்கள் மீது பிரகாசித்தது என்று எழுதினார். இந்த ஒளி தேவ சமூகத்தில் பிரகாசித்து, புது சிருஷ்டியின் தொடக்கத்தை அடையாளப்படுத்தியது. இந்த ஒளிதான் நற்செய்தியாக இருக்கிறது.

சுவிசேஷத்தை உண்மையாக அறிந்துகொள்வதென்பது, தேவனுடைய தற்சொரூபமாகிய கிறிஸ்துவின் மகிமையை காண்பதாகும். நாம் கர்த்தருடைய மகிமையை காணும்போது, அதே சாயலாகவே மாறி [II கொரி 3:18] நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறோம் [4:16]. புது சிருஷ்டியாயிருக்கிறோம் [5:17]. நீங்கள் கடைசியாக எப்போது சூரிய உதயத்தைக் கண்டீர்கள் ? நான் இன்று அதிகாலையில் சூரிய உதயத்தைக் கண்டேன். அது மிக அழகாக பிரகாசமாக இருந்தது. காலை வேளையில் சூரிய ஒளி சிருஷ்டிப்பின் மீது பட்டு ஏரித்தண்ணீரில் அது பிரதிபலிக்கும் அழகே அழகுதான். சூரிய ஒளி பட்டதுமே இயற்கை உயிர்பெறுகிறது. தேவனுடைய வார்த்தை ஜீவ ஒளியாயிருக்கிறது [யோவான் 1:1–5]. நாம் சுவிசேஷ ஒளிக்குள் பிரவேசித்து, அது நம்மீது பிரகாசிக்க அனுமதிக்கும் போது, தேவ சாயல் நம் இருதயங்களிலிருந்து பிரதிபலிப்பதை நாம் காணமுடியும். அது ஜீவனைக்கொடுக்கிறது. ஆனால், அந்த ஒளியில் குளிர்காய விரும்புபவர்களுக்குத்தான் அது ஜீவனைக் கொடுக்கிறது [யோவான் 8:12].

## மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கான ஆலோசனைகள்

## Suggestions for a Happier Family Life

**Ronald D. Reeves**

பல வருடங்களுக்கு முன்பு மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை நிச்சயபடுத்திக் கொள்ள எடுக்கப்படவேண்டிய நடைமுறைகளின் மீது கவனம் செலுத்திய ஒரு கட்டுரையை நான் படித்தேன். கீழ்கண்டவாறு அந்த ஆலோசனைகளை பதிவு செய்கிறேன்.



- திருமண உறவுக்கு முதலிடம் கொடுங்கள். இது வேதாகம அடிப்படையானது மட்டுமல்ல, இது ஞானமானதும் கூட. ஒரு தகப்பனுக்கும், தாய்க்கும் இடையில் இருக்கும் அன்பினால் குழந்தைக்கு சிறந்த பாதுகாப்பு கிடைக்கிறது.
- வார்த்தையிலும் செயலிலும் உண்மையான பாசத்தைக் காட்டி குடும்ப அங்கத்தினர்களிடையே நெருக்கத்தை வெளிப்படுத்தி, அவர்களோடு தொடர்புகொள்ள விரும்புங்கள்.
- ஆரோக்கியமான குடும்ப வளர்ச்சிக்கு எது அவசியம் என்பதை அறிந்து குடும்பத்தை போஷிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பொருளாசை நம்மீது ஆதிக்கத்தை செலுத்தாத படி அதை கட்டுக்குள் வையுங்கள். நம் விருப்பம் பொருட்கள் மீதல்ல, மக்கள் மீது தான் இருக்கவேண்டும்.
- குடும்ப நேரத்தைப் பயன்படுத்தி அல்லது ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு நினைவில் நிற்கத்தக்க காரியங்களைச் செய்யுங்கள்.
- நான் என்னும் மமதையை தூக்கி எறிந்துவிட்டு அங்கத்தினர்களோடு இணைந்து அவர்களுக்கு சேவை செய்வதில் சுயத்தை இழந்துவிட வேண்டும்.
- எல்லோரையும் கனம் பண்ணும் பழக்கத்தை நாம் முதலில் நடைமுறைப்படுத்தி பிள்ளைகளுக்கும், அதை கற்றுக்கொடுக்க வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட இந்த ஆலோசனைகள் சற்று பழமையானதாக தோன்றினாலும் கூட மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு மதிப்புமிக்கதாக இருக்கும் என நம்புகிறோம். இந்த ஆலோசனைகளை நாம் மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்ளலாம்.

# விற்பனைக்கு அல்ல !

Not For Sale !

## Ken Tyler

நாகரிகமாக உடையணிந்த ஒரு தம்பதி தங்கள் இரு குழந்தைகளுடன் விளையாட்டுச் சாமான் கடைக்கு வந்தார்கள். "குழந்தைகளின் பொழுதுபோக்குக்காக எங்களுக்கு சில விளையாட்டு சாமான்கள் வேண்டும் என்று அந்தத் தாய் சொன்னார்". மேலும், அவர் நானும், என் கணவரும் வேலைச்செய்கிறோம், பிள்ளைகள் வீட்டில் தனியாக இருக்கிறார்கள் என்றார். அவ்விளையாட்டுச் சாமான் கடையில் வேலை பார்த்த பெண் ஊழியர் அந்தத் தம்பதியருக்கு விதவிதமான விளையாட்டுகளையும், விளையாட்டு சாமான்களையும் காட்டினார். ஆனால், ஒவ்வொன்றுக்கும் ஆட்சேபணை தான் எழுந்தது. அந்தத்தாய் பொறுமை இழந்து கடைசியாக "நாங்கள் உண்மையாக எதைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்று நீ அறிந்திருந்தால் இவ்விளையாட்டு சாமான்களின் மத்தியில் நீ அதை கண்டு பிடித்திருப்பாய்" என்று சொன்னார். அப்பெண் ஊழியர் பெருமூச்சுடன் " மேடம், நான் மிகவும் வருந்துகிறேன்" நீங்கள் உண்மையாகவே தேடிக்கொண்டிருப்பதும் – உங்கள் பிள்ளைகள் விரும்புவதும் என்ன வென்றால், தாயும் தகப்பனும் தான். நாங்கள் அவைகளை இக்கடையில் விற்பதில்லை என்றார்.

நகைச்சுவை நிறைந்த இச்சம்பவம் சமுதாயத்தின் இழிநிலையை விவரிக்கிறது. பிள்ளைகளை வளர்க்க தாயும் தகப்பனும் வீட்டில் இருப்பதில்லை. கணினி மற்றும் தொலைக்காட்சி மூலமாக நம் சமுதாயத்தின் உலகத்தன்மை பிள்ளைகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன. அதின் முடிவுகள் நாசத்தை வருவித்துக் கொண்டிருக்கின்றன. பெற்றோர் பணம் சம்பாத்தியம் பண்ணுவதில் பரபரப்பாக இருந்து பிள்ளைகளிடத்தில் நற்பண்புகளை வளர்க்க மறந்துவிட்டார்கள். அவசரமாக ஏதோ ஒன்று செய்யப்பட வேண்டும். வேதாகமம் " பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் " என்று சொல்கிறது ( நீதிமொழிகள் 22:6). ஒவ்வொரு தாயும் தகப்பனும் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய பயிற்சி கொடுப்பதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ✝

# என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவர்

My Beloved is mine, and I am His

## Denny Petrillo



**உ**ன்னதப்பாட்டு புத்தகத்தில் இது ஒரு முக்கியமான சொற்றொடராகும் [2:16;6:3;7:10]. இந்த தம்பதிகள் யாருடையவர்களுமல்ல. ஆனால், ஒருவருக்கொருவர் நெருக்கமானவர்கள். இந்த உண்மையை சாலொமோன் நன்றாக உணர்ந்திருந்தால் பல மனைவிகளிடம் உறவு வைத்திருக்க மாட்டார்.

புதிய ஏற்பாடு அடிக்கடி ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் இடையே காணப்படும் ஒற்றுமையையும், நெருக்கத்தையும் பற்றி பேசுகிறது [மத்தேயு 19 :6; எபிரெயர் 13:6.] கன்னிப் பெண்ணாகிய சூலமித்தியாள் இந்த உன்னதப்பாட்டில் தன் நேசர் தன்னுடையவர் என்பதை நம்பிக்கையோடே வெளிப்படுத்துகிறாள். ஒவ்வொரு மனைவியும் இதே நம்பிக்கையுடன் வாழவேண்டாமா ? அவள் தன் நேசருடையவள் என்பதில் எந்த சந்தேகத்தையும் விட்டு வைக்கவில்லை. இங்கே கணவன் தன் மனைவி தனக்குத் துரோகம் செய்வார் என்று நினைக்க வேண்டிய அவசியமில்லை.

தேவன், ஜனங்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்து அவர்கள் உண்மையாகவே ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்களா என்பதை அறிந்திருக்கிறார். உண்மையற்ற நிலைக்கான பாதை ஒருவர் தன்னுடைய இச்சையை அடக்காதபோது தொடங்குகிறது.

நான் "உன்னுடையவன்" அல்லது "உன்னுடையவள்" என்னும் வார்த்தைகள் ஒருவர் மற்றொருவருக்கு உண்மையாயிருப்பதற்கு முழுமையான பயிற்சிகள் எடுத்தாலொழிய அது வெறும் வார்த்தைகளாகத்தான் இருக்கும். இதற்கான அடித்தளம் ஒருவருடைய இச்சைகளை கட்டுப்படுத்துவதாயிருக்கிறது [யாக்கோபு 1:13,14]. பெரும்பாலானவர்கள் தங்கள் திருமணத்தின் போது "மரணம்வரை நாம் பிரியாதிருப்போம் " என்று சொல்வார்கள். அர்ப்பணிக்கப்பட்ட தம்பதிகள் மட்டுமே அதற்கு பொருள்படும் படியாக வாழ்வார்கள்!


## கிறிஸ்தவ இல்லம்

# ஓர் ஆணாக வளர்க்கப்படுவது!

## Raised To Be a Man!

## Derek Broome

ஒரு சிறு பையன் காரின் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு தன் பெற்றோரைப் பார்த்து கூச்சலிட்டு “ இது நியாயமல்ல எனக்கு ஏன் ஒரு வாகனத்தை சொந்தமாக தரக்கூடாது என்றான் ” அப்பையன் நன்றாக வளர்ந்து விட்டான். அவன் இப்போது விடலைப் பருவத்தில் இருக்கிறான். இப்போது அவன் “ நாம் சபைக்கு ஏன் போகிறோம் என்றான்? இப்போது அந்தப் பையன் வாலிபப்பருவத்தில் இருக்கிறான். அவன் பெற்றோரைப் பார்த்து “ நீங்கள் என்னைப் புரிந்துகொள்வதே இல்லை. நான் எவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறேனோ அதை நீங்கள் ஒருபோதும் அனுவித்ததே இல்லை என்றான். இப்போது அப்பையன் கல்லூரிக்குப் போகிறான், அவன் '' நான் இப்போது சிறு பிள்ளை அல்ல, நான் எதை விரும்புகிறேனோ அதைச் செய்யமுடியும் '' என்று சொன்னான். இப்போது அப்பையன் கணவனாகவும் ஒரு தகப்பனாகவும் ஆகிவிட்டான்.



அவனுடைய வாழ்க்கை முழுவதும் ஒரு குழந்தையாக அவன் பயிற்றுவிக்கப்பட்டதாக நினைத்தான். ஆனால், உண்மையில் அவன் புருஷனாக அல்லது ஒரு மனிதனாகத்தான் வளர்க்கப்பட்டான். அவனுடைய பெற்றோர் வாழ்க்கை எளிதானதல்ல என்பதை அவனுக்குப் போதித்தார்கள். நாம் விரும்புவதையெல்லாம் எப்போதும் பெற்றுக்கொள்வதில்லை என்றும் போதித்தார்கள். இவ்வாழ்க்கையில் கடினமாக உழைக்க வேண்டுமென்றும், பொறுப்புள்ள நபராக இருக்க வேண்டுமென்றும், சரியானவர்களுக்காக நிற்க வேண்டு மென்றும் போதித்தார்கள். மிக முக்கியமாக, அப்பெற்றோர் தேவனைப் பற்றியும், இரட்சகர் நமக்காக செய்த எல்லா காரியங்களைப் பற்றியும் போதித்தார்கள். மேலும், அவர்கள் ஜெபத்தைப் பற்றியும், எப்படி கர்த்தர் அதற்கு செவிகொடுத்து, நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியும் போதித்தார்கள்.

சிறுபிள்ளையாயிருப்பது எப்போதும் எளிதானதல்ல. சில வேளைகளில் வாலிபர்களும் தவறான முடிவுகளை எடுப்பார்கள். சில வேளைகளில் காரியங்கள் மிக குழப்பமானதாக இருக்கும். பல வேளைகளில் வாலிபர்கள் கடினமான வழிகளில் பாடங்களை கற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர்களுக்கு இதே நிலை தான். ஒவ்வொரு நாளும் புதிய பயணமாயிருக்கிறது. சில நாட்கள் மற்ற நாட்களை விட சிறப்பானதாக அமையும். வாழ்க்கையில் நாம் மலை உச்சிகளையும் பார்ப்போம், பள்ளத்தாக்குகளையும் பார்ப்போம். எது எப்படி இருந்தாலும், வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" [நீதிமொழிகள் 22:6 ].

✝

---

## நாம் நித்தியத்தை இழந்துபோவதற்கான காரணங்கள்

- சபை கூடிவருவதை விட்டுவிடுவதினால் [எபிரெயர்10:25]
- வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்காததினால் 9 அப்போஸ்தலர் 17:11]
- அவரவர் வரவுக்குத்தக்கதாக கொடுக்காமல் இருப்பதினால் [I கொரிந்தியர் 10:2]
- இடைவிடாமல் ஜெபிப்பதைத் தவிர்ப்பதினால் [I தெசலோனிக் கேயர் 5:17]
- தேவனுடைய ஆலோசனைகள் எல்லாவற்றையும் அறிவிக்காமல் இருப்பதினால் [அப்போஸ்தலர் 20:26]
- ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசித்திற்காக தைரியமாகப் போராடாமல் இருப்பதினால் [யூதா 3]

# விவாகத்தைப்பற்றி தேவனுடைய பார்வை

## Gods view of Marriage

**Gary C. Hampton**



**வி**வாகம் என்பது மனிதனுடைய அடிப்படைத் தேவையான துணையை பூர்த்தி செய்யும்படி தேவனால் வடிவமைக்கப்பட்டது. சிருஷ்டிப்பின் முதல் ஐந்து நாட்களில் தேவன் தம்முடைய கிரியைகளைக் கண்டு "அது நல்லது" "அது நல்லது" என்று சொன்னதை நாம் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம் [ஆதியாகமம்1:9,12,18,21,25]. சர்வவல்ல தேவன் ஆறாம் நாளிலே மனிதனை உண்டாக்கினபோது, "பின்பு தேவனாகிய கர்த்தர் : மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்றார் [ஆதியாகமம் 2:18].

தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் பேர் வைக்கும்படி ஆதாமினிடத்தில் அனுப்பினார் [ஆதியாகமம்2:19,20]. வெளியின் சகலவித மிருகங்களோடும் மனிதனுக்கு இருந்த உறவு அவனுடைய தனிமையைப் போக்கவில்லை. இது ஆதாம் மிருகங்களுக்கு பெயர்வைக்கும் போதே அறிந்த ஒன்றாகத்தான் இருந்தது (William E.Woodson ).

தனக்கு ஏற்ற துணையாக இருக்கும்படியாக தேவனால் படைக்கப்பட்ட விசேஷித்த அந்த படைப்பைப் பற்றி ஆதாம் வெளிப்படுத்திய வார்த்தைகளை கவனியுங்கள். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தின் மாம்சமுமாய் இருக்கிறாள் ; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள் என்றான். எனவேதான், மோசே தேவனால் ஏவப்பட்டு "இதினிமித்தம்

புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவி யோடே இசைந்திருப்பான் ; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார் கள்"என்று கச்சிதமாகச் சொன்னார் (ஆதியாகமம் 2:24)

பரிசேயர் கேட்ட கேள்வியின் விளைவாக இயேசு கிறிஸ்து விவா கத்தைப் பற்றி முழுமையான போனையைச் செய்கிறார். "புருஷனா னவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலகிலும் தள்ளிவிடுவது நியாயமா? (மத்தேயு 19:3). ஆதியிலே மனுஷனையும் மனுஷியையும், தேவன் உண்டாக்கினதைக் குறித்து மோசே முழுமையாக பதிவு செய் திருக்கிறார் என்று கர்த்தர் கருதினார்". அவர்களுக்கு அவர் பிரதியுத்தர மாக : ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும், பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும் இதினிமித்தம் புருஷனா வன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத்தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதை நீங்கள் வாசிக்கவில்லையா ? இப்படி இருக் கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார் கள். ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்க டவன் என்றார் (மத்தேயு 19:4-6).

தேவன் விவாகத்தை ஒரு நிரந்தரமான உறவாகப் பார்த்தார். மரணத் தைத் தவிர வேறெந்த காரணத்தினாலும் முறிவு ஏற்படக்கூடாது என்று கட்டளையிட்டார். பவுல் இதை இவ்விதமாக விளக்குகிறார். "அதெப்ப டியென்றால் புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்கு மளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமா ணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள் (ரோமர் 7:2)

விவாகம் என்பது தேவனால் மனிதனுடைய அடிப்படைத் தேவை யான துணையை பூர்த்தி செய்யும்படி வடிவமைக்கப்பட்டது. விவாகம் என்பது வாழ்க்கை முழுவதும் முறிவில்லாமல் இருக்க வேண் டுமென்பது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது. ✝

---


ஆத்தும ஆதாயம் செய்ய முதலில் நம் மனதில் தீர்மானிதுக்கொள்ள வேண்டும் பின்பு அதை நிறைவேற்ற கடுமையாக உழைக்கவேண்டும். ஆரம்பத்தில் கிறிஸ்துவுக்காக நாம் ஒருவரை ஆதாயப்படுத்தினால் போதுமானது அடுத்து இன்னொருவர் இன்னொருவர் என்று அடுக்கிக்கொண்டே போக வேண்டும்.

# நம் இல்லங்கள் மற்றும் குடும்பங்களுக்காக போர்

## The war For our Homes and Families

**Betty Burton Choate**

இன்றைய உடைந்து போன கலாச்சாரத்தில் சாத்தான் வீடு மற்றும் குடும்பங்களுக்கான தேவனுடைய திட்டத்தை மீறும் படலத்தை சமுதாயத்தில் அறிமுகப்படுத்தியிருக்கிறான். திருமணத்திற்கு முன்பு சேர்ந்து வாழும் கலாச்சாரம் இன்றைய காலத்தின் கட்டாயமாகி விட்டது. இன்று அமெரிக்காவில் முப்பது வயதிற்குட்பட்ட பெண்களில் பாதிபேர் திருமணத்திற்கு முந்தைய உறவில்தான் இருக்கிறார்கள். விவாகரத்துகள் பல குடும்பங்களை பாழக்கிவிட்டது. முதல் திருமணங்களில் பாதி திருமணங்கள் விவாகரத்தில் போய் முடிகின்றன, இரண்டாம் திருமணங்களில் 60 சதவீதம் மணமுறிவில்போய் முடிகிறது. ஆனால், சமீபநாட்களில் விவாகரத்துக்கள் கணிசமாக குறைந்துள்ளன. ஏன் அப்படி? காரணம், விவாகரத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும், செலவுகளையும் தவிர்க்க, எதிரும் புதிருமாக இருந்தாலும் பிரியாமலேயே வாழ்ந்து விடுகிறார்கள். விவாகரத்துகள் குறைவதற்கான காரணங்கள் மிகுந்த துக்கத்தை அளிக்கின்றன.



உடைந்து போன உறவுகள் பிள்ளைகள் மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? பிள்ளைகள் கல்வியில் பின்தங்கி அடிப்படைக் கல்வியை முடிக்காமலேயே பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடுகின்றனர். இவர்களுக்கு சுய மரியாதை குறைவாகவே இருப்பதாகவும், இவர்கள் கவலை மற்றும் மனச் சோர்வினால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு சட்ட நிறுவனம், திருமணம் ஆனவர்களின் 2000 குழந்தைகளை வைத்து நடத்திய ஆய்வில் பின்வரும் முடிவுகளை வெளியிட்டார்கள் : பெற்றோர்களின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளை பார்த்தவர்கள் (42 சதவீதத்தினர்), அப்பா அல்லது அம்மாவுக்காக பொய் சொல்லுதல் (24 சதவீதம் ). மேலும், பிள்ளைகளில் பத்தில் ஒருவர் பெருங் குற்றவாளிகளாக மாறிவிட்டார்கள், 8 சதவீதத்தினர் தற்கொலைக்கு முயற்சித்திருக்கிறார்கள்.

சாத்தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருமணங்களை நாசமாக்குவதோடு திருப்தி அடையவில்லை. ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்தையும் இவ்வுலகம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், கருக்கலைப்பை சட்டப்பூர்வமானதாக மாற்றுவதின் மூலம் பெண்களின் உரிமையைக் காப்பதாகவும் ஏமாற்றிக் கொண்டுவருகிறான்.

சாத்தானின் திட்டம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு வெளிப்படையாகவே இருக்கிறது. அதாவது, நம்மை தனிப்பட்ட நபர்களாகவும், ஒரு தேசமாக நரகத்திற்கும் கொண்டு செல்வதுதான் அந்தத் திட்டம்.

ஒரு வீட்டுக்கு, குடும்பத்துக்கு வேதாகம திட்டம் என்ன? நிச்சயமாகவே, ஒரு குடும்பம் என்றால் அதில் கணவன் / தகப்பன், மனைவி / தாய், மற்றும் பிள்ளைகள் அதில் உள்ளடக்கம்.

தேவனாகிய கர்த்தர் மனிதனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான், பின்பு தேவனாகிய கர்த்தர் ; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான் ; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தின் மாம்சமுமாய் இருக்கிறாள் : இவள் மனுஷனில் எடுக்கப்பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். "அவர்கள் ஓர் மாம்சமாயிருப்பார்கள்" (ஆதியாகமம் 2 : 7,18;21–24). ஒரு ஆணையும், பெண்ணையும் விவாகத்தில் இணைக்கும் தேவனுடைய திட்டம் இருவரும் ஒருவராக வாழ்வதற்கான திட்டமாகத்தான் இருந்தது. இதில் வாழ்க்கை பலன் தருகிறதாக, தேவபக்திக்கேற்ற ஒன்றாக இருக்க வேண்டுமென்றால் இருவரும் அவரவர் பங்கை செம்மையாக ஆற்ற வேண்டும். (எபேசியர் 5:22–24) இதை இவ்விதமாக விளக்குகிறது "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல ; உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும்

இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

இந்த வசனப்பகுதி பெண்கள் ஆண்களுக்கு கீழானவர்கள் என்று பொருள் கொடுக்கிறதா ? இதன் பொருள் ஏதோ ஒரு காரியத்தில் பெண்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கக்கூடாதென்றோ அல்லது ஆண்கள் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றும் ஆகுமா ? நிச்சயமாக இல்லை. கணவனும், மனைவியும் சேர்ந்துதான் ஒரு குடும்பம் ஆகிறார்கள். தேவன் இருவருக்கும் மூளையையும், திறமையையும் கொடுத்திருக்கிறார். வாழ்க்கையின் எல்லா காரியங்களிலேயும் இருவரும் தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், குடும்பத்திற்கு தேவன் கணவனை பொறுப்பாளி ஆக்குகிறார். நம் சமுதாயத்தில் ஆண் தலைமைத்துவத்தை தூக்கி எறிந்துவிட்டு, பெண்கள் தலைமைத்துவம் தலைத்தூக்கி இருக்கிறது. இதில் இழப்பு பெண்களுக்குத்தான். அதாவது, குழந்தைகளை வளர்க்கிற காரியத்தில் முழு பொறுப்பையும் பெண்கள் ஏற்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். தேவனுடைய திட்டம் மனைவியும், பிள்ளைகளும் கணவனால் பாதுகாக்கப்பட வேண்டும், போஷிக்கப்பட வேண்டும் என்பதே.

புருஷர்கள் உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தாம் அதைத் திரு வசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூர வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில் தான் அன்பு கூருகிறான். [எபேசியர் 5:25-28]. ஏன் ஒரு கணவன் குடும்பத்தின் எல்லாக் காரியங்களுக்கும் பொறுப்பாளியாயிருக்கிறான் ? ஏனென்றால், தேவன் கணவனை எப்படிக் கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தாரோ அதேபோல் அன்புகூரும்படி கட்டளையிட்டிருக்கிறார். அது எவ்வகையான அன்பு தன் குடும்பத்தை பாதுகாப்பதற்காக தன் ஜீவனையே விடும் அளவுக்கான அன்பு அது. ஒரு கணவன் இந்த அளவுக்கு தன் மனைவியினிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் அன்பு? கூரும் போது தன் குடும்பத்திற்கு சிறந்ததை கொண்டுவரத் தன் ஆற்றலை பயண் படுத்தமாட்டானா? தற்போதைய கலாச்சாரத்தின் பிரச்சனை

என்னவென்றால் ஆண்களும், பெண்களும் விவாகம் சம்மந்தமான தேவனுடைய கட்டளைகளை கண்டுகொள்ளாமல் இருப்பதுதான். இதன் விளைவு பேரழிவு.

பெற்றோர்களின் பொறுப்பு பிள்ளைகளின் சரீரப்பிரகாரமான, உணர்வுப் பூர்வமான தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமல்ல, பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க வேண்டும் ( எபேசியர் 6:4).

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தேவைகளைச் சந்திக்க தங்கள் முழு ஆற்றலையும் பயண்படுத்துவார்கள். தங்கள் பிள்ளைகள் விரும்பியதை எல்லாம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காக கணவனும் மனைவியும் நீண்ட நேரம் வேலை செய்யும்படியாக நிர்பந்திக்கப்படுவார்கள். இதன் விளைவாக குழந்தைகள், குழந்தைகள் காப்பகத்தில் விடப்படுகிறார்கள் அல்லது சம்பளம் கொடுத்து வீட்டிலேயே ஆட்களைக் கொண்டு பராமரிக்கப் படுகிறார்கள். அவர்கள் வளரும்போது, பள்ளியிலிருந்து வரும்போது தங்களைத்தாமே பராமரித்துக் கொள்ளப் பழகி விடுகிறார்கள். வேலை யினிமித்தம் களைப்படைந்த பெற்றோர்கள் வீட்டுக்கு வந்தவுடனே சமையல், துணி துவைத்தல், தோட்ட பராமரிப்பு, மின்னஞ்சல் அனுப்புதல், விளையாட்டுப் பயிற்சிக்காக பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல் போன்ற பணிகளில் ஈடுபட வேண்டியதாயிருக்கிறது. இப்படி நேரமெல்லாம் மேற் சொல்லப் பட்டவைகளில் செலவிடப்படும் போது குடும்ப உறவுகளை பலப்படுத்துவதற்கும், பிள்ளைகளின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதற்கும் அந்த விலையேறப்பெற்ற ஆத்துமாக்களுக்கு தேவனைப்பற்றி போதிப்பதற்கும், அவரோடு கொண்டிருக்கும் உறவில் வளருவதற்கும் நேரம் எப்படி கிடைக்கும் ?



ஆவிக்குரிய பயிற்சியின் ஒரு பகுதி நம் பரமப்பிதா நம்மை வனைவதுபோல் நாம் பிள்ளைகளை வனைவதாகும். அன்புடன் அதேநேரத்தில் தெளிவுடனும், உறுதியுடனும் பெற்றோருக்குக் கீழ்ப்படிவது பற்றியும், தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றியும் போதிக்கவேண்டும். பெற்றோர் பிள்ளைகளிடத்தில் ஒரு காரியத்தைப் பேசுவதற்கு முன்பாக யோசித்து ஜாக்கிரதையாக பேசவேண்டும். தேவையில்லாமல் பிள்ளைகளிடத்தில் கட்டளையிட்டுவிட்டு பின்பு பின்வாங்கக் கூடாது. நாம் ஒன்றைச் சொல்லும்போது, பொருள்படும்படி சொல்லிவிட்டு அதன்பின்பு அன்புடனும், உறுதியுடனும் அவர்களைக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும்.

பிள்ளைகளுடைய இருதயத்தில் கலக உணர்வு இருக்கிறதென்றால் அம்மனப்பான்மையை கட்டுப்படுத்த சில சலுகைகளை கொடுக்காமல்,லேசாக அடிக்கலாம். பிள்ளைகளை சிட்சிப்பதைக்குறித்து தேவன் சொல்வதைக்கவனியுங்கள் "அன்றியும் என் மகனே : கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்கு சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லி யிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சிநடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா? எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய் காணும் ; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும் (எபிரெயர்12:5-11).

✝

---

பிறந்தோம், வாழ்ந்தோம் என்பது வாழ்க்கை அல்ல.
நம்முடைய நித்தியத்தை எங்கே கழிக்கப் போகிறோம்
என்பதை உறுதி செய்துகொள்வதே வாழ்க்கை.

## கிறிஸ்தவ இல்லம்

# அன்பின் ஏழு பரிமாணங்கள்!

Seven Dimensions of Love !

## Mark N. Posey

"**தே**வன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" [யோவான் 3:16].

**முன்னுரை :**

1. இவ்வுலகம் அன்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறது.
2. தேவன் அன்பாகவே இருக்கிறபடியால் [I யோவான் 4:8] இவ்வுலகம் அன்புக்காக ஏங்குகிது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.
3. ஏழு வித்தியாசமான பரிமாணங்களில் அன்பு என்பதை குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்

**மையப்பகுதி :**

I **பின்னிட்டுப் பார்த்து அன்பு கூருங்கள்**

A. நான் பின்னிட்டுப் பார்த்து எனக்காக மரித்த ஒருவரைக் காண்கிறேன் [கலாத்தியர் 2:20]

B. கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது: ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும் ; பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லோருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் [II கொரிந்தியர் 5:14:15].

II **உயரப் பார்த்து அன்பு கூருங்கள்**

A. நான் உயரப் பார்த்து அன்புகூருவதில் மிகச் சிறந்தவரைக் காண்கிறேன்

B. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" [மத்தேயு 22:37].

III **புறத்தாரையும் பார்த்து அன்பு கூருங்கள் :**

A. நான் வெளியே பார்க்கும்போது என் அயலகத்தாரைக் காண்கிறேன் !

B. "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" (மத்தேயு 22:39 ; கொலோசெயர் 6:10)

IV **சுற்றிலும் பார்த்து அன்புகூருங்கள் :**

A. நான் சுற்றிலும் பார்த்து என் சொந்த ஆவிக்குரிய குடும்பத்தைக் காண்கிறேன்.

B. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தல் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள் வார்கள் என்றார் (யோவான் 13:35 ;)

V **உள்ளேயே அன்புகூருதல் :**

அ) நான் உள்ளே பார்த்து தேவன் எனக்குக் கொடுத்த ஆத்துமா வைக் காண்கிறேன் " உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" (மத்தேயு 22:39)

VI **முன்னோக்கி அன்புகூருதல் :**

A. நான் முன்னோக்கிப் பார்த்து என்னை விரும்புகிற கர்த்தரைக் காண்கிறேன் !

B. சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் ; அவன் உத்தம னென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தை பெறுவான் (யாக்கோபு 1:12 ; தீத்து 2:14).

VII **கீழ்நோக்கி அன்பு கூருதல் :**

A. நான் சிலுவையில் உயர்த்தப்பட்ட கிறிஸ்துவைப் பார்த்து அவர் என்னிடத்தில் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்கிறேன்.

ஆ) "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லுக்கா 23:34).

முடிவுரை :

1. வேதாகமத்தில் யோவான் 3:16, எல்லா காலத்திலும் எல்லோராலும் நினைவில் கொள்ளும் வசனமும், பரிச்சயமான வசனமுமாய் இருக்கிறது,
2. இது வேதாகமத்தின் தங்க வசனம் என்று அழைக்கப்படுகிறது.
3. மார்ட்டின் லூதர் இதை சிறிய சுவிசேஷம் என்றழைத்தார்.
4. இது சுருக்கமான சுவிசேஷம் என்றழைக்கப்படுகிறது.
5. இது இரத்தத்தால் எழுதப்பட்டு எல்லோருக்காகவும் எழுதப்பட்ட தேவனிடத்திலிருந்து வந்த அன்பின் கடிதமாகும்.
6. வேதாகமத்திலிருந்து ஒரு வசனத்தை சாத்தான் எடுத்துப்போட விரும்புகிறதாக இருந்தால் அது யோவான் 3:16 ஆகத்தான் இருக்கும்.
7. நரகத்தை நடுங்கச் செய்கிற வசனம் ஒன்று உண்டானால் அது (யோவான் 3:16) ஆகத்தான் இருக்கும்.
8. திரளான ஜனங்களுக்கு பரலோகப் பாதையை பிரகாசமாக்கின வசனம் ஒன்று உண்டானால் அது யோவான் 3:16 ஆகத்தான் இருக்கும்.
9. அவருடைய அன்புக்காக தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்.

---

## நம் சத்துருக்கள்

- *நம் சொந்த சரீரம் (கலாத்தியர் 5: 15, 16)*
- *உலகம் (யோவான் 2: 15, 16)*
- *பிசாசு (மத்தேயு 13:39;2 பேதுரு 5:8)*
- *சுவிசேஷத்தை மறுக்கிறவர்கள் (பிலிப்பியர் 3: 18)*
- *நீதியை எதிர்க்கிறவர்கள்(அப். 13: 10)*

# உங்கள் சபையின் பிறந்த தேதி எது?

What is the birth Date of Your Chruch ?

## J. Randal Matheny



ஐக்கிய மெதடிஸ்ட் சபை, மெதடிஸ் சபை மற்றும் Evangelical United Brethren Church யோடு இணைந்து 1968 – ல் அதன் ஐம்பதாவது ஆண்டுவிழாவை கொண்டாடியது. புதிதாகப் பிறந்த இந்த சபையை நினைவு கூர்ந்தவர்களிடம் எடுத்த பேட்டி இக்கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தக்கட்டுரையின் தலைப்பு மாற்கு 9:1 ல் இடம் பெற்றுள்ள இயேசுவின் வார்த்தைகளை எனக்கு நினைவுபடுத்துகிறது. "அவர் அவர்களை நோக்கி : இங்கே நிற்கிறவர்களின் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக்காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன் என்றார்" (மாற்கு 9:1). தேவனுடைய ராஜ்யமாகிய சபை ஸ்தாபிக்கப்பட்டதைக் கண்ட யாரும் இப்போது உயிரோடில்லை.

மார்க்கப் பிரிவினை சபைகள் மனிதத் தலைவர்கள், பெயர்கள் மற்றும் உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் தொடக்கங்களை கணக்கிடுகிறார்கள். அச்சபைகள் ஐக்கிய மெதடிஸ்ட் சபையைப் போல் எருசலேம் பட்டணத்திலிருந்து வெகுதூரத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டன (உதாரணமாக ஐக்கிய மெதடிஸ்ட் சபை அமெரிக்காவிலுள்ள டெக்சாஸில் ஆரம்பிக்கப்பட்டது). இவைகளுள் எந்த சபையும் அப்போஸ் தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி பரிசுத்த ஆவியினால் பிறந்த சபையின் அடையாளத்தைத் தரிப்பதில்லை.

இந்த ஐக்கிய மெதடிஸ்ட் சபையில் உள்ள அங்கத்தினர்கள் சிறந்த நோக்கங்களை உடையவர்களாயிருக்கிறார்கள். இருந்த போதிலும், அவர்கள் கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கவில்லை. சபைகளை இணைப்பது ஆவியின் ஒற்றுமைக்கு வழிவகுக்கிது.

ஒரு மார்க்கப்பிரிவினை சபை அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சரி, அச்சபையின் நோக்கம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் அது இயேசு கிறிஸ்துவின் போதனையிலிருந்து வழிவிலகிச் சென்றதாலும், பிரிவினைக்கு வழிவகுத்ததாலும் வேத வசனங்களால் கடுமையாக கடிந்துகொள்ளப்படுகிறது.

முதல் நூற்றாண்டில் கிபி 33ல் எருசலேமில் தொடங்கப்பட்ட கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பவர்கள் பாக்கியவான்கள். நாம் கிறிஸ்துவின் போதனையை தாழ்மையோடு ஏற்றுக்கொண்டு அவருக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிகிற உண்மையான கிறிஸ்தவர்களாக இருப்போம். நாம் மனிதனால் உண்டாக்கப்பட்ட பிரிவினைகளை கைவிட்டு இயேசு கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுவோமாக!

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் ரித்திருந்தார்கள். தேவனைத் துதித்து, ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப்போஸ்தலர் 2:42,47).

---

<u>கிறிஸ்துவுக்குள் நாம் யாராக இருக்கிறோம்.</u>

- நாம் புது சிருஷ்டியாயிருக்கிறோம் (II கொரிந்தியர் 5:17)
- நாம் தேவனுடைய நீதியாயிருக்கிறோம் (II கொரிந்தியர் 5:21)
- நாம் அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (I பேதுரு 2:24)
- நாம் ஐசுவரியவான்களாக்கப் பட்டிருக்கிறோம் ( II கொரி 8:9)
- நாம் ஏற்றுகொள்ளப் பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:6)
- நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம் (ரோமர் 6:20-22).

# பூமியிலும் இணைந்து, நித்தியத்திலும் இணைந்து

## Together On Earth
## Together in Eternity

**Dale Grission**

**எ**பிரெய எழுத்தாளர் ஆதிச்சபையிலிருந்த பரிசுத்த வான்களுக்கு இவ்விதமாக புத்திமதிச் சொன்னார் சபை கூடிவருதலை சிலர் விட்டு விடுகிறது போல, நாமும் "விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திசொல்ல வேண்டும்" [எபிரெயர் 10 : 25 ]. சகோதரர்கள் தேவனை ஆராதிப்பதற்கும், ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்வதற்கும் சபைகூடிவருதல் மிகவும் முக்கியமானது. நாம் தவறாமல் சபை கூடிவரும் போது நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமான ஆவிக்குரிய ஆகாரத்தை உட்கொள்கிறோம். நாம் தேவனுடைய வார்த்தையால் போஷிக்கப் பட, தேவனை ஆராதிக்க, சபையாரோடு ஐக்கியம் கொள்ள தவறும்போது பலவீனமடைந்து ஆவிக்குரிய பிரகாரமாக மரிப்பதற்கு அதிக வாய்ப்புண்டு.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பமாக இருக்கிறார்கள். எனவே, நமக்கும் பூமிக்குரிய குடும்பத்தைப்போல் குடும்ப உறவுகள் அவசியமாய் இருக்கிறது. நாம் விசேஷித்த ஜனங்களாயிருக்கிற படியால் ஒன்றாயிருப்பதை நாம் அனுபவித்துச் செய்ய வேண்டும். "சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள் ; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் " [ரோமர் 12:10]. நாம் இப்பூமியில் வாழும்போது நம் ஆவிக்குரிய குடும்பத்தின் மீது அன்பும், அக்கறையும் காட்டுவதில் வளருவோமாக. ஏனென்றால், பரலோகத்தில் நம் ஆவிக்குரிய குடும்பத்தோடு நித்தியத்தை கழிக்கப்போகிறோம்.

நாம் சில வேளைகளில் சிலர் " எனக்கு யாரும் தேவையில்லை " என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். இது வாழ்க்கையைக் குறித்து ஒருவருடைய தவறான மனநிலையாகும். இப்படிச் சொல்லுகிற ஒருவர் சுதந்திரம் எனும் போர்வையில் தன் தனிமையை மறைக்க விரும்புகிறார் என்றுதான் அர்த்தம். நம் வாழ்க்கையில் நமக்கு மக்கள் தேவை – அன்பு செலுத்த ஆட்கள் தேவை. அதிலும் குறிப்பாக நம் ஆவிக்குரிய குடும்பத்தில் நமக்கு ஆட்கள் தேவை.

நாம் சகோதர சிநேகம் மற்றும் நட்பின் மகிழ்ச்சியை அறிந்துகொள்ளவேண்டும். இத்தகைய உறவை நாம் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த வழி நம் சபை குடும்பத்தோடு அன்பிலும், நட்பிலும் தேவனுடைய வார்த்தையின் அறிவிலும் வளர்வதுதான்.

நம் ஆவிக்குரிய குடும்பம் மற்றும் அந்த உறவு அளிக்கும் விசேஷித்த ஆசீர்வாதங்களிலிருந்து பிரிந்திருப்பதற்கு இவ்வாழ்க்கை மிகமிக குறுகியதாகும். எனவே, நாமெல்லாரும் இவ்வுலகத்தைவிட்டு எவ்வளவு தூரமாக இருக்க முடியுமோ அவ்வளவு தூரமும், கர்த்தரோடு எவ்வளவு நெருக்கமாக இருக்கமுடியுமோ அவ்வளவு நெருக்கமாக இருக்க முயற்சிப்போமாக. நாம் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்து (வெளி 2:10) கர்த்தர் நமக்கு வாக்களித்திருக்கிற ஜீவகிரீடத்தை பெற்றுக்கொள்ளப் பாடுபடுவோமாக.

“நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே ; இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசனவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள், ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'' (வெளிப்படுத்தின விசேஷம் 2:10).

†

---

<u>நினைவில் கொள்ள வேண்டிய மூன்று</u>

1. உண்மையான கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்க்கிறார்

2. முழுமையான கீழ்ப்படிதலுக்குப் பொறுமை மிக அவசியம்

3. கீழ்ப்படியாமைக்கான தண்டனை நிச்சயம் உண்டு.

# எது உறுதியான சபையைக்கட்டும் ?

## What Will Build a Strong Church ?

## Maxie B. Boren



எந்த பரபரப்பும் இல்லை ! எந்த தந்திரமும் இல்லை ! பெரிய கமிட்டிகள் எதுவுமில்லை ! முழுமையான நிகழ்ச்சிகள் மட்டுந்தான் அல்லது கேளிக்கை மற்றும் விளையாட்டு விருந்து மட்டும் தான். இதுபோன்ற விளம்பரங்களெல்லாம் நகர்புற கிளப்கள், சமுதாய கிளப்கள், நாட்டுப்புற கிளப்கள் போன்றவைகளுக்கு பொருந்தும். ஆனால், கர்த்தருடைய சபையின் வளர்ச்சிக்குப் பொருந்தாது. ஓர் உறுதியான சபையை உருவாக்குவதற்கு என்ன தேவைப்படுகிறது ? கீழ்க்காணும் காரியங்கள் அவசியம் என்று என் முழுமனதோடு விசுவாசிக்கிறேன்.

**உறுதியான வேதாகம பிரசங்கமும், போதனையும் !**

தேவனுடைய வார்த்தை வெளிப்படையாக, பலமாக, சமரசமில்லாமல் பரப்பப்படும் போது அல்லது அறிவிக்கப்படும் போது அது சபையைக்கட்டும் ! அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார் " நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:32).

**முன்மாதிரியுள்ள தலைமைத்துவம் !**

மந்தைக்கு மாதிரியாயிருக்கும் ஊழியக்காரர்களால் சபையை சிறப்பாக மேய்க்கமுடியும் (I பேதுரு 5:2–3) இவர்களால் சபையை உறுதியாக கட்டி எழுப்பமுடியும். ஒருசபை நன்றாக வளரவேண்டுமென்றால் தரமான தலைமைத்துவப் பண்புகளை உடைய சகோதரர்கள் இருக்க வேண்டும்.

**அங்கத்தினர்களின் அன்பும் அக்கறையும் !**

கர்த்தருடைய சபையின் ஐக்கியம் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மையானதாக இன்பமானதாக இருக்க வேண்டும். நம் அன்பை சமுதாயம் கவனித்து " அவர்கள் ஒருவரிலொருவர் எவ்வளவு அன்பாயிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்!" இந்த அன்பும், அக்கறையும் இல்லையென்றால் சபை தேவன் விரும்பிய வண்ணமாக இருக்காது.

**இரக்கமுள்ள இருதயங்கள் !**

இவ்வுலகிலேயே இளகிய மனமுடையவர்கள் இந்த கிறிஸ்துவின் சபையார் என்று பெயர் எடுக்கவேண்டும். எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக, விசுவாச குடும்பத்தாருக்கு நன்மை செய்ய வேண்டும் [கலாத்தியர் 6:9,10].

**ஊழிய வாஞ்சை !**

ஆதி திருச்சபையின் பிரதான வாஞ்சை ஆத்தும ஆதாயம் செய்வதாயிருந்தது ! சபை அனுதினமும் இயேசுவைக் கிறிஸ்து வென்று தொடர்ச்சியாக பிரசங்கிக்கும் போது, போதிக்கும் போது வளர்ச்சி அடையும் [அப் 5:42].

**நான் ஊழியம் செய்ய விரும்புகிறேன் எனும் மனப்பான்மை சபையினுள் ஊடுருவ வேண்டும் !**

விசுவாசிகள் கர்த்தர் மீதான அன்பின் நிமித்தமாக அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். சோம்பலுடன் இல்லாமல் உற்சாகமாக ஊழியம் செய்யும் போது சபை வளரும்.

மேற்சொல்லப்பட்ட கருத்துக்கள் ஓர் உறுதியான சபையை உருவாக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த காரியங்களெல்லாம் ஒவ்வொரு சபையிலும் அதிகமாக காணப்பட வேண்டுமென்று ஊக்கமாக ஜெபிக்கிறேன்.



# மீன்களைப் பிடித்தல் மற்றும் ஆடுகளை மேய்த்தல்

Catching Fish and Feeding Sheep

## John Gipson

“நான் மீன் பிடிக்கப்போகிறேன்” என்று சீமோன் பேதுரு சொன்னார். இங்கே ஆச்சரியம் எதுவுமில்லை. இயேசுவை சந்திப்பதற்கு முன் பேதுரு கலிலேயக் கடலில் பல வருடங்களாக மீனவராகத்தான் இருந்தார். மீன்பிடி தொழிலுக்கு அவர் புதியவரல்ல. மீன்பிடிப்பதற்கு புதிய வழிமுறைகளை அவருக்கு யாரும் கற்றுக்கொடுக்க அவசியம் இல்லாதிருந்தது. எனவே, பேதுரு தான் மீன்பிடிக்கப் போகிறதாகச் சொன்னபோது சீஷர்களில் பலர் “நாங்களும் உம்முடனே வருகிறோம் என்றார்கள்” (யோவான் 21 : 3).

நீங்கள் எப்போதாவது மீன் பிடிக்க போய் வெறுங்கையுடன் வந்ததுண்டா? அப்படியென்றால், நீங்கள் தனியாக இல்லை, பேதுருவுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் கூட அப்படி நடந்திருக்கிறது. இராமுழுவதும் அவர்கள் பிரயாசப்பட்டும் அவர்களுக்கு ஒரு மீனும் அகப்படவில்லை. அப்போழுது இயேசு கரையிலே நின்று, “நீங்கள் படகுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார்” (யோவான் 21:6). அந்தப்படியே அவர்கள் செய்தபோது வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். கரையில் நின்றவர் கர்த்தர் என்பதை யோவான் உணர்ந்து கொண்டார் (யோவான் 21:7) உடனே பேதுரு படகிலிருந்து குதித்து கர்த்தரிடத்தில் சென்றான்.

இயேசு கிறிஸ்து பேதுருவையும், அவருடைய சகோதரர்களையும் பார்த்து, “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிற வர்களாக்குவேன்” என்றார் (மத்தேயு 4:19). அதன்பின்பு அவர்கள் நெருப்பை மூட்டி குளிர்காய்ந்து கொண்டே போஜனம் பண்ணினார்கள். அந்த ஆகாரம் இயேசுவால் தயார் செய்யப் பட்டதாயிருந்தது. அப்பொழுது இயேசுவால் பேதுருவுக்கு மற்றுமொரு கட்டளை கொடுக்கப்பட்டது. “ என் ஆடுகளை மேய்ப்பயாக” என்று (யோவான் 21 : 15–17).

ராஜ்யத்தின் பணி மீன்களைப் பிடிப்பதும், ஆடுகளை மேய்ப்பதுமாயிருக்கிறது. கிறிஸ்து பரமேறுவதற்கு முன்பாக வெளிப்படையாகவே இவ்விதமாகச் சொன்னார். ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 28 : 18 – 20). ✝

## எது உறுதியான சபையைக் கட்டும் ?

- ஊ உறுதியான வேதாகம பிரசங்கம் மற்றும், போதனை
- ஊ முன்மாதிரியான தலைமைத்துவம்
- ஊ ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்தவ வாழ்வை வெளிப்படுத்த வேண்டும்.
- ஊ அங்கத்தினர்களின் அன்பும், அக்கறையும்
- ஊ இரக்கமுள்ள இருதயங்கள்
- ஊ ஊழிய வாஞ்சை

# நம் எஜமானுக்கு இணை யாருமில்லை

## No Match For Our Master

## Jerry. R. Kendall

இன்றைய நாட்களில் சாத்தானின் உண்மைத் தன்மையை மறுப்பது நவநாகரீகமாகி விட்டது. மேலும், பிரசங்கிமார்களில் சிலர்கூட சாத்தான் இருப்பதை மறுப்பது மட்டுமல்லாமல் அப்படியே அவன் இருப்பதை நம்பினாலும் அது நம்முடைய வாழ்க்கையில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும் சொல்கிறார்கள். இன்னும் சிலர், சாத்தான் அல்லது பிசாசு என்பது பயந்த மற்றும் நாகரீகமற்ற மனதின் ஆழத்தில் தோன்றும் ஓர் உருவம் என்று சொல்கிறார்கள். வேறுசிலரோ சாத்தானை கைகளில் ஒரு கவர்க்கோல் போன்ற ஆயுதத்துடன் சிவப்பு நிற ஆடை அணிந்திருக்கும் ஒருவனாக காட்சிப்படுத்துகிறார்கள். இந்த எண்ணங்களெல்லாம் தவறானவைகளாகவும், மனித இனத்தை ஏமாற்றுபவனின் உண்மைமுகத்தை தோலுரித்து காட்டுவதற்கு தடைகளாகவும் இருக்கின்றான.

இவ்வுலகில் சாத்தான் இருப்பது உண்மை, அவன் நம்மை வஞ்சிப்பதற்காக பல உருவங்களில் வருகிறான் என்பது உண்மை. மேலும், அவன் நம்மை எல்லாம் தேவனிடமிருந்து தூரமாய் அழைத்துச்சென்று நாசம் செய்வதற்காக நம் கண்களை (ஆவிக்குரிய ) குருடாக்கிப்போடுகிறான். அவன் பொய்களுக்குப் பிதாவும் (யோவான் 8:44) துன்மார்க்கனும், வெறுப்பினால் நிறைந்தவனும், தேவனுக்கும் எல்லோருக்கும் சத்துருவாகவும் இருக்கிறான். சாத்தான் ஆராதிக்கப்படவிரும்பி, சர்வ வல்ல தேவனுக்கு விரோதமாக தன்னை பின்பற்றுபவர்கள் கலகம் பண்ண வேண்டும் என்றும் விரும்புகிறான். அவனுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற நரகம் இல்லையென்று நாமெல்லாரும் நம்பவேண்டுமென்று அவன் விரும்புகிறான். அந்த எரிநரகத்தில் நாமெல்லாரும் அவனோடு இருக்கவேண்டுமென்றும் விரும்புகிறான் (மத்தேயு 25:41).

சாத்தான் நம்முடைய எதிராளி என்று தேவன் சொல்கிறார் (I –பேதுரு 5:8) அவன் நமக்கு விரோதமாக நின்று நம்மைப்பற்றி தவறான குற்றச்சாட்டுகளை ஏற்படுத்துகிறான். அவன் அழிக்கிறவனாகவும் (வெளி 9:1) தேவனுடைய வார்த்தையை சேதப்படுத்துகிறவனாகவும் இருக்கிறான். அவன் மோசம் போக்குகிறவனாக இருந்து ( வெளி 12:9) நம்மைப்பிடிக்க பல்வேறு தூண்டில்களைப் போடுகிறவனாய் இருக்கிறான்.

இருந்தபோதிலும் நம்மால் அவனை மேற்கொள்ள முடியும். ஆரம்பத்திலிருந்தே அவனுக்கு எதிரான யுத்தத்தைப் பற்றியும் அதன் முடிவைப்பற்றியும் தேவன் நமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார் [ஆதியாகமம் 3:15]. இவ்வுலகத்தின் பிசாசு தன் வல்லமையை நிரூபிக்க தேவனால் அனுமதிக்கப்பட்டபோது, அவன் எவ்வளவு தான் தன் வல்லமையைக் காட்டினாலும் அது நம் கர்த்தருக்கு ஒரு பிரச்சனையாகவே இருக்கவில்லை. இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு வெற்றி உண்டு [I– கொரிந் 15:57].

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக [I – கொரிந்தியர் 15:57,58].

## துன்மார்க்கர் ஏன் செழிக்கிறார்கள் ?

**எரேமியா 12 : 1 ; சங்கீதம் 73 : 5–12**

- தேவனுடைய இரக்கத்தையும், நீடிய பொறுமையையும் காட்டுவதற்கு [II பேதுரு 3: 9]
- நீதிமான்களுக்கு நன்மை உண்டாகும்படி [லுக்கா 16:9; நீதிமொழிகள் 13:22]
- துன்மார்க்கர் கோரமான முறையில் தூக்கி எறியப்படுவதற்கு ஆயத்தமாக்கப்படுகிறார்கள் [சங்கீதம் 37:34–38].
- நீதிமான்களின் விசுவாசத்தை சோதிப்பதற்காக [சங்கீதம் 73]

# எண்ணாகமச் சம்பவம்

## The Numbers Incident

**Tam Raynor**

**வ**னாந்திர யாத்திரையில் மோசேயின் சகோதரியாகிய மிரியாம் தன் குழந்தை தம்பியாகிய மோசே வளர்ந்து பெரியவனாகி மிகப்பெரிய தேசத்தை வழிநடத்துவதை பார்த்துக்கொண்டே வயதாகிவிட்டாள். அதேபோல் அவள் சகோதரனாகிய ஆரோன் இஸ்ரவேலின் மிகப்பெரிய ஆவிக்குரிய தலைவராக உருவெடுத்ததையும் அவள் கண்டு மகிழ்ந்தாள். ஆனால், வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் மிரியாம் தன் வயதுக்கேற்ற ஞானத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும், அங்கே அவள் ஒரு தவறான முடிவை எடுத்தாள். மிரியம் தன் சகோதரர் களைப் பார்த்து பொறாமைப்பட்டிருக்கலாம். மோசே சிறு குழந்தையாக இருந்த போது காப்பாற்றப்பட இவள் உதவியிருக்கிறாள். மிரியாம் ஜனங்களால் தீர்க்கதரிசி என்றழைக்கப்பட்டிருக்கிறாள். இவள் மோசே எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயை விவாகம் பண்ணின காரணத்திற்காக அவரிடத்தில் அதிருப்தியடைந்து கோபப்பட்டிருக்கலாம். அல்லது புதி தாக வந்த பெண் குடும்பத்தில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துவிடுவாள் என்று நினைத்திருக்கலாம். மோசே மீது மிரியாம் எரிச் சலடைவதற்கான முழுமையான காரணம் தெரியவில்லை. ஆனால், ஒரு வழியாக மிரியம் ஆரோனை சம்மதிக்கச்செய்து பாளையத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டாள். அக்குடும்பத்தில் மோசேதான் சிறு பையன், மிரியாமும், ஆரோனும் நூறு வயதைக்கடந்தவர்களாக இருந் தார்கள். இருந்தபோதிலும் அவர்கள் மோசேக்கு விரோதமாக பேச ஆரம்பித்து விட்டார்கள். எதிர்பாராதவிதமாக, கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடார வாசலில் நின்றார். தேவனாகிய கர்த்தர் வயதான ஆரோனையும், மிரியாமையும் அவர்களுடைய பொறாமை, முதுகுக் குப் பின்னால் பேசுதல், மற்றும் துரோகத்திற்காக கடுமையாக கடிந்து கொண்டார் (எண்ணாகமம் 12:1–15).

அந்தப் பொன்கன்றுகுட்டியை உருவாக்குகிற சம்பவத்தில், ஆரோனுக்கு முதுகெலும்பு இல்லாத காரணத்தால், அந்த தேவவிரோத செயல்களுக்கெல்லாம் மிரியாம் தலைவியாக இருந்தாள். தேவன் மிரி யத்தை குஷ்டரோகத்தினால் தண்டித்தார், மிரியாம் உறைந்த மழை யின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள். உடனே மிரியாமின் சகோதரர்கள் அவள் மீது இரக்கம் பாராட்டும்படி தேவனிடம் கெஞ்சி னார்கள். ஆனால், தேவனோ ஏழுநாட்கள் அவள் தண்டிக்கப்படவேண் டுமென்று சொன்னார் ! இங்கே தேவன் பொறாமை மற்றும் ஆவிக்கு ரிய துரோகத்தை எந்த அளவு அருவருக்கிறார் என்று வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

மிரியாமின் வாழ்க்கையில் அவளுடைய வயதும், நிலையும் தேவனுக்கு ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை . பாவத்திற்கும், தண்டனைக்கும் வயது வரம்பே இல்லை. இச்சம்பவத்தை மோசே பாவம் செய்த ஜனங்களுக்கு தேவன் என்னச் செய்தார் என்பதற்கு உதாரணமாக எழுதுகிறார். "நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே உங்கள் தேவனாகிய கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக் கொள்ளுங்கள்" (உபாகமம் 24:9). அன்பானவர்களே, நாம் எந்த வயதினராகயிருந்தாலும் பரவாயில்லை பாவத்தின் விளைவாக தேவன் நம்மைப் பிரிக்கும் நிலை நமக்கு வரவேண்டாம். ✝

---

## தேவன் நம்மை எப்படித் தேற்றுகிறார் ?

**தேவன் நம்முடைய பிரசன்னத்தினாலே நம்மைத் தேற்றுகிறார்**

பிதா (சங்கீதம் 139:5)

குமாரன் (மத்தேயு 28:18-20)

பரிசுத்த ஆவியானவர் (II கொரிந்தியர் 13:14)

**தேவன் தம்முடைய வார்த்தையினாலே நம்மைத் தேற்றுகிறார்**

( I தெசலோனிக்கேயர் 4:18 ; சங்கீதம் 119:49,50)

தேவன் தம்முடைய பரிசுத்தவான்கள் மூலமாக தேற்றுகிறார்

(II கொரிந்தியர் 7:6 ; I தெசலோனிக்கேயர் 5:14)

# ஆதாம்
## Adam
## Thomas Baxley

வேதாகமத்தின் முக்கிய காதாப்பாத்திரங்களைப் பற்றிப் படிக்கும் போது, வேதாகமத்தின் முதல் கதாப்பாத்திரமாகிய ஆதாமைப் பற்றிய வேதவசனப்பகுதியை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனால் நேரடியாக படைக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம்தான். ஏனென்றால், தேவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் ஜீவாத்து மாவானான். ஆதாம் முதல் மனிதன் என்னும் மேன்மையை மாத்திரம் பெற்றுக்கொள்ளவில்லை (ஏவாளோடு கூட) அப்பழுக்கற்ற உறவை தேவனோடு வைத்திருந்த முதல் மனிதன் என்னும் மேன்மையையும் பெற்றிருக்கிறான். கடைசியாக, ஆதாம் தன் மனைவியை தேவனிடத்தில் வழிநடத்தி இருவரும் தேவனுக்கு உண்மையாயிருக்கும் தன் கடமையில் தவறினான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆதாம், ஏவாளுடைய தோல்வியின் காரணமாக தேவனோடு மனிதனுடைய உறவு பாவத்தாலும், பிரிவாலும் சீர்கெட்டது . இதுவே எல்லாவற்றிற்குமான முடிவல்ல. முதல் ஆதாமில் இழந்துபோனது இரண்டாம் ஆதாமில் பெற்றுக்கொள்ளப்பட்டது அதாவது, இயேசு கிறிஸ்துவில் பெற்றுக்கொள்ளபட்டது. (ரோமர் 5:12-19). மெய்யான தேவகுமாரனாகிய கிறிஸ்துவில் ஜீவனும், உறவும் மீட்டுக்கொள்ளப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா ?**

*2014 ல் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி 92 சத வீத அமெரிக்கர்கள் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த ஓர் உண்மையான நபர் என்பதை நம்புகிறார்கள். இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தலைமுறையிலும் குறைந்து வருகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.*



வேதாகம கதாப்பாத்திரங்கள்

# பிரேதப் பெட்டியிலிருந்து பாடங்கள்

Lessons From a Coffin

**Patrick Morrison**



**யோ**சேப்பின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்கள் அவருக்கு தேவனிடத்திலிருந்த மாபெரும் விசுவாசத்திற்கு உதாரணங்களாக இருக்கின்றன. போத்திபாரின் மனைவி தன் ஆசைக்கு இணங்கும்படி யோசேப்பை வற்புறுத்திய போது அவர் அதற்கு இணங்காதபடி தன் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டார். ஏனென்றால், சோதனைக்கு இடங்கொடுத்தால் அது தேவனுக்கு விரோதமான பாவமாகிவிடும் என்பதை அவர் அறிந்திருந்தார் [ஆதியாகமம் 39:9]. யோசேப்பின் சகோதரர்கள் அவரை மிக மோசமாக நடத்திய போதும்கூட அவர்கள் மீது யோசேப்பு எப்படிப்பட்ட மனப்பான்மை கொண்டிருந்தார் என்பதை நினைத்துப் பாருங்கள். தேவன் மீது யோசேப்புக்கு இருந்த விசுவாசம் அவருடைய சகோதரர்கள் மீது அன்பையும், அக்கறையையும் கொள்ள காரணமாகியது [ஆதியாகமம் 50:19–21]. இருந்தபோதிலும் யோசேப்பு தன் மரணம் சம்மந்தமாக கொடுத்த கட்டளைப் போல் அவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்த எந்த சம்பவமும் அவருடைய வாழ்க்கையில் நடக்கவில்லை : அதாவது, தன் மரணத்திற்குப் பிறகு தன் எலும்புகளை தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின பூமிக்கு கொண்டு செல்ல வேண்டுமென்பதுதான் அந்தக் கட்டளையாக இருந்தது [ஆதியாகமம் 50:25–26]. யோசேப்பு தன் அடக்கம் சம்மந்தமாக கொடுத்த கட்டளையிலிருந்து நாம் அநேக பாடங்களை கற்றுக்கொள்ள முடியும்.

முதலாவது, யோசேப்பு இட்ட கட்டளை அவருடைய விசுவாசம் மங்கவில்லை என்பதைக் காட்டுகிறது. யோசேப்பு விக்கிரக ஆராதனையால் நிறைந்த தேசத்தில் இருந்தபடியால் அங்கே அவரை யாரும் அறியாதிருந்தபடியால் தேவன் மீது அவர் கொண்டிருந்த விசுவாசத்தை விட்டு விட்டு அவர் விரும்பியபடி செய்திருக்க முடியும். ஆனால், யோசேப்பின் விசுவாசம் அப்பஇருக்கவில்லை. யோசேப்பு தேவனுடைய ஜனங்களிடத்திலிருந்து தூரமாக இருந்தாலும் கூட,

அவர் தேவனைப் பிரியப்படுத்த தீர்மானித்திருந்தார். அத்தேசத்தில் இப்படி ஒரு நிலையை தேவனுக்காக எடுப்பதாக இருந்தாலும் கூட அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இதன் காரணமாகவே, யோசேப்பு தன் வாழ்க்கையில் நடந்த எந்த சம்பவமும், சூழ்நிலையும் தன் விசுவாசத்தை மங்கச்செய்ய அனுமதிக்கவில்லை.

இரண்டாவதாக, யோசேப்பு தன்னுடைய மரணம் சம்மந்தமாக இட்ட கட்டளை அவர் எகிப்திலிருந்தாலும்கூட அவருடைய இருதயம் கானானில் தான் இருந்தது. தான் சகித்துக் கொண்டிருந்த பாடுகள், எதிரான சூழ்நிலைகள் எல்லாம் தன் வாழ்க்கையின் முடிவல்ல என்பதை அறிந்திருந்தார். யோசேப்பு தன் விசுவாசக் கண்களால் அதரிசனமானவைகளைக் கண்டார்; அவர் தன் இருதயத்தில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்காக ஏங்கினார் (ஆதியாகமம் 12:1-3). அது எப்போது நடக்கும் என்று யோசேப்புக்கு தெரியாவிட்டாலும் கூட அது நடக்கும் என்று அவருக்குத் தெரியும். அது அப்படி நடக்குமென்று தேவன் வாக்குதத்தம் பண்ணினார், அது யோசேப்பின் இருதயத்தை திருப்தியாக்கியது. அவர் அந்நிய தேசத்திலே. ஒரு அந்நியனாக இருந்தாலும் கூட தான் ஒரு கானான் தேசத்துக் குடிமகன் என்பதில் உறுதியாய் இருந்தார்.

மூன்றாவதாக, யோசேப்பு தன்னுடைய மரணம் சம்மந்தமாக இட்ட கட்டளை நமக்கு பல காரியங்களை நினைவுப்படுத்துகிறது. இது தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். யோசேப்பின் பிரேதப்பெட்டி நாமெல்லாரும் மரிக்கும் தன்மை உடையவர்கள் என்பதை நினைவுபடுத்துகிறது. இது உண்மையாயிருந்தாலும் கூட யோசேப்பின் பிரேதப்பெட்டி இவ்வாழ்க்கைக்குப் பிறகு அடுத்த வாழ்க்கை நமக்கு உண்டு என்பதை நினைவுப்படுத்துகிறது. மேலும், இது இஸ்ரவேலர்களுக்கு எகிப்து தங்கள் நிரந்தர வீடல்ல என்பதை நினைவுபடுத்தியது அது போலவே, இப்பூமி நமக்கு சதமல்ல என்பதையும் நமக்கு நினைவுப்படுத்துகிறது. யோசேப்பின் பிரேதப்பெட்டி நாம் பொறுமையாயிருக்க வேண்டுமென்று நமக்கு நினைவுபடுத்துகிறது. யோசேப்பு தன் மரணம் சம்மந்தமாக இட்ட கட்டளையை நிறைவேறுவதற்கு 215 வருடங்கள் ஆனது. இஸ்ரவேல் புத்திரர் எப்போதெல்லாம் யோசேப்பின் கல்லறை வழியாக கடந்து செல்கிறார்களோ அப்போதெல்லாம் மேற்சொல்லப்பட்ட காரியங்கள் அவர்கள் நினைவுகளுக்கு வரும். யோசேப்பு வாழ்வின் பாடுகளை அசையா விசுவாசத்தோடு எதிர்கொண்டார். மரணத்தையும் கூட அவர் இதே விசுவாசத்தோடு எதிர்கொண்டார். நம்மெல்லாருக்கும் விசுவாசம் சம்மந்தமாக என்ன ஒரு மகத்தான

பாடம் இது ! யோசேப்பு தன் சகோதரரை நோக்கி : நான் மரணமடையப் போகிறேன்; ஆனாலும், தேவன் உங்களை நிச்சயமாய் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார் என்று சொன்னதுமன்றி: தேவன் உங்களைச் சந்திக்கும் போது என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான். யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான். அவனுக்குச் சுகந்த வர்க்கமிட்டு, எகிப்து தேசத்தில் அவனை ஒரு பெட்டியிலே வைத்து வைத்தார்கள் (ஆதியாகமம் 50:24–26). ✝

---

## பெருமையின் அபாயம்

- பெருமை ஜனங்களை கொடூரமான காரியங்களை செய்ய வைக்கிறது (எஸ்தர் 3:56)

- பெருமை அழிவைக் கொண்டுவருகிறது (எஸ்தர் 6:11; நீதிமொழிகள் 16:18)

- பெருமை ஒருவருடைய வெற்றியைக் குறித்து தவறான மதிப்பீட்டிற்குள் வழிவகுக்கிறது ( உபாகமம் 8:11,14)

- பெருமை ஒருவர் தன்னுடைய சாதனைகளைக்குறித்து தம்பட்டம் அடிக்க வைக்கிறது ( தானியேல் 4:30)

- பெருமை பழிவாங்குதலுக்கு வழி வகுக்கிறது (யாத்திராகமம் 14:5)

- பெருமை உலகத்தன்மைக்கு வழிவகுக்கிறது (I சாமுவேல்8:19;20)

- பெருமை ஒருவர் ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்க காரணமாகிறது (எசேக்கியேல் 28:45).

# யோசியா, தன் இளவயதில் தேவனை தேடினான்

## Josiah, He Sought GOD in His Youth

## John Stacy

"யோசியா" என்ற பெயரின் பொருள் "யெகோவா தாங்குகிறார்" அல்லது "ஆதரிக்கிறார்" என்பதாகும். இவனுடைய தகப்பன் மோசமான ராஜாவாகிய ஆமோன். ஆமோன் இரண்டு வருடம் எருசலேமை அரசாண்டு, தன் தகப்பனாகிய மனாசே செய்ததுபோல, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, விக்கிரகங்களை சேவித்து, அவைகளைப் பணிந்து வந்தான். ஆமோனின் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணி, ராஜாவை அவன் அரண்மனையில் கொன்றுபோட்டார்கள்.

இந்த யோசியா அரசாட்சி செய்த நாட்களில்தான் எரேமியா, செப்பனியா, நாத்தான் மற்றும் அவர்களைப்போன்ற தீர்க்கதரிசிகள் ஜனங்கள் மத்தியில் தீர்க்கதரிசனம் உரைத்ததாக நம்பப்படுகிறது. யோசியா யூதாவின் பதினாறாவது ராஜாவாக இருந்து 31 வருடங்கள் அரசாட்சி செய்தான்.

முதலாவது, நாம் இந்த யோசியா ராஜாவின் வாழ்க்கையைப் பற்றி படிக்கத் தொடங்கும் போது இவன் தன் வாலிப வயதில் தேவனைத்தேடினான் என்று காண்கிறோம்[ II நாளாகமம் 34:1 ல் யோசியா ராஜாவாகிறபோது எட்டு வயதாயிருந்து முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான் என்று வாசிக்கிறோம். அதேபோல் இரண்டாம் வசனம் " அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதைச்செய்து தன் தகப்பனாகிய, தாவீதின் வழிகளில் வலது இடது புறமாக விலகாமல் நடந்தான்" என்று சொல்கிறது.

நாம் II நாளாகாமம் 34:3 யை சற்று நெருக்கமாகப் பார்த்தால், அப்போது யோசியாவுக்கு வயது பதினாறு என்று பார்க்கமுடியும். அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில் தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும், எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்.

அடுத்த இரண்டு வசனங்களில் யோசியாவின் பக்தி வைராக்கியத்தைக் காண முடியும். " அவனுக்கு முன்பாகப் பாகால்களின் பலிபீடங்களை இடித்தார்கள் ; அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டி, விக்கிரகத் தோப்புகளையும், வார்ப்பு விக்கிரகங்களையும்,

வெட்டு விக்கிரகங்களையும் உடைத்து நொறுக்கி, அவைகளுக்குப் பலியிட்டவர்களுடைய பிரேதக்குழிகளின் மேல் தூவி, பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின்மேல் சுட்டெரித்து, இவ்வித மாய் யூதாவையும், எருசலேமையும் சுத்திகரித்தான்".

இரண்டாவதாக, நாம் யோசியா புத்தகத்தைப் பற்றி படிக்கும் போது யோசியா தன் 26 ஆம் வயதில் கர்த்தருடைய ஆலயத்தை பழுதுபார்த் தான் என்று பார்க்கிறோம். II– நாளாகமம் 34:8 ல் யோசியா சாப்பானை யும், மாசெயாவையும், யோவாக்கையும் கர்த்தரின் ஆலயத்தை பழுது பார்க்கும்படிக்கு அனுப்பினார் என்று பார்க்கிறோம். இங்கே கர்த்தரு டைய ஆலயம் அலட்சியபடுத்தப்பட்டது எவ்வளவு சோககரமானது. அத்தகைய சூழ்நிலையில் ஆலயம் பழுது பார்க்கப்படாமல் இருந்திருந் தால் அது முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கும் ! இன்று தேவனுடைய வீடு எப்படி இருக்கிறது ? தேவனுடைய வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது [I– தீமோத் தேயு 3:15]

ஆகாய் தீர்க்கதரிசி ஜனங்களிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைப் பற்றிப் பேசுகிறார். "இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ"? [ஆகாய் 1:4]. நம் அலட்சியத்தால் பல சபைகள் பாழாய்ப் போய்விட்டன. கர்த்தருடைய ஆலயம் பாழாய்க்கிடந்தது சோகமான காரியமாக இருந்தாலும் இதை விட மோசமான சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. அது என்னவென்றால், அது ஆசாரியனாகிய இல்க் கியா தொலைந்துபோன ஒன்றை கண்டெடுத்திருக்கிறான். அதாவது, மோசேயினால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமான புத்தகத்தை கண்டெ டுத்தான் [II– நாளாகமம் 34:14] இதைக்குறித்து சிந்தியுங்கள் ! வேதாக மம் அல்லது குறைந்தபட்சம் அதன் ஒரு பகுதி ஜீவனுள்ள தேவ னுடைய வீட்டிலே தொலைந்து போயிருக்கிறது. சிலர் அந்த ஆசாரி யன் முதல் ஐந்து ஆகமங்களைக் கண்டெடுத்தான் என்று சொல்கிறார் கள்! சிலர் அது உபாகம புத்தகம் என்று சொல்கிறார்கள். அப்போஸ்தல ருடைய நடபடிகள் 17 ஆம் அதிகாரத்தில் நாம் அறியப்படாத தேவ னைப்பற்றி வாசிக்கிறோம். நம்முடைய தலைமுறையில் நாம் அறியப் படாத சபையை அறிவோம். இங்கே ஜனங்கள் மத்தியில் அறியப்படாத புத்தகமாக வேதாகமம் இருந்திருகிறது.

மேற்சொல்லப்பட்ட சம்பவத்திலிருந்து நாம் எதை கற்றுக்கொள்கி றோம்? நம் ஜனங்கள் மத்தியில் வேதாகமம் அறியப்படாத புத்தகமாக இருக்கிறதா? நம்மில் எத்தனை பேர் அதைப் படிக்கிறோம்? அது என்ன போதிக்கிறது என்பது உண்மையாகவே நமக்குத்தெரியுமா?

யாரோ ஒருவர் இவ்விதமாகச் சொன்னார் "நமக்கு இப்போது தேவை அதிகமான வேதாகமப் பிரசங்கங்கள் அல்ல, நமக்கு ஏற்கனவே தெரிந் திருக்கிற வேதாகமத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்"! அதற்கு ஒரு ஆமென் சொல்வோமாக. நம்மில் பலர் சபைக்கு வேதாக மத்தைக் கொண்டு வருவதில்லை. நாம் ஞாயிறு வேத பாடங்களைப் படிப்பதில்லை. ஏனென்றால், ஞாயிறு பள்ளி என்பது கடந்தகால ஒன்றாக மாறிவிட்டது. நம் பிரசங்கியார்களில் பெரும்பாலானோர் வேத ாகமத்திலிருந்து அதிகமாக பிரசங்கிப்பதில்லை. சிறிது வேதப்பகுதி யையும், அதிகாமான கதைகளையும் வைத்துத்தான் பிரசங்கிக்கிறார் கள். அல்லது அநேகமாக நிகழ்கால உலக சம்பவங்களையும், ஒழுக்கரீ தியான காரியங்களையும், அரசியலையும் கலந்து பிரசங்கிக்கிறார்கள். மனித ஆத்துமாக்களை இரட்சிக்க நேர்மறையான சிந்தனை, ஆரோக்கியம் மற்றும் ஆசீர்வாத பிரசங்கங்கள் ஒன்றுக்கும் உதவாது. இரட்சிப்படைய சுவிசேஷத்திற்குப் பதிலாக இன்னொன்றை வைக் கவே முடியாது (ரோமர் 1:16; I- கொரிந்தியர் 1:18).

II- நாளாகமம் 34:18 ல் சம்பிரதியாகிய சாப்பான் அப்புத்தகத்தை ரா ஜாவுக்கு முன்பாக வாசித்தான். நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபோது அவன்தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு, கண்டெடுக்கப்பட்ட இந்த புத்தகத்தினுடைய வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய் எனக்காகவும் இஸ்ரவேலிலும், யூதாவிலும் மீதியானவர் களுக்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள் என்று கட்டளையிட் டான். ராஜா ஜனங்கள் தேவனுடைய வார்த்தையின்படி நடக்கத் தவறி யதால் தேவகோபாக்கினை அவர்கள் மேல் வந்தது என்று கலக்கம டைந்தான் (II-நாளாக 34:20) இந்த மனிதர்கள் தீர்க்கதரிசியாகிய செப் பனியாவினிடத்திற்கு செல்லவில்லை, எரேமியா தீர்க்கதரிசி ஆன தோத்தில் இருந்ததாக நம்பப்பட்டபடியால் அவர்கள் எரேமியாவினிட த்திலும் செல்லவில்லை. அவர்கள் எருசலேமில் வாழ்ந்த உல்தாள் என் னும் பெண்தீர்க்கதரிசியினிடத்தில் சென்றார்கள் (II- நாளாகமம் 34:22). அவள் ஜனங்களுடைய விக்கிரக ஆராதனையின் நிமித்தமாக தேவன் ஜனங்கள்மீது மிகப்பெரிய தீமையை கொண்டுவருவார் என்று சொன்னாள்.

பெண் தீர்க்கதரிசியாகிய உல்த்தாள் யோசியா ராஜாவை வெகுவாகப் பாராட்டி சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள். "இந்த ஸ்தலத்திற் கும். அதின் குடிகளுக்கும் விரோதமாக தேவன் சொன்ன அவருடைய வார்த்தைகளை நீ கேட்கையில், உன் இருதயம் இளகி எனக்கு முன் பாக நீ உன்னைத் தாழ்த்தி எனக்கு முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங் களை கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால்,

நானும் உன் விண்ணப்பத்தை கேட்டேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும், அடுத்த வசனத்தில் தேவன் "நான் இந்த ஸ்தலத்தின் மேலும், இதின் குடிகள் மேலும், வரப்பண்ணும் எல்லா பொல்லாப்பையும், உன் கண்கள் காணாதபடிக்கு நீ சமாதானத்தோடே உன் கல்லறையில் சேர்த்துக் கொள்ளப்பட, நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார் (வசனம் 28)

மூன்றாவதாக, இங்கே யோசியா ராஜா கர்த்தருடைய புத்தகத்தை ஜனங்களிடத்தில் வாசிப்பதை நாம் காணமுடியும். இது பஞ்சாங்கமாக இருந்திருந்தால் அதை வாசிப்பதற்கு பத்துமணி நேரம் ஆகியிருக்கும். பெரும்பாலான வேத வித்தகர்கள் அவர் உபாகமம் புத்தகத்தைத்தான் வாசித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். வேதாகமம் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் "கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புத்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான் என்று சொல்கிறது. இரண்டாவது, ராஜா தேவனோடு ஓர் உடன்படிக்கை செய்தான் என்று பார்க்கிறோம். அதாவது, ராஜாவாகிய தானும், தன் ஜனங்களும் அந்த நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியே நடந்துகொள்ளுவோம் என்று கர்த்தருடைய சந்நிதியிலே உடன்படிக்கை பண்ணி, எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படப் பண்ணினான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய அந்த தேவனுடைய உடன்படிக்கையின்படியே செய்தார்கள். யோசியா உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுப் பின்வாங்கினதில்லை (II– நாளாகமம் 34:29–33).

II – நாளாகமம் புத்தகத்தின் கடைசி அதிகாரங்கள் யோசியாவின் மரணத்தைப் பற்றி பேசுகிறது ( II– நாளாகமம் 35:20–24). இவ்வசனப்பகுதி எகிப்தின் ராஜாவாகிய நேகோ பாபிலோனியர்களோடு யுத்தம் செய்யும் படியாக கர்கேமிசிக்குப் போனான். ஏதோ ஒரு காரணத்துக்காக யோசியா ராஜாவும் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று நினைத்தான். இருந்தபோதிலும் எகிப்தின் ராஜா பாபிலோனியர்களோடு யுத்தம் செய்யும்படியாகத் தன்னிடம் அறிவித்ததாக சொல்லி யோசியா அந்த யுத்தத்திலிருந்து விலகியிருக்கும்படியாக கேட்டுக்கொண்டான். ஆனாலும், யோசியா ராஜா மாறுவேடமிட்டு அந்த யுத்தத்தில் பங்கெடுத்தான். வில்வீரர் யோசியாவின்மேல் அம்பெய்தார்கள். அதனால் யோசியாவுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவர் எருசலேமுக்கு கொண்டுபோகப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டார். யூதாவிலும், எருசலேமிலுள்ள யாவரும் யோசியாவுக்காக துக்கங்கொண்டாடினார்கள் (II– நாளாகமம் 35:25).

தன் குடும்பத்தினர் மோசமானவர்களாக இருந்தாலும் கூட ஒருவர் நல்லவராயிருப்பதற்கு இந்த யோசியா மிகச்சிறந்த உதாரணமாகும். யோசியா இளமையில் தேவனைத் தேடி இருக்கிறான். அவன் விக்கிரக ஆராதனையை முற்றிலுமாக அழித்தான். ஏனென்றால், அது தேவனுக்கு அருவருப்பாக இருந்தது, இருக்கிறது. அவன் தேவனுடைய வீட்டைக்கட்டி தேவனுடைய புத்தகத்திற்கு செவிக்கொடுத்தான். அவன்தன் முழு இருதயத்தோடும் தேவனுக்கு சேவை செய்தான். இருந்தபோதிலும் தன் வாழ்வின் கடைசிக் காலக்கட்டத்தில் முட்டாள்த்தனமான காரியத்தை செய்தான். கடைசி காலத்தில் அவர் தேவ சித்தத்தை செய்யத்தவறியபடியால் கொல்லப்பட்டான். ✝

---

## கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது ?

- குடும்பத்தில் – அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும்
- வியாபாரத்தில் – நேர்மையினாலும், கவனத்தாலும்
- சமுதாயத்தில் – தயவாலும், தாழ்மையினாலும்
- பாதிக்கப்பட்டவர்களிடத்தில் – கருனையாலும், இரக்கத்தாலும்
- பெலவீனர்களிடத்தில் – பொறுமையினாலும், உதவியினாலு
- துன்மார்க்கரிடத்தில் – நிதானத்தினாலும் தீமையை வெல்வதினாலும்
- தேவனிடத்தில் – அன்பாலும், கீழ்ப்படிதலினாலும்.

# ஏன் நல்லவர்களுக்கு மோசமான காரியங்கள் நடக்கிறது ?

## Why do Bad Things Happen To Good People ?

## Andy Robison

**ஏ**ன் நல்லவர்களுக்கு மோசமான காரியங்கள் நடக்கிறது ? இது காலகாலமாக கேட்கப்படும் கேள்வியாகவும், தேவன் இருக்கிறாரா என்பதற்கான விவாதத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாகவும் இருக்கிறது.

நாத்தீகர்கள் தேவன் ஒருசேர மூன்று குணாதிசயங்களையும் கொண்டிருக்க முடியாது என்று வாதாடுகிறார்கள். அதாவது, தேவனால் சர்வவல்லவராகவும், சர்வ ஞானியாகவும், சர்வ வியாபியாகவும் இருக்க முடியாது என்று வாதாடுகிறார்கள். உலகத்தில் பாடுகள் இருக்கிறபடியால் அந்த மூன்று குணாதிசயங்களில் குறைந்தபட்சம் ஒன்றிலாவது அவர் தவற வேண்டும். அதாவது, தேவன் பாடுகளை அறிந்து, அதைத்தடுக்க வல்லமை உடையவரானால், அவர் அதைத்தடுக்கும் அளவுக்கு அக்கறையுடையவராக இருக்க மாட்டார் அல்லது அவர் அதைத்தடுக்கும் அளவுக்கு அன்புடையவராகவும், வல்லமையுடையவராகவும் இருந்தால் அவர் பாடுகளைக்குறித்து அறிந்திருக்க முடியாது என்று வாய்க்கு வந்த படியெல்லாம் உளறுகிறார்கள் அந்த நாத்தீகர்கள். மிகப் பிரசித்தி பெற்ற அறிவாளிகளைக் கொண்ட அமெரிக்காவைச் சேர்ந்த IVY League அமைப்பிலிருந்து பக்கத்துத்தெருவில் வசிக்கும் அறிவு ஜீவிகள் வரை மக்கள் இவ்விதமான வாக்குவாதங்களை தேவன் இல்லை என்பதற்காக வைக்கிறார்கள். இதற்கு எப்படி பதிலளிக்க முடியும் ?

**முதலாவது**, தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கின போது எல்லாம் நல்லதென்று கண்டார் (ஆதியாகமம் 1:31). அவர் படைப்பில் எந்தத் தவறையும் செய்யவில்லை. ஏதேன் தோட்டத்தில் சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கலாம், ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று மனிதனுக்கு எச்சரிப்பு விடுக்கப்பட்டது ( ஆதியாகமம் 2:16,17). மனிதனுக்கு தெரிந்துகொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட அவன் முட்டாள்த்தனமாக தெரிந்துகொண்டபடியால் மரணமும், பாடுகளும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டன (ரோமர் 5:12-14).

மனிதனுடைய பாடுகளுக்கு பல காரணங்கள் உண்டு. ஆனால், எல்லாவற்றுக்கும் ஆதாரம் பாவம் என்பதை நாம் அறிந்து கொள்ளமுடியும். மனிதன் தன் சொந்த பாவத்துக்காகவும் பாடுபடலாம். ஆனால், எப்போதும் காரியம் இப்படியாக இருக்காது. சில வேளைகளில் இப்படியும் இருக்கும். யோபுவின் நண்பர்கள் அவரை மோசமான பாவியாக்க முயற்சித்தார்கள். அதாவது அவர்களுடைய பார்வையில் ஒருவர் பாடு அனுபவிக்கிறார் என்றால், அவர் ஏதோ பாவம் செய்திருக்கவேண்டும். அவருடைய நண்பர்களுள் ஒருவர் "உம்முடைய அக்கிரமத்திற்கேற்றபடி தேவன் உம்மைத் தண்டிக்கவில்லையென்று அறிந்து கொள்ளும்" என்று சொன்னான் (யோபு 11:6). சில சந்தர்ப்பங்களில் ஒருவருடைய பாவத்திற்கும் ஒருவருடைய பாடுகளுக்கும் சம்மந்தம் இருக்கிறது.

**இரண்டாவது**, சில நேரங்களில் மற்றவர்களுடைய பாவங்களினால் நாம் பாடுகளை அனுபவிப்பதற்கு சாத்தியம் இருக்கிறது. ஒரு குடிகார ஓட்டுநர் பயணித்துக்கொண்டிருக்கும் ஒன்றுமறியாத குடும்பத்தை இடித்துக் கொல்லலாம். இதன் மூலம் அக்குடும்பம் யாரோ ஒருவருடைய பாவத்தினால் பாடுபடுகிறது. இத்ததைய சந்தர்ப்பத்தில் ஜனங்கள் "இது அநியாயமாயிருக்கிறதே" என்று புலம்புவதை நாம் பார்க்கிறோம். ஆனால், மனிதனுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் உலகத்தில் காரியங்கள் இவ்விதமாகத்தான் நடக்கிறது. தேவன் விளைவுகளை எடுத்துப்போட்டால், தெரிந்துகொள்ளுதலையும் எடுத்துப்போடுவார். என் தெரிந்துகொள்ளுதலுக்கு விளைவுகளே இல்லையென்றால், அவைகள் தெரிந்துகொள்ளுதலாகவே இருக்க முடியாது.

இயற்கை விதிகள் நம் அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது. இயற்கை விதிகளை தேவன்தான் ஏற்படுத்தினார். அந்த இயற்கை விதிகளை அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்களை நிகழ்த்தும் போது மட்டும் நிறுத்திவைத்தார் ( யாத்திராகமம் 5-12;மாற்கு 16:20 எபிரெயர் 2:1-4 ) ஆனால், இத்தகைய அற்புதங்கள் எல்லாம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டன ( I- கொரிந்தியர் 13:8-13; அப்போஸ்தலர் 8:14-17)

**மூன்றாவது**, இவ்வுலகத்தில் பாவம் எங்கும் வியாபித்திருக்கிறபடியால் ஒருவர் பாடுகளை அனுபவிக்கலாம்.

பாவம் இவ்வுலகத்தில் பிரவேசித்தபிறகு பூமியின் பருவ நிலைகள் ஒட்டு மொத்தமாக மாறிவிட்டன. மரணமும், வியாதியும் உண்டாயின. நோவாவின் நாட்களில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்திற்குப் பிறகு பூமியின் தட்ப வெட்ப நிலைகள் தடம் புரண்டு, காலநிலையில் மிகப்

பெரிய மாற்றம் ஏற்பட்டதாகவும் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் உறுதியாகச் சொல்கிறார்கள். அதாவது, மனிதனுடைய அக்கிரமத்தினாலேதான் நோவாவின் நாட்களில் அந்த ஜலப்பிரளயம் ஏற்பட்டது. [ஆதியாகம் 6:5]. அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள் [II– பேதுரு 3:6]. மாற்றப்பட்ட உலகம் தான் புயல், வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சிக்கு வழிவகுத்திருக்கின்றன. வேறுவிதமாகச் சொன்னால் இயற்கைச் சீற்றங்களினால் ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் அனுதினமும் பாதிக்கப்படுகிறார்கள்.

இவைகள் எல்லாவற்றுக்கும் மத்தியிலும் தேவன் இருக்கிறார் என்பது எவ்வித கேள்விக்கும், சந்தேகத்துக்கும் இடங்கொடுக்கவில்லை என்பது தான் நிச்சயம். இவ்வுலகத்தின் வடிவமைப்பு காரணமும் விளைவும் போன்றவைகள் தேவன் இவ்வுலகத்தை தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்பதை உறுதிசெய்கின்றன. மேலும், எல்லாவற்றுக்கும் மேலாக பாடுகளைக் குறித்து தேவன் செய்யவேண்டியவைகளை மிகச் சரியாக செய்திருக்கிறார். அவர் இவ்வுலகத்திலிருந்து பாடுகளை எடுத்துப் போடவில்லை. ஏனென்றால், அது மனிதனுடைய தெறிந் தெடுக்கும் உரிமையை எடுத்துப்போடும். அது மாத்திரமல்ல, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பி நமக்காக பாடுகளை அனுபவிக்க அனுமதித்தார் [பிலிப்பியர் 2:5–7]. "அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டு" என்று கிறிஸ்து பட்ட பாடுகளைப் பற்றி நாம் வசனங்களைப் பார்ப்போம். இப்போது கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து இப்பூமியில் பாடு படுகின்ற ஒவ்வொருவருக்காக தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் [எபிரெயர் 2:18 ;7:25].

பாடுகள் என்பது உண்மையான ஒரு பிரச்சனையாகும். அதைத்தவிர்க்கவும், அகற்றவும் நம்மால் முடிந்தவரை காரியங்களை செய்வதில் எந்தத் தவறும் இல்லை. இருந்தபோதிலும், அதையும் மீறி நாம் பாடுகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தால் அது தேவனுடைய தவறல்ல. பாடுகளின் காரணமாக நாம் தேவனுடைய அன்பையும், அக்கறையையும் கேள்விகேட்க முடியாது. உண்மையில் பாடுகள் மூலமாக தேவன் " இரக்கங்களின் பிதா, சகலவிதமான ஆறுதலின் தேவன்" என்பதை நமக்குக்காட்டுகிறார் [II– கொரிந்தியர் 1:3].

✝

# மனைவியும், தாயும் வீட்டுக்கு வெளியே வேலை செய்து கொண்டு தேவனுக்குப் பிரியமாக இருக்க முடியுமா ?

## Can a wife and mother work outside the Home and Be Pleasing To God ?

### Rebecca Rushmore

**நா**ன் ஒரு பொறியியல் மாணவி அதாவது கணினி அறிவியல் படித்து வருகிறேன். ஒரு தேவனுடைய பிள்ளை ஆண் ஆதிக்கம் நிறைந்த கணினி துறையில் அடியெடுத்து வைக்கலாமா ? ஒரு இல்லத்தரசியாக இருந்து கொண்டு ஒரு நல்ல மனைவியாகவும், தேவன் எனக்கு பிள்ளைச் செல்வத்தைக் கொடுத்தால் ஒரு நல்ல தாயாகவும் இருக்க விரும்புகிறேன்.

மேற்சொல்லப்பட்ட வார்த்தைகள் இரண்டு வருடங்களுக்கு முன்பாக ஒரு பொறியியல் மாணவியால் எழுப்பப்பட்ட கேள்விகளாயிருக்கின்றன. வேறுசில இடங்களில் அந்த மாணவி கடந்த இரண்டு வருடங்களாக தான் பார்த்துவந்த வேலையைக்கூட தேவசித்தத்திற்கு கீழ்ப்படியும் ஆசையில் தான் விட்டுவிடத் தயாராக இருப்பதாக சொன்னாள். அந்த வார்த்தைகள் எல்லாம் இக்கட்டுரையில் பதிவு செய்யப்படவில்லை.

எல்லா மதசம்மந்தமான காரியங்களைப்போலவே தேவனுடைய சித்தத்தை நாம் தேவனுடைய வார்த்தையை படிப்பதன் மூலமாகவே அறிந்துகொள்ள முடியும் [II தீமோத்தேயு 2:15 ]. அந்த இளம் பெண்ணுக்கு வீட்டுக்கு வெளியே பெண்கள் வேலை செய்வதை குறித்த கேள்வி அநேகமாக தீத்து 2:5 வசனத்தை படித்ததினால் ஏற்பட்டிருக்கலாம். “தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும் தங்கள் புருஷருக்கு கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்கும் புத்திசொல்லு. இந்த [தீத்து 2:1-10] வசனங்களில் இடம் பெற்றிருக்கும் காரியங்கள் அப்போஸ்தலனாகிய பவுல் இளம் ஊழியரான தீமோத்தேயு சக கிறிஸ்தவர்களுக்கு என்ன அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று விரும்பினாரோ அவைகளால் நிரம்பிருக்கின்றன. இவ்வசனப்பகுதியில் ஆண்கள், பெண்கள், இளம் வயதினர், முதியோர் மற்றும் அடிமைகள் உட்பட எல்லோரும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் எனறு அறிவுறுத்தப்பட்டிருப்பதை கவனியுங்கள். பவுல்

அத்தகைய நடத்தைக்கான காரணங்களை இப்பகுதியில் கொடுக்கி றார். (வசனம் 1) ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகள், (வசனம் 4) தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு. (வசனம் 7) நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி; (வசனம் 8) எதிரியானவன் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப் படத்தக்கதாக; தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்க ரிக்கத்தக்கதாக (வசனம் 10).

தீத்து 2:4–5 வசனங்களின் மையக்கருத்து ஒரு பெண் வீட்டில் சேவகம் செய்யும் நிலையில்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. இவ் வசனப்பகுதியின் சந்தர்ப்பம் கிறிஸ்து தனக்குள் வாசம்செய்வதை ஒரு பெண் தன் நடத்தையின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதே (மத்தேயு 5:16; பிலிப்பியர் 2:15). ஒரு பெண் என்று எடுத்துக்கொண் டால் அவளுடைய பிரதான பணி வீட்டைப் பராமரிப்பதுதான். அதாவது, வீட்டுக் காரியங்களைக் கண்காணிக்க வேண்டும், பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும். இதன் பொருள் வீட்டுக்கு வெ ளியே எந்த ஒரு காரியத்திலும் பெண் ஈடுபடக்கூடாது என்றாகாது.

ஒரு நிமிடம் கீழ்காணும் வேதாகம உதாரணங்களை ஆழ்ந்து சிந் தித்துப்பாருங்கள். முதலாவது, நீதிமொழிகள் 31 ஆம் அதிகாரத்தின் குணசாலியான ஸ்திரீயைப் பற்றி வாசித்துப் பாருங்கள்.



குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார் ? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும். அவன் சம்பத்துக் குறையாது. அவள் உயி ரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்கு தீமையையல்ல, நன்மை யையே செய்கிறாள். ஆட்டு மயிரையும் சணலையும் தேடி தன் கைகளி னால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபாரக்

கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள். இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்கும் படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள். தன்னைப் பெலத்தால் இடைகட்டிக்கொண்டு, தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். தன் வியாபாரம் பிரயோஜனமுள்ளதென்று அறிந்திருக்கிறாள்; இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும்; தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப்பிடிக்கும். சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்கு தன் கரங்களை நீட்டுகிறாள். தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பிருக்கிறதால் தன் வீட்டாரினிமித்தம் குளிருக்குப் பயப்படாள். இரத்தினக் கம்பளங்களை தனக்கு உண்டுபண்ணுகிறாள். மெல்லிய புடவையும் இரத்தாம்பரமும் அவள் உடுப்பு. அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர்பெற்றவனாயிருக்கிறான். மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள். கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள் அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல் தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் புருஷனும் அவளைப்பார்த்து; அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு ; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான். சௌந்தரியம் வஞ்சனையுளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற! ஸ்திரீயே புகழப்படுவாள். அவள் கைகளின் பலனை அவளுக்குக்கொடுங்கள் ; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது.

நீதிமொழிகள் புத்தகத்தில் மேற்சொல்லப்பட்ட பெண் தான் செய்த வேலைக்காக புகழப்படுகிறாள். இப்பெண் குடும்பத்தில் உணவு, உடை, போன்றவைகளை மாத்திரம் கவனித்துக்கொண்டவளாக பார்க்கப்படவில்லை. அதைத்தாண்டி வீட்டுக்கு வெளியே பல வேலைகளில் அவள் ஈடுபட்டதை நம்மால் காணமுடியும். இந்த குணசாலியான ஸ்திரீ ஏழைகளின் தேவைகளைக் காண சமயம் கண்டுபிடித்தாள். மேலும், இவள் சில வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறாள், ஆடைகளை தயாரித்திருக்கிறாள், விற்றிருக்கிறாள் அவள் செய்த காரியங்களெல்லாம் தேவனுக்கும், அவளுக்கும், அவள் கணவனுக்கும் அவள் குடும்பத்துக்கும் கனத்தை கொண்டுவந்தன.

இரண்டாவது, அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:11–15 வசனங்களில் லீதியாள் என்னும் ஸ்திரீயை கவனியுங்கள்.

துரோவாவில் கப்பல் ஏறி சாமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயப்போலி பட்டணத்துக்கும் நேராய் ஓடி, அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும், ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து அந்தப்பட்டணத்திலே சில நாள் தங்கியிருந்தோம். ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடி வந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவள் எங்களை நோக்கி : நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்"

லீதியாள் வியாபாரம் செய்கிற பெண்ணாக இருந்தாள். இந்தப் பெண் தியத்தீரா பட்டணத்தை சேர்ந்தவளாக இருந்தாலும் பிலிப்பி பட்டணத்தில் வாழ்ந்தாள். லீதியாளின் சொந்தப்பட்டணம் இரத்தாம்பரத்திற்கு பேர்போன பட்டணமாயிருந்தது. இந்த ஊதா நிறத்தில் உண்டாக்கப்பட்ட ஆடைகள் பணக்காரர்களால் மாத்திரமே உடுத்தப்பட்டது. லீதியாளின் குடும்பத்தைப் பற்றிய விவரங்கள் வேதாகமத்தில் விரிவாக பதிவு செய்யப்படவில்லை. ஆனால், பவுலால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்திற்கு லீதியாளும் அவளுடைய வீட்டார் அனைவரும் கீழ்ப்படிந்தார்கள் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இங்கே லீதியாள் தான் செய்த வியாபாரத்திற்காக வேத வசனங்களில் எவ்விதத்திலும் கண்டிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் பவுலும், அவரோடிருந்தவர்களும், அவளுடைய வியாபாரத்தினால் கிடைத்த வருமானத்தினால் சிறப்பாக உபசரிக்கப்பட்டார்கள்.

வேதவசனங்களின்படி நாம் பார்க்கும்போது ஒரு பெண் வெளியில் ஒரு வேலையையோ, வியாபாரத்தையோ பார்த்துக்கொண்டு தேவனுக்குப் பிரியமாக இருக்கமுடியும் என்று அறிந்து கொள்கிறோம். இருந்தபோதிலும், வெளியில் வேலை பார்க்கும் எல்லாப்பெண்களாளும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய முடியாது என்பது உண்மைதான். வீட்டிற்கு வெளியே வேலை செய்ய விரும்பும் பெண்கள் சில காரணிகளை கருத்தில் கொள்ளவேண்டும்.

முதலாவது, ஒரு பெண்ணால் தெரிந்தெடுக்கப்படும் வேலை தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிராக இருக்கிறதா ? தேவனுடைய கட்டளைகளுக்கு எதிராக இல்லாத பட்சத்தில் கிறிஸ்தவர்கள் எல்லோருமே நாட்டுச் சட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமென்று வேதவசனம் கட்டளையிடுகிறது [ரோமர் 13:1–7] [அப்போஸ்தலர் 5:29]. கிறிஸ்தவ அறநெறிக்கு எதிரான எந்த ஒரு வேலையிலும் ஒரு கிறிஸ்தவ ஆணோ அல்லது பெண்ணோ ஈடுபடக்கூடாது [மது விற்கும் இடம், தயாரிக்கும் இடம், கேளிக்கைகூடம்] அதேபோல் நம் வெளிச்சம் சமுதாயத்தில் பிரகாசிக்கத் தடையாக இருக்கும் எந்த ஒரு செயலிலும் நாம் ஈடுபடக்கூடாது [மத்தேயு 5:16].

இரண்டாவது, ஒரு பெண் வெளியே வேலை பார்த்தால் அது சபைக் காரியங்களில் ஈடுபடத் தடையாக இருக்கிறதா அல்லது வீட்டுப்பொறுப்புகளை நிறைவேற்றத் தடையாக இருக்கிறதா என்பது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டுமென்று கட்டளையிடுகிறார் [ யோவான் 4:24;எபிரேயர் 10:25]; அதே போல் தேவன் நாம் உலகெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார் [மத்தேயு 28:19,20]. ஒரு பெண் வீட்டைவிட்டு வெகுதூரம் போய் வேலைபார்த்து அது அவளுடைய வீட்டின் ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான தேவைகளை சந்திப்பதற்கு தடையாக இருக்குமானல் அவள் அந்த வேலையை தெரிந்தெடுக்கக்கூடாது.

மூன்றாவது, ஒரு பெண் வெளியே வேலைசெய்ய வேண்டுமென்றால், அவள் திருமணமான பெண்ணாக இருந்தால் அவளுடைய கணவனுடைய அனுமதியைப் பெறவேண்டும். ஒரு பெண் வீட்டு பொறுப்புகளை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல் தன் கணவனுக்கும் கீழ்ப்படிய வேண்டும் [தீத்து 2:5] [எபேசியர் 5:22,23]. ஒரு வீட்டில் கணவனும், மனைவியும் இணைந்து பொறுப்புகளை நிறைவேற்றினாலும் கூட, வீட்டின் தலைமைப் பொறுப்பை தேவன் கணவனுக்குத்தான் கொடுத்திருக்கிறார் [எபேசியர் 5:22–33]. மனைவி வெளியே போய் வியாபாரம் செய்வதிலோ அல்லது வேலை பார்ப்பதிலோ கணவனுக்கு உடன்பாடு இல்லையென்றால் அந்த வேலை தவிர்க்கப்படவேண்டும்.

ஒரு பெண் தேவனுடைய வார்த்தையை ஜாக்கிரதையாக, நேர்மையாக ஆராய்ந்து தேவனுடைய வார்த்தை அனுமதித்தால், அவள் வெளியே வேலை பார்த்துக்கொண்டு தேவனுக்குப் பிரியமாக இருக்க முடியும். இதைக்குறித்த அதிக தகவல்களை அறிய நீதிமொழிகள் 31 மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 16 ஆம் அதிகாரத்தை படிக்கவும்.

# கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால், அது முக்கியமானதா ?

If Christ is not Risen, Does it matter ?

## Ardron Hinton

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக்குறித்து சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காக பொய்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோம். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் (I கொரி 15:13–20).

### கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால்......

- 1. நம் விசுவாசம் விருதா
- 2. நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்
- 3. கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே ( நித்திய ஜீவன்இராது)
- 4. நம் நம்பிக்கையும் விருதா
- 5. இது தேவனை பொய் சாட்சியாக்குகிறது. இது கிறிஸ்துவின் ஊழியத்தை தோல்வியாக்குகிறது(யோவான் 3:12).

மேற்சொல்லப்பட்ட எல்லா எதிர்மறையான வாக்கியங்களும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் நேர்மறையான வாக்கியங்களாக மாற்றப்பட்டிருக்கிறபடியால் தேவனுக்கு நன்றி.

### இப்போது கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கிறார்...

இவ்வாக்கியத்திற்கு ஆதரவாக உறுதியான ஆதாரமுள்ளது. நாம் இதை விசுவாசிப்பது அந்த அளவு முக்கியமானதா? ஆம், இது மிக முக்கியமானது.

**இரட்சிப்பு**

# கிறிஸ்து தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி...

Christ is the Author of Salvation to All Who Obey Him

## Sunny David

இவ்வுலகில் பெரும்பாலானோர் ஒருவர் எவ்வித கீழ்ப்படிதலின் செயல்பாடுமின்றி விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப் படுகிறார் என்று நம்புகிறார்கள். அது மட்டுமல்லாமல், பெரும்பாலான பிரசங்கி மார்கள் ஒருவர் இரட்சிக்கப்பட அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதுதான் என் றும் போதிக்கிறார்கள். **விசுவாசத்தினாலே மாத்திரம்** என்னும் உபதே சம் தான் மிகவும் ஆரோக்கியமான, வசதியான உபதேசம் என்று சொல் லப்படுகிறது. ஆனால், வேதாகமம் கிறிஸ்து "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் கா ரணராகி" என்று போதிக்கிறது. கீழ்ப்படிவது என்பது ஒருவர் என்ன செய்யும்படியாக எதிர்பார்க்கப்படுகிறாரோ அதைச் செய்வதாகும். "அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற் றுக்கொண்டு தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" [எபிரெயர் 5:8,9].

இயேசு கிறிஸ்து பிதாவின் ஒரே பேரான குமாரனாக இருக்கிறார் [யோவான் 1:18] இந்த சிலாக்கியமே கிறிஸ்து பிதாவுக்கு கீழ்ப்படியாம லிருக்க விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று நினைத்திருக்கலாம். ஆனால், அப்படி இல்லை. கிறிஸ்து தம்முடைய பாடுகளினாலே கீழ்ப் படிதலை கற்றுக்கொண்டு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட் சிப்பை அடைவதற்குக் காரணரானார். கிறிஸ்து மரணபரியந்தம் அதா வது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மை தாமே தாழ்த்தி மனித இனத்துக்காக உண்டு பண்ணின இரட்சிப்பு, வெறும னே கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் மீது பொழிந்தருளப்படுவதில்லை [ யாக்கோபு 2:24]. ஒருவர் இரட்சிக்கப்பட கிறிஸ்துவைப் பற்றிய உபதேச அறிவு மாத்திரம் போதாது, அவருடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட் சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொல்லவில்லையா? [மாற்கு 16:16].

என்னில் விசுவாசம் வைத்து, என்னை சொந்த இரட்சகராக ஏற் றுக்கொள்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று கிறிஸ்து சொன் னாரா? இல்லையே. அவர் அப்படிச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட

காரியத்தை வேதாகமத்தில் எங்கும் கிறிஸ்துவோ, அவருடைய அப்போஸ்தலர்களோ போதிக்கவில்லை. விசுவாசத்தினாலே மாத்திரம் என்னும் உபதேசத்தை போதித்து, விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்கள் நியாயத்தீர்ப்பு நாளிலே "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்" என்று ஒரு கூட்டத்தைப்பார்த்து சொல்வார் அல்லவா அங்கே காணப்படுவார்கள் [மத்தேயு 7:23].

அக்கிரமம் என்றால் என்ன ? கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமலிருப்பதுதான் அக்கிரமம். கிறிஸ்துவுக்கென்று ஒரு பிரமாணம் உண்டு. அவர் தம் அப்போஸ்தலர்கள் மூலமாக கொடுத்த பிரமாணம் தான் புதிய பிரமாணம் [யோவான் 14:25-26; 16:12-13; மத்தேயு 18:18] என்னை ஆண்டவரே ! ஆண்டவரே ! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன? [லுக்கா 6:46]. ஒருவர் யாருக்கு செவிக்கொடுக்க வேண்டும்? பிரசங்கியாருக்கா அல்லது கிறிஸ்துவுக்கா ? இரட்சிப்பு, பாவமன்னிப்பு போன்றவைகளெல்லாம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு கிடைக்கிறது [அப்போஸ்தலர் 2:38 ரோமர் 6:3-4].

சிலர் ஆபிரகாமின் உதாரணத்தைக் காட்டி அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 4:1-3 வசனங்களில் எவ்வித கிரியைகளுமில்லாமல் விசுவாசத்தினாலே மாத்திரம் நாம் நீதிமானாக்கப்படுவதை போதித்ததாக நம்புகிறார்கள். யாக்கோபு ஆசிரியர் இதைக்குறித்து இவ்விதமாக எழுதுகிறார். " நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சி செய்து கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் ; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று : அவன் தேவனுடைய சிநேகிதனெனப்பட்டான்" [யாக்கோபு 2:21-23]

இங்கே யாக்கோபு பவுலோடு முரண்படவில்லை. ரோமர் 4 ஆம் அதிகாரத்தில் ஆதியாகமம் 15:6 யை மேற்கோள்காட்டுகிறார் "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்." ஆனால் யாக்கோபு, ஆபிரகாமின் விசுவாசம் எப்போது நீதியாக எண்ணப்பட்டது என்பதைக் காட்டுகிறார். ஆபிரகாம் தன் குமாரனை பலியாக செலுத்த அந்த பலிபீடத்தில் வைத்தபோதுதான் அவருடைய விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது. ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் என்று அழைக்கப்பட்டு அவருடைய விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டாலும், அவர் தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்து தன் ஒரே குமாரனை பலிசெலுத்த முற்பட்டபோது தான் அவருடைய விசுவாசம் பூரணமானது. தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிப்பதற்காகத்

தான் அவருடைய ஒரே குமாரனாகிய ஈசாக்கை பலியிடும் படி கட்டளையிட்டார் (ஆதியாகமம் 22:1–13). ஆபிரகாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தபோது தேவன் ஆபிரகாமைப் பார்த்து, " நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதியாகமம் 22:12). இங்கே கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், சிலர் போதிப்பதுபோல் ஆபிரகாம் விசுவாசத்தினாலே மாத்திரம் நீதிமானாக்கப்பட்டிருந்தால் தேவன் அவருடைய விசுவாசத்தை சோதிப்பதற்கு அவசியமே இருந்திருக்காது. இங்கே உண்மை என்னவென்றால், ஆபிரகாம் சோதனை அல்லது பரீட்சையில் வெற்றி பெறும்வரை அவர் நீதிமானாக்கப்படவில்லை. ஆபிரகாம் தான் நீதிமானாக்கப்பட தேவனை விசுவாசிப்பது மட்டுமல்லாமல், தேவனுடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தான். இச்சம்பவம் ஒருவர் விசுவாச பரீட்சையை எதிர்கொள்ளாமல் வெறுமனே விசுவாசம் வைத்தால் மாத்திரம் போதுமானது என்னும் உபதேசம் தவறானது என்பதைக்காட்டுகிறது.

இங்கே பரீட்சை என்னவென்றால், கிறிஸ்து சொன்னதுபோல் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்பதாயிருக்கிறது (மாற்கு 16:16). மேலும், ஆபிரகாமின் விசுவாசம் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்ததினாலே பூரணமாயிற்று என்பதை புரிந்துகொள்வதற்கு ஏன் சிரமப்படுகிறார்கள் என்று புரியவில்லை. வேதாகமமே "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு" என்று சொல்கிறது (எபி5:8,9 : பிலிப்பியர் 2:8–9) தேவன் தம்முடைய கிருபையினாலே இயேசுவை சிலுவையில் மரணத்தை ருசிபார்க்கும்படி அனுமதித்தார் (எபிரெயர் 2:9) அதை நம் கர்த்தர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார் (மத்தேயு 26:39; II கொரிந்தியர் 5:21). கிறிஸ்துவே இந்த ஒட்டுமொத்த உலகத்தின் கிருபாதார பலியாக இருக்கிறார் (I யோவான் 2:2;4:10). இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் ஆதாரமாயிருக்கிறார். ஆனால், இந்த இரட்சிப்பு அவருக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே ; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.

நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல; அவர் நம்மிடத்தில அன்புகூர்ந்து. நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (I யோவான் 2:2;4:10). இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் ஆதாரமாயிருக்கிரார்.

### இரட்சிப்பு

## கிறிஸ்தவனாக ஆவது எப்படி ?

How to Become a Christian?

**Royce Frederick**

பச்சிளங்குழந்தைகளிடத்திலும், சிறு குழந்தைகளிடத்திலும் பாவமில்லை (எசேக்கியேல் 18 : 20;மத்தேயு 18:1-4;19:14). அவர்களால் சரி - தவறு, நன்மை - தீமை போன்றவைகளுக்கு இடையில் உள்ள வித்தியாசத்தை அறிய முடியாது.

குழந்தைகள் வளரும்போது, எது சரி, எது தவறு போன்றவற்றை புரிந்து கொள்ளும் நேரம் வரும். ஒருவர் தவறானதை (தேவனுடைய சித்தத்திற்கு எதிரானதை) செய்யத் தெரிந்து கொள்ளும்போது அந்த நபர் பாவம் செய்கிறார். இவ்வுலகில் பாவமே செய்யாத எந்த ஒரு மனுஷனோ, மனுஷியோ வாழ்ந்ததில்லை. "எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி" என்றுள்ளது. (ரோமர் 3:23).

பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது. "இதோ இரட்சிக்கக்கூடாத படிக்குக் கர்த்தருடைய கைகுறுகிப் போகவுமில்லை : கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை, உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது : உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது ( ஏசாயா 59:1,2) மனிதனுடைய பாவங்கள் இப்பூமியில் அவன் வாழும் போதே நீக்கப்படவில்லையென்றால் அவனுடைய ஆத்துமா என்றென்றும் தேவனிடத்திலிருந்து பிரிந்து நித்திய ஆக்கினையை அடையும். "பாவத்தின் சம்பளம் மரணம் : தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23 ).

நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ளவேண்டுமென்றால், நாம் பாவமில்லாதவர்களாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். எந்த ஒரு மனிதனாலும் தன் பாவங்களைத் தானே நீக்க முடியாது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மாரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:8)

இயேசு கிறிஸ்து ஒருவரே இப்பூமியில் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தார். ஆனால், நமக்குப் பதிலாக நம் பாவங்களுக்காக அக்கோரக்குருசில் தொங்கினார். "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார் ; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் [I பேதுரு 3:18 ]. இந்த இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் நன்மையை ஒருவர் எப்படி பெற்றுக் கொள்ள முடியும் ?

### கேள்விப்பட வேண்டும்

ஒரு பாவி சுவிசேஷத்தை கேள்விப்பட வேண்டும். சுவிசேஷம் என்பதற்கான பொருள் நற்செய்தி என்பதாகும். கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அயாமையையும் சுவிசேஷத்தினாலே, வெளியரங்கமாக்கினார் [II-தீமோத்தேயு 1:10]. சுவிசேஷம் கிறிஸ்துவின் பிறப்பு மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுலுதலைப் பற்றிய உண்மைகளை உள்ளடக்கியதாகும்

### விசுவாசித்தல்

ஒரு பாவி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். " தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" [யோவான் 3:16]. இங்கே குமாரனை விசுவாசிப்பவன் என்பது வெறுமனே இயேசு தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்வதை குறிக்காது. அதேபோல் ஒருவர் தன் மனதில் மாத்திரம் விசுவாசித்து, அவருக்கு ஒருபோதும் கீழ்ப்படியவில்லையென்றால் அந்த நபர் இன்னும் இழந்து போன நிலையில் தான் இருப்பார். "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கைப் பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" [யோ 12:40,43].

### மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் என்பது மனதில் ஏற்படுகின்ற மாற்றமாகும்.

அது பாவத்திலிருந்து திரும்பி, நீதியை நோக்கி திரும்பும் ஒரு தீர்மான மாகும், "…. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக் கிறார்" (II – பேதுரு 3:9).

**அறிக்கையிடுதல்.**

மனந்திரும்பிய ஒரு பாவி இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறிய பிறகு பேதுரு செய்த முதல் பிரசங்கத்தில் பேதுரு "ஆகையினால் நீங் கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவ ரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள்" என்று சொன்னார் (அப்போஸ்தலர் 2:36 ). நாம் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரேமர்10:10). அந்த எத்தியோப் பிய மந்திரி, "**இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரரென்று விசுவாசிக்கிறேன்**"என்றார் அப்போஸ்தலர் 8:37).

**ஞானஸ்நானம்.**

பாவத்தில் இருக்கும் ஒருவர் சுவிசேஷத்தை கேள்விப் பட்டு, விசு வாசித்து, மனந்திரும்பி அறிக்கையிட்டபிறகு பாவ மன்னிப்பிற்ககாக ஞானஸ்நானம் பெறவேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நா னம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசுவாசியாதவனோ ஆக்கி னைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16). ஞானஸ்நானப்படுத் துதல் என்பது தண்ணீருக்குள் மூழ்குதல் என்று பொருள்படும். மேலும், ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுவதா கும். அப்போஸ்தலனாகிய பவுல் ஏற்கனவே சுவிசேஷத்திற்கு கீழ்ப்ப டிந்தவர்களுக்கு எழுதும் போது இவ்விதமாகச் சொன்னார். " கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடை ய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர் களா" ? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந் து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நா னத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோ மர் 6:3,4). ஒரு பாவி தண்ணீருக்குள் மூழ்கி பாவ மன்னிப்புக்காக இயே சு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறும் போது தன் பா வங்கள் மன்னிக்கப்பட்ட பெருமூச்சோடு தண்ணீரிலிருந்து வெளியே வருகிறார். அந்த நபர் மனப்பூர்வமாக கீழ்ப்படிந்திருந்தால் (ரோமர் 6:17) தேவனுடைய கிருபையால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும்.

பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவன் குறிப்பாக கொடுத்த கட்டளைகளை மீறினவர்கள் மிகப்பெரிய பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டார்கள். நாதாபும், அபியுவும் தேவன் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள் அதன் விளைவாக அவர்கள் தேவனால் அடிக்கப்பட்டார்கள் [ லேவியராகமம் 10:1,2] ஆனால், இந்த நாட்களிலே தேவன் அந்தவிதமாக யாரையும் தண்டிப்பதில்லை. இருந்தபோதிலும், நியாயத்தீர்ப்பு நாள் வருகிறது, புதிய ஏற்பாட்டின் கீழ் வாழும் மக்கள் கிறிஸ்துவின் வழிகளைத் தள்ளினால் பழைய ஏற்பாட்டிற்கு கீழ்ப்படியாதவர்களைவிட அதிக தண்டனையை அனுபவிப்பார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது [எபிரெயர் 2:1-4]

நான் தேவனோடு சரியாக இருக்க விரும்புகிறேன். நீங்களும் அப்படியிருக்க விரும்புகிறீர்களா ? என் கீழ்ப்படிதலினால் மாத்திரமே நான் பரலோகத்திற்குப் பாத்திரவான் என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட கீழ்ப்படிதல் மிகவும் அவசியமாயிருக்கிறது [எபிரெயர் 5:8,9]. ஓர் எளிய வசனப்பகுதி என் நினைவுக்கு வருகிறது "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே [ எபிரெயர் 9:27]. தேவ கிருபை நம் பாவங்களை மன்னிக்கிறபடியினால், தேவனுக்கு கீழ்ப்படியவும், அவருக்கு சேவை செய்யவும் நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்யவேண்டும். ✝

---

## ஒரு நிமிடம் ஒதுக்கலாமே

நின்று நீங்கள் காண்கின்ற புதியவரிடம் ஹலோ என்று சொல்லி சில வார்த்தைகளைப் பேசுவதற்கு.

வியாதியாயிருக்கிற ஒருவருக்கு அல்லது குடும்ப அங்கத்தினரை இழந்து போன ஒருவருக்கு ஆறுதல் கடிதம் எழுதுவதற்கு.

மழலை மொழியில் ஒரு குழந்தை உங்களிடம் எதைச் சொல்ல முயற்சிக்கிறதோ அதைக் கவனிக்க பிரச்சனைகளை மறந்து மற்றவர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த நல்ல காரியங்களைப் பார்ப்பதற்கு.

தாழ்வு மனப்பான்மை உடைய ஒருவரையோ அல்லது கவலை மற்றும் சோர்வாக காணப்படுகிற ஒருவரையோ உற்சாகப்படுத்துவதற்கு.

செயலில் கிறிஸ்தவம்

# ஆசிரியரின் செயல்பாட்டுப் பை

Teacher's Activity Bag

## Bonnie Rushmore

எல்லா கிறிஸ்தவர்களாலும் வெளிநாடுகளுக்குப்போய் தேவனைப்பற்றி போதிக்க முடியாது. நிதி சார்ந்த மற்றும் குடும்பப் பொறுப்புகள், சரீரப் பிரச்சனைகள் போன்றவைகள் ஒருவரைத் தன் குடும்ப சூழ்நிலைகளைத்தாண்டி வெளிநாடுகளுக்குச் செல்ல பெருந்தடைகளாக இருக்கின்றன. இருப்பினும், ஒட்டுமொத்த உலகிற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் பொறுப்பு நமக்கு இருக்கிறது (மத்தேயு 28 : 18-20) சிலர் வெளிநாட்டு ஊழியங்களுக்குச் செல்கிறார்கள், சிலர் தங்கள் ஆதரவைத் தெரிவிக்கிறார்கள்.

தேவன் எல்லா கிறிஸ்தவர்களும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகள் மற்றும் வாய்ப்புகளின் அடிப்படையில் அவருக்கு சேவை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் (மத்தேயு 25:15-30 ). வேத வசனங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் சேவை செய்யும் பொறுப்பு இருக்கிறது என்று போதிக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவனுக்கென்று செய்ய வேண்டிய வேலை உண்டென்றும், ஒரு கிறிஸ்தவரால் ஒரே ஆளாக எல்லாவற்றையும் செய்ய முடியாதென்றும் கற்றுக் கொண்டோம்.

இந்தியா மற்றும் பர்மா போன்ற நாடுகளுக்கு நாங்கள் சமீபத்தில் பயணித்த போது அங்கே பிராந்திய சபைகளில் தேவைகள் இருந்ததை அறிந்து கொண்டேன். அதாவது, அங்கே பெண்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் பாடம் நடத்த பாடமோ, அதற்கு உதவும் உபகரணங்களோ இல்லாதிருந்ததைக் கண்டேன். அதேபோல் சிறு பிள்ளைகளுக்கு வேதபாடவகுப்புகள் நடத்துவதற்கான பயிற்சியும் அவர்களுக்கு இல்லாதிருந்தது. வெளிநாட்டு ஊழியங்களில் ஈடுபட்டிருக்கும் சிலர் சிறுபிள்ளைகளுக்கு பாடம் நடத்துவது எப்படி என்று பாடத்திட்டங்களை வடிவமைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கே பாடத்திட்டங்கள் இல்லை.

சிறு பிள்ளைகள் வகுப்பை நடத்த விரும்பும் பெண்களுக்கு உதவும் வகையில் ஏற்கனவே பிராந்திய சபை செய்யும் பணிக்கு கூடுதலாக ஆசிரியரின் **செயல்பாட்டுப் பையை** தயாரித்து அதை வெளிநாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு பையிலும் கீழ்க்காணும் பொருள்கள் இடம் பெற்றிருக்கும் :



1. ஒரு பெரிய வேதாகம கதைப் புத்தகம்

2. ஒரு வேதாகம கதைப் புத்தகம் வண்ணம் தீட்டும்படி படங்களுடன்.

3. கலர் பென்சில் பாக்கெட்.

4. மார்க்கர் பேனாக்கள்.

5. பாடங்களை போதிக்கும் குழந்தைகள் வேதாகமப் பாடல்கள்; முடிந்தால் ஒரு பென்டிரைவில் பாடல்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.

6. வேதாகம கதைகளை உள்ளடக்கிய வேதாகமப் பாடங்களை நடத்த திருப்பு விளக்கப்படம்.

7. திருப்பு விளக்கப்படத்தில் போதிக்க பாடங்களுக்கான தலைப்புகள் மற்றும் வாக்கியங்கள்.

மேற்சொல்லப்பட்ட பொருள்கள் எல்லாவற்றையும் ஒரு பெரிய சணல் பையில் வைத்துக்கொண்டால் வெளிநாட்டு பயணங்களுக்கும் எளிதாக இருக்கும், பிராந்திய சபையில் உள்ள சகோதரிகள் பயன்படுத்துவதற்கும் எளிதாக இருக்கும். எங்கள் அடுத்த பயணத்தில் குழந்தைகளுக்கான வேதபாட வகுப்பை நடத்துவதற்கான முக்கியத்துவத்தைப் பற்றி அநேக பாடங்களை தயார் செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இப்பாடத் திட்டங்களை பெண்கள் மத்தியில் நடத்தும்போது வகுப்பின் முடிவில் விருப்பமுள்ள பெண்களுக்கு ஆசிரியரின் செயல்பாட்டுப் பையை கொடுப்பது சிறப்பாயிருக்கும். உலக முழுவதிலுமுள்ள இழந்துபோன ஆத்துமாக்களிடத்தில் இத்திட்டத்தைக் கொண்டு செல்ல விருப்பமுள்ளவர்களாக இருக்கிறீர்களா ?

## செயலில் கிறிஸ்தவம்

## தனிநபர் ஊழியம், அதன் அவசரம் !

Personal Evangelism, The Urgency of if !

தொடர்புகள் மட்டும் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதில்லை. ஒரு கிறிஸ்தவன் இயேசு கிறிஸ்துவின் போர்ச்சேவகனாயிருக்கிற படியால் அதீத உற்சாகத்துடனும், ஆக்ரோசத்துடனும் இருந்து கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துகிறான். ஒரு கிறிஸ்தவன் என்னும் நிலையில் நாம் தைரியமாகவும், அதீத உற்சாகத்துடனும் இருந்து கிறிஸ்தவக் கடமையை ஆற்றுவது மிக நன்று. ஒரு கிறிஸ்தவனுடைய பிரதான கடமை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதாகும் ; ஒரு கிறிஸ்தவர் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராயிருக்கிறார்[I பேதுரு 2:21] நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவிக்க வேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது [II தீமோத்தேயு 2:3]. நாம் சட்டத்தின்படி மல்யுத்தம் பண்ணுகிறவர்களாயிருக்க வேண்டும்[வசனம் 5]. கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாகப் போராட வேண்டும் [யுதா 3]. இந்தக் காரியங்களெல்லாம் எப்போது செய்யப்படவேண்டும் ? ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரம் மாத்திரம் அல்ல, எப்போதுமே.

வீடு என்பது ஓர் அருமையான இடம். அங்கேதான் ஒருவரையொருவர் சிறந்த முறையில் அறிந்து கொள்ளமுடியும். கிறிஸ்தவர்கள் அந்நியரை உபசரிக்க நாடுகிறவர்களாக இருக்க வேண்டும் [ரோமர் 12:13]. உபசரிப்பு என்பது கிரேக்க மொழியில் " Philoxenia" என்றழைக்கப்படுகிறது. இதன் பொருள் " அந்நியர்களுக்கான அன்பு" என்பதாகும். ஒருவர் மற்றவரிடத்தில் கிறிஸ்துவைப் போதிப்பதை விட சிறந்த முறையில் எப்படி அன்புகூர முடியும்? நம் ஆராதனையில் பார்வையாளர்களாக கலந்து கொள்பவர்கள் விசுவாசிகளாக மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. நாம் வசிக்குமிடத்திற்கு யாராவது புதிதாக வந்து வசித்தால் அவர்கள் வியாதியில் இருக்கும்போது நாம் போய் அவர்களை, சந்தித்தால் அவர்களும் விசுவாசிகளாக மாற வாய்ப்பிருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் போர்க்களமே இவ்வுலகம்தான். நாம் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு நல்ல காரியம் தேவனுடைய ஜனங்கள் ஒரு மிகப் பெரிய சபையை உருவாக்கும் அளவுக்கு தேவனால் எதிர்பார்க்கப்படுவதில்லை. கர்த்தருடைய கட்டளையான பிரதான கட்டளையை கருத்தில் கொண்டால் அதுவே போதுமானது [மாற்கு 16:15].

சத்தியம் போதிக்கப்படும்போதும், அதற்காக உத்தரவு சொல்லப்படும் போதும் பேலிக்சைப்போல் சிலர் நிராகரிப்பார்கள் [அப்போஸ்தலர் 24:24–25] சிலர் அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்கள். பெந்தெகொஸ்தே நாளிலே ஜனங்கள் செய்ததுபோல "அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" [ அப்போஸ்தலர் 2:41]. கர்த்தருடைய பணியைக் குறித்து கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் அதீத உற்சாகமும், ஆசையும் இருந்தால் சபை வளர்வதை நம்மால் காணமுடியும். ✝

---

## விழித்திருங்கள்

உன் பக்தி வாழ்க்கையில் நீ உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் தான், எதிராளியாகிய பிசாசு தீவிரமாய் திட்டமிடுகிறான். " தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்" [I பேதுரு 5:8]

## மாட்டோம்


வானம் எப்போதும் தெளிவாக இருந்தால் நாம் சூரியப் பிரகாசத்தை அதிகமாக விரும்ப மாட்டோம். அதேபோல், நாம் கண்ணீரே வடித்ததில்லையென்றால் புன்னகையின் மதிப்பை நாம் ஒருபோதும் உணர்ந்துகொள்ள மாட்டோம்.

# நரகம் இல்லையென்றால், பரலோகம் எனும் பேர்கொண்ட இடம் இருக்க முடியுமா ?

IF There is no Hell, Can There be a place Called Heaven ?

## Raymond Elliot

இப்போது என்னோடு கூட சேர்ந்து சிந்தியுங்கள். நரகம் என்று ஒன்று இல்லையென்றால் என்னால் வேதாகமத்தை நம்ப முடியாது. ஏனென்றால், பரிசுத்த வேத வாக்கியங்களில் நரகம் என்பது உண்மையாகவே இருக்கின்ற இடமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், வேதாகமம் நம்பத்தகுந்த ஒன்றாக இல்லையென்றால் ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டிக்கவில்லை. அதேபோல், ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது'' என்று வேதாகமம் அறிவித்தாலும் கூட, என்னால் தேவன்பேரில் விசுவாசம் வைக்கமுடியாது [II தீமோத்தேயு 3:16 ] மேலும், அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அற்புதமாக எழுதியிருந்தாலும் கூட என்னால் விசுவாசிக்க முடியாது. "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது ". "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் " [II பேதுரு 2:20–21]. I கொரிந்தியர் 2:10–12 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் தான் தேவ ஆவியைப் பெற்றிருப்பதாகச் சொல்கிறார்.



நரகம் என்று ஓர் இடம் இல்லை யென்றால் அதை வேதாகமத்தில் வேறெந்த நபரைக்காட்டிலும் அதிகமாக குறிப்பிட்டிருக்கும் ஒருவரை நான் எப்படி விசுவாசிக்க முடியும் ? அதேபோல் புதிய ஏற்பாட்டில் நரகம் என்னும் வார்த்தை 12 முறை இடம் பெற்றிருக்கிறது.

யாக்கோபு புத்தகத்தில் நாவு அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது என்று வாசிக்கிறோம். மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷப் புத்தகங்களில் நரகம் என்னும் வார்த்தை பதினொரு முறைகள் இடம் பெற்றிருக்கிறது. மேலும், எரிநரகத்தின் மகன் மத்தேயு 23:15 போன்றவைகளையும் நாம் காணமுடியும். நரகம் மற்றும் இது போன்ற வெளிப்பாடுகளை யார் பயன்படுத்தினார் தெரியுமா ? நரகம் என்று ஓர் இடம் இல்லையென்றால் இயேசு கிறிஸ்து என்னும் நபரை நான் எப்படி விசுவாசிக்க முடியும் ? ஏனென்றால், அவர்தான் இந்த பயங்கரமான இடத்தைப்பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து நரகத்தைப் பற்றிப் பேசியதை நாம் விசுவாசிக்க வில்லையென்றால் ''நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமா யிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென் றைக்கும் மரியாமலும் இருப்பான் ; இதை விசுவாசிக்கிறாயா என்றார் (யோவான் 11:25-26) இவ்வசனத்தை நாம் எப்படி விசுவாசிக்க முடியும்? இயேசு அழகான மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத் தத்தங்களை (யோவான் 14:1-3) வசனங்களில் சொல்லியிருக்கிறார்.'' " உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக ; தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்'' (யோவான் 14:12) அதன் பின்பு அவரில் விசுவாசம் வைத்து அவருக்காக தங்கள் ஜீவனைக் கொடுத்தவர்களுக்கான அழைப்பு இதோ, "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் ( மத்தேயு 25:34)

நரகம் என்னும் பயங்கரமான இடம் ஒன்று உண்டு என்னும் வேதாகம உண்மையை நிராகரித்து அப்படி நரகம் எதுவும் இல்லை என்று போதித்தால், அதன் பின் விளைவு எப்படி இருக்கும் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா நண்பர்களே! இயேசு கிறிஸ்து

நம்முடைய பாவங்களுக்காக மரித்தபடியினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். தேவனுடைய பெரிதான கிருபையால் இவ்வாழ்க்கை முடிந்த பிறகு மீட்கப்பட்ட எல்லோரோடும் பரலோகத்தில் என்றென்றும் வாழும்படியான விலையேறப் பெற்ற வாக்குத்தத்தம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மில் ஒருவர் கூட மரித்து இந்த பயங்கரமான இடத்திற்குப் போவது தேவனுக்கு சித்தமல்ல.

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் [II பேதுரு 3:9]

✝

---

கிறிஸ்தவர்கள் இப்பூமிக்குரிய அரசாங்கத்தோடு இடைபடும்போது தேவனுடைய அறிவுரையின்படி அதைச்செய்ய ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சரி, நாம் என்ன செய்ய வேண்டும் ? நன்மை செய்ய வேண்டும். அரசாங்கத்திற்கு ஒழுங்காக வரி செலுத்த வேண்டும். கனத்திற்குரியவர்களுக்கு கனத்தை கொடுக்கவேண்டும். அதேபோல் பயப்பட வேண்டியவர்களுக்கு பயப்பட வேண்டும் சுருக்கமாக சொல்லப்போனால் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும்.

# ஆரோக்கியமான உபதேசம்

## Sound Doctrine

‘‘நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு (தீத்து2:1 )

‘‘ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் (I பேதுரு 4:11).

| | நாம் சொல்லக்கூடாது | நாம் சொல்ல வேண்டும் |
|---|---|---|
| 1. | கிறிஸ்துவின் சபை மக்கள் | கிறிஸ்தவர்கள், தேவனுடைய பிள்ளைகள் (அப்போஸ்தலர் 11:26;26:28) |
| 2. | கிறிஸ்துவின் சபை உபதேசம் | வேதாகம உபதேசம், சத்தியம் – (II யோவான் 9:11; யோவான் 8:32) |
| 3. | கிறிஸ்துவின் சபை போதிக்கிறது | வேதாகமம் போதிக்கிறது கலாத்தியர் 1:6–9 |
| 4. | சபையின் அதிகாரம் | கிறிஸ்துவின் அதிகாரம் மத்தேயு (28:18–20) |
| 5. | அவர் கிறிஸ்துவின் சபையை சேர்ந்தவர் | அவர் கிறிஸ்தவர் |
| 6. | எங்கள் நிலையை நாங்கள் அவருக்குப் போதிக்கிறோம் | நாங்கள் அவரோடு தேவனுடைய வார்த்தையை படிக்கிறோம் |
| 7. | கிறிஸ்துவின் சபை உபதேசம் மற்றும் நடைமுறை காரியங்களில் எல்லாம் சரியாக இருக்கிறது | வேதாகமம் சரியாக இருக்கிறது. நாங்கள் அதன் போதனைக்கு இசைவாக இருக்கத்தக்க முயற்சி எடுக்கிறோம் |
| 8. | சபைக்கு கொடுக்கிறோம் | கர்த்தருக்கு கொடுக்கிறோம் |
| 9. | சபையை விட்டு வெளியேறுகிறோம் | கர்த்தரை விட்டு வெளியேறுகிறோம் |
| 10. | இரட்சிக்கப்பட சபையில் சேருங்கள் | சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து சபையில் சேர்த்துக்கொள்ளப்படுங்கள் (அப்போஸ்தலர் 2:47) |

| | நாம் சொல்லக்கூடாது | நாம் சொல்ல வேண்டும் |
|---|---|---|
| 11. | எங்கள் சபை ; என்சபை | கர்த்தருடைய சபை (மத்தேயு 16: 18) |
| 12. | வாக்களித்து சபையில் சேர்ந்துக் கொள்ளுங்கள் | கர்த்தர் ஒருவரை சபையில் சேர்க்கிறார் அப்போஸ்தலர் 2:47 |
| 13. | ரெவரெண்ட் பட்டம் | கிறிஸ்து பதவி பட்டங்களைக்குறித்து எச்சரிக்கிறார் (மத்தேயு 23:4-12) |
| 14. | Father அல்லது தந்தை என்னும் பட்டம் | "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள் ; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்". (மத்தேயு 23:9) |

**வேண்டாமே ஒத்தி வைத்தல்**

வேத வசனங்களை கேட்க ஒத்தி வைக்கிறவர்
மனமாற்றம் அடையும் வாய்ப்பை ஒத்திவைக்கிறார்

மனமாற்றத்தைத் தவிர்ப்பவர் இரட்சிப்பின்
சிலாக்கியத்தை ஒத்தி வைக்கிறார் ஆனால்

இரபசிப்பிற்குள் வராதவர்களால் நியாயத்தீர்ப்பின் நாளில்
நித்திய நரகத்தை ஒத்திவைக்க முடியாது

## கவனியுங்கள்

நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் ( லூக்கா 6:18)

திறந்த மனதோடு கவனியுங்களள் (I தெசலோனிக்கேயர் 2:13)

ஆராய்ந்து பார்க்கும் மனதோடு கவனியுங்கள் (அப்போஸ்தலர் 17:11)

கீழ்ப்படியும் மனதுடன் கவனியுங்கள் (அப்போஸ்தலர் 22:16)

# நீங்கள் பாடலில் எப்படி ஆராதிக்கிறீர்கள் ?

How Do You Worship in song?

## Day Ton Keesee

சபையில் ஆராதனையின் போது சகோதரர்கள் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், ஞானப்பாட்டுகளையும் பாடும்போது வேறுபட்ட நிலைகளில் பிரதி கிரியைகள் வெளிப்படுவதை நாம் காணமுடியும். அந்த அமைதியான அம்மா பாடல் பாட வாயைத் திறப்பதே இல்லை. இன்னும் சொல்லப்போனால், பாடலில் பொதிந்திருக்கும் பொருளை உணர்ந்துகொள்ள அதின் மேன்மையை அறிந்து கொள்ளப் பாடல் புத் தகத்தைக்கூட திறப்பதில்லை. குழப்பமான அந்த சகோதரர் கிறிஸ்து வுக்குள் வந்து இரண்டு மாதங்கள் ஆகிறது. அவர் பாடல் வரிகளை நன் றாக உச்சரிக்கலாம். ஆனால், வேதாகமப் பதங்களைக் குறித்து அவ ருக்கு எந்தப் புரிந்து கொள்ளுதலும் இல்லை. அதேபோல் பாடலில் இடம்பெற்றுள்ள உவமை மற்றும் உருவகம் போன்ற சொல்லலங்கா ரத்தைப் பற்றி அந்த நபருக்கு எந்தப் புரிதலும் இல்லை. இந்த நபரால் நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் என்னும் பவு லின் மாதிரியைப் பின்பற்ற முடியாது [ II கொரிந்தியர் 14:15]. ஆனால், மறு முனையில் பாடல்களை நூறுதடவைக்கு மேல் பாடி பாடல்களில் பரிச்சயமடைந்த ஒரு சகோதரன் இருதயத்தில் கர்த்தரைப்பாடி கீர்த்த னம் பண்ணுகிறகாரியத்தில் தோல்வி அடைந்தார்[எபேசியர் 5:19]. இந்த நபரை இரண்டு மணிநேரம் கழித்து இன்று ஆராதனையில் என் னென்ன பாடல்கலெல்லாம் பாடப்பட்டது என்று கேட்டால் அவரால் சொல்லமுடியாது. சபையில் ஒரு சகோதரிக்கு சங்கீத ஞானம் அதிக மாக உண்டு, நல்ல குரல் வளமும் உண்டு. ஒவ்வொரு பாடலின் சர ணங்களையும் சரவெடி போல் வெடித்துத் தள்ளுவார். ஆனால், சங்கீ தங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒரு வருக்கொருவர் புத்திசொல்லுங்கள் என்னும் பவுலின் வார்த்தைகளை அவர் பொருட்படுத்துவதேயில்லை [எபேசியர் 5:19 கொலோ 3:16]. இன்னும் ஒருவர் உண்டு அவர் தனக்கு விருப்பமான பாடலை பாட லில் வழிநடத்துபவரிடம் பாடும்படியாக கேட்டுக்கொண்டார் [ஆனால் அதற்கு அவர் இணங்கவில்லை] எனவே, இவர் பாடலை தன் வாயில் முணுமுணுக்கத் தொடங்கினார். இவர் ஆவியோடும் பாடுவேன் என் னும் வசனத்தின்படி செய்யத் தவறினார் [I கொரிந்தியர் 14:15] மேற் சொல்லப்பட்ட ஆய்வறிக்கையில் நீங்கள் யாராக இருக்கிறீர்கள் ?

# நாம் வாழ்க்கையில் செய்யும் எல்லாமே ஆராதனை ஆகுமா ?

## Is Everything We do in Life "Worship"

## Kevin L.Moore

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியிலிருந்த பரிசுத்தவான்களுக்கு எழுதின நிருபத்தின் பன்னிரெண்டாம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். "அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்"என்று. இங்கே, "இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்னும் வாக்கியம் கிரேக்க பாஷையில்" " Ten Logiken Latreian hamon" என்று இடம் பெற்றிருக்கிறது. இந்த வாக்கியம் ஆங்கிலத்திலும், தமிழிலும் பலவிதமாக மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதில் எந்த மொழியாக்கம் இவ்வாக்கியத்தின் உண்மையானபொருளைக் கொடுக்கிறது?

மூலமொழியாகிய கிரேக்க மொழியில் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள மதசம்மந்தமான சேவை அல்லது கடமை என்று தான் இருக்கிறது. இங்கே ஆராதிப்பது அல்லது சாஷ்டாங்கமாய் ஒருவருக்கு முன்பாக விழுவது என்று பொருள்படும் கிரேக்க பதமான "Proskuneo" பயன்படுத்தப்படவில்லை. பவுல் இந்த ரோமர் 12:1ல் "Proskuneo" அதாவது தமிழில், ஆராதனை செய்தல் என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. உண்மையில் பவுல் "Proskuneo" என்னும் கிரேக்க வார்த்தையை ரோமர் நிருபத்தில் எங்குமே பயன்படுத்தவில்லை. பவுல் "Proskuneo" [தொழுதுகொள்ளுதல் ] என்னும் பதத்தை [அப்போஸ்தலர் 24:11] மற்றும் [I – கொரிந்தியர் 14:25] போன்ற வசனங்களில் மாத்திரமே பயன்படுத்துகிறார். வேதாகம அடிப்படையிலான ஆராதனை "Proskuneo" கருத்துடனும், கவனத்துடனும், நோக்கத்துடனும், மரியாதையுடனும் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் [யோவான் 4:20–24].

தொழுகை அல்லது ஆராதனையின் நோக்கம் அப்போஸ்தலர் 24:11 ல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பவுல் தான் தொழுதுகொள்ளும்படியாக எருசலேமுக்குப் போனதாக சொல்கிறார். வெளிப்படையாகவே, ஆராதனை என்பது நோக்கத்துடன் செய்யும் ஒரு செயலாகும். ஒருவரால் நிச்சயமாகவே நோக்கமின்றியோ அல்லது தற்செயலாகவோ ஆராதிக்க முடியாது.

நாம் செய்கிற எல்லாவற்றிலும் தேவனுக்கான சேவை இருந்தாலும் கூட [ரோமர் 12:1; கொலோசெயர் 3:17] வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொன்றும் ஆராதனை ஆகிவிடாது. [உதாரணமாக செய்தித்தாளை வாசிப்பது, தூங்குவது, தொலைக்காட்சி பார்ப்பது போன்றவைகள் ]. நாம் தேவனை ஆராதிக்கும் நோக்கத்துடன் நேரத்தையும், கவனத்தையும் ஒன்றினைத்தல் வேதாகம வழிமுறைகளுடன் நாம் அப்படிச் செய்வோமாக [I- கொரிந்தியர் 11:17-29; 14:12-19;16:1-2]. ஆனால், எல்லாவற்றிலேயும் தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களாக இருப்போமாக.

ஆதிதிருச்சபையில் சீஷர்கள் " அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாயத் தரித்திருந்தார்கள்" [அப்போஸ்தலர் 2:42]. இதுவே இன்றைய சபைகளுக்கு மிகச்சிறந்த மாதிரியாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் தாம் சத்திய ஆவியானவரை அவர்களிடத்தில் அனுப்புவதாகவும் அவர் வந்து சகல சத்தியத்திற்குள்ளும் அப்போஸ்தலர்களை வழி நடத்துவதாகவும் வாக்குத்தத்தம் பண்ணினார் [யோவான் 16:13]. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டு செய்தியை வேதவாக்கியங்களில் எழுதினார்கள் [எபேசியர் 3:5]. அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தை மிஞ்சி நாம் போகக்கூடாது என்று நமக்கு பல எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன [II தீமத்தோயு 2:2-5].

ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் ; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்.

எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த்தேவன் மகிமைப்படும்படியே செய்யக்கடவீர்களாக அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக [ I பேதுரு 4:11].

சுவிசேஷம் உண்மையாகவே நம்முடைய ஜீவியங்களில் சுவாசிப்பதாகவும், ஜீவிப்பதாகவும் இருந்தால் :

# உயரமாக வளர்தல்
## Growing Tall
## **Joslyn Ransubhag**

பெரிய உறுதியான மரத்தைப் போல் வளருவது என்பது
கோடைகால தென்றலால் வருடப்பட்டு
பெலவீனமான கிளைகள் இளங்காற்றினால் அசைந்து
எல்லோரும் பார்க்கத்தக்க நிமிர்ந்து நிற்பது தான்.

நல்ல நிலத்தில் உறுதியான வேர்களைக்கொண்டு
மென்மையான தண்டுகளைக் கொண்டு
அழகான கலைகளைக்கொண்டு கண்கவர் காட்சி அளித்து
கிளைகளுடனும், முளைகளுடனும் உயர்ந்து நிற்கிறது.

காட்டில் உள்ள உயரமான மரங்களில்
பசுமையான இலைகளை உடைய நீ தான் கொள்ளை அழகு
எல்லாப் பறவைகளும் உன்னுள் கூடுகட்டி மகிழ்கிறது
மக்கள் நிழல் தேடி உற்சாகத்துடன் உன்னிடத்தில் வருவார்கள்

கர்த்தருக்குள் உயரமாக வளருவது என்பது
செழிப்பான நிலத்தில் ஊன்ற கட்டப்படுவதாகும்
பலமான காற்று நம் வழியில் வீசினாலும் கூட
அது நம்மை அசைத்துப் பார்ப்பதில்லை

வார்த்தை எனும் வேர்களால் நாம் போதிக்கப்படும்போது
நம் வாழ்வு செழித்தோங்குவதில் எந்த ஆச்சரியமும் இல்லை
நம் வாழ்க்கை உயரமான மரத்தைப்போல் செழித்தோங்கும் போது
நம் அபரிதமான கனிகளைப் பற்றி எல்லோரும் பேசுவார்கள்

# 5 நிமிட வேத பாடம்

## தேவ ஞானம்

**Paula Bates**

1. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் _______________ சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல _______________ காண்பிக்கக்கடவன் (யாக்கோபு 3:13)

2. உன் _______________ நீ ஞானமுள்ளவனாயிருக்குபடி ஆலோசனையைக்கேட்டு, __________ ஏற்றுக்கொள் (நீதிமொழிகள் 19:20).

3. __________ உன் இருதயத்தில் பிரவேசித்து அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், _______________ உன்னைப் பாதுகாக்கும். அதினால் நீ துன்மார்க்கனுடைய _______________ மாறுபாடு பேசுகிற மனுஷனுக்கும் (நீதிமொழிகள் 2:10–18).

4. ஞானி தன் _______________ மேன்மை பாராட்ட வேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம். ஐசுவரியவான் தன் _______________ குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம் : மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று _______________ சொல்லுகிறார் ; இவைகளின் மேல் _______________ என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 9:23,24).

5. ஆ ! தேவனுடைய ஐசுவரியம், _______________ அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது. அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள் அவருடைய _______________ ஆராயப்படாதவைகள் (ரோமர் 11:33).

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

‘ திருமறை ஆசான் ’
‘ கிருபையுள்ள வார்த்தை ’
‘ வேர்டு ஆப் கிரைஸ்ட் ’

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385